www.tamilarangam.net

සරිනිහර්
'SARINIHAR

# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**சக்கரவர்த்தினி!**


வடக்குக் குறுநிலமும் வளர்பயிரும் செந்நீரும்
முடக்கெழுதித் தந்து முறியாக - இடக்கின்றி
ஆண்டு அனுபவிநீ என்றவகைக் குண்டாமோ
ஈண்டோர் ஈகைத் திறம்?

-ஈழமோகம்

இதழ் - 141 பெப்.26 - மார்ச் 11, 1998 விலை ரூபா 10.00



## அஷ்ரப் - பௌஸி : தொடரும் முறுகல்





## மலையகம் : தொண்டாவின் காட்டிக்கொடுப்பு!


## முஸ்லிம்கள் : இனிச் செய்ய வேண்டியது என்ன?





## அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை: நரகத்திற்கு எழுதப்பட்டவரின் கதை!

## ஈராக் : ஊடாடும் யுத்தம்!



## மட்டக்களப்பு: மீண்டும் வெள்ளை வேன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## திருமலை கொலையாளி யார்?

திருகோணமலை ஈ.பி.டி.பி. அலவலகம் பெப். 21ந்திகதி சனிக்கிழமை இரவு ஆயத பாணிகளால் தாக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தாக்குதல் கராண மாக தெருவில் நின்ற பாடசாலை மாணவனொருவர் அநியாயமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்.

இந்த அலுவலகம் 1996 கடைசிப் பகுதியில் ஒரு தடவை தாக்குதலுக்குள்ளானது. இத்தாக்குதலுக்குப் பாதுகாப்புத் தரப்பே காரணமாக இருந்தது. தாக்குதல் இடம் பெற்ற வேளையில் கட்சி அலுவலகத்தில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் இருந்திருக்கிறார்கள். பிறகு விசாரணைகள், சமாளிப்புகள் என்று முடிந்து விட்டது.

இப்போது நடைபெற்ற தாக்குதல் தமிழர்களைத் தமிழர்களே தாக்கியழிக்கும் ஒரு செயலாகவே நடந்திருக்கிறது. நேரம் இரவு 7.30 மணியிருக்கும். மோட்டார் சைக்கிளொன்றில் வந்த இரண்டு இளைஞர்கள் இத்தாக்குதலில் ஈடுபட்டிருக்கிறார்கள். உரப்பையொன்றில் கொண்டு வரப்பட்ட துப்பாக்கியை எடுத்து ஈ.பி.டி.பி. அலுவலகக் காவலரணை நோக்கிச் சுட்டிருக்கிறார்கள். துப்பாக்கிச்சூடு ஆரம்பித்தவுடன் காவலரணில் இருந்தவர் கீழே இறங்கி விட்டார். இதனால் அவர் தப்பித்துக் கொண்டார்.

வெளிக்கதவுகள் திறக்கப்படவில்லை. தெருவில் நின்றே சுட்டிருக்கிறார்கள். சற்று நேரத்துக்குள் கிரனைட் ஒன்றும் கட்சி அலுவலக வளவுள் வீசப்பட்டிருக்கிறது. கண்ணாடிகள் நொறுங்கிப் போயிருக்கின்றன. பொலிசார் ஸ்தலத்துக்கு வந்த பின்னரே கதவுகள் திறக்கப்பட்டன. அலுவலகக் கதவுகளைத் திறக்காமல் உள்ளே இருந்தனரே தவிர எந்த எதிர்நடவடிக்கையும் தாங்கள் எடுக்கவில்லை என்று தெரிவிக்கிறார்கள் ஈ.பி.டி.பியினர்.

தெருவில் நின்ற சிவப்பிரகாசம் அனிஷ்டன் என்ற பத்தொன்பது வயதுப்பாடசாலை மாணவரொருவர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்திருக்கிறார். இவர் நித்தியாபுரி என்ற இடத்தைச் சேர்ந்தவர். தனது க.பொ.த. (உ/த) டியூஷனுக்காக வந்திருந்த போதே கொல்லப்பட்டிருக்கிறார். பொலிசாரால் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்பே அங்கு மரணமானார். மரண விசாரணை அதிகாரி மு.கோ. செல்வராசா கொலை எனத் தீர்ப்பளித்துள்ளார்.

கொலையாளிகள் யாரென்று சரியாகத் தெரியவில்லை. இப்போது வெறும் ஊகங்களே உலவிக் கொண்டிருக்கின்றன. இக்கொலையைக் கண்டிக்கும் முகமாக திருமலை நகரப் பாடசாலை மாணவர்கள் திங்களன்று பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர். ○

## விசாரணைக்கு மறுப்பு!

1989ம் ஆண்டிலிருந்து 1997ம் ஆண்டுவரை ஒட்டமாவடி ப.நோ கூ. சங்கத்தில் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றியவர் கே.பி.எம்.முஸ்தபா. அவரது காலத்தில் சுமார் 80 இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டதாகக்கூறி 1997 ஜூன்மாதம் அவர் வடகிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரால் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இவ்விடயத்தில் நீதியானதோர் விசாரணை நடைபெற வேண்டும் என்பதற்காக விசாரணை அதிகாரியாக கல்முனை பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பளீல் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

ஆச்சரியம் என்னவென்றால், இவ்விசாரணைக்குத் தற்போதைய புதிய முகாமையாளர் எச்.எம்.சாகுல் ஹமீது என்பவர் ஒத்துழைக்க மறுத்துவருகிறார். விசாரணைக்குரிய ஆவணங்களைக் கொண்டு வருவதில் தனக்கு உயிராபத்து உண்டாம் என்று தெரிவித்து வருகிறார். இதனால் இச்சங்கத்தின் இயக்குனர் சபையையும் கலைத்துவிட மாகாண கூட்டுறவு அமைச்சு ஆலோசித்து வருகின்றது.

1997 டிசம்பரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் விசாரணைக்குரிய ஆவணங்கள் உரிய முறையில் வழங்கப்பட்டு விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத்தீர்மானிக்கப்பட்டும் புதிய பொதுமுகாமையாளர் தயக்கம் காட்டுவதேன்....

தனது வேலைகளை என்ன விலை கொடுத்தாயினும் சாதித்துச் சாதனை படைக்கும் பழைய முகாமையாளர் இவரையும் விலை கொடுத்து வாங்கி விட்டதால், பழையவரது கறுப்புக்களையெல்லாம் புதியவர் வெள்ளையடித்து மறைக்கப் பார்க்கின்றாரா என மக்கள் பேசிக்கொள்கின்றனர். ○

## பொலிஸாரும் சட்டவிரோதமும்!

வடகிழக்குப் பிரதேசங்களில் பணியாற்றிய உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலர் அவர்களுடைய சேவைக்காலம் முடிவடைந்ததன் பின்னரும் தொடர்ந்தும் அப்பிரதேசங்களிலேயே பணியாற்ற அனுமதியளிக்குமாறு பொலிஸ் தலைமையகத்தைக் கோரியுள்ளனர்.

இவ்வாறான கோரிக்கைகள் சில நிராகரிக்கப்பட்டதாகவும், சிலர் இப்பிரதேசங்களுக்குச் செல்ல விரும்பாத போதும், இவர்கள் மட்டும் தொடர்ந்தும் அங்கு இருக்க அனுமதி கோருவதன் பின்னணியில் ஏதோ மர்மம் உள்ளதாகவும் சந்தேகம் எழுப்பிய பிரதிப்பொலிஸ் மா அதிபர் ஒருவர் அது தொடர்பாக இரகசியமாகத் தேடிப் பார்த்த போது இதில் அதிகாரிகள் சிலர் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை தொடர்பான தகவல்கள் வெளிவந்துள்ளதாகப் பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ○

## நட்ட ஈடு ஒரு கோடி!

இலங்கை மத்திய வங்கி கட்டிடத்திற்கு அருகே இடம்பெற்ற குண்டு வெடிப்பின் காரணமாக மிக மோசமாகப் படுகாயங்களுக்குள்ளாகிய, வங்கியின் பிரதான சட்ட அதிகாரியான நயனதாரா குணசேகரா அவர்கள் தமக்கு ஏற்பட்ட உடல் ரீதியான பாதிப்புக்காக ஒரு கோடி ரூபா நட்டஈடு கோரி மத்திய வங்கிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

புலிகளின் இலக்காக இருந்த தமது வேலைத்தளம் தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகள் கவனம் செலுத்தாதனாலேயே தாம் இந்த வழக்கைத் தாக்கல் செய்வதாக அவர் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

குண்டு வெடிப்பின் காரணமாக, கட்டிடத்தின் இடிபாடுகள் விழுந்து தலை, கால், கை, என்பன பாதிப்புக்குள்ளாகியதாகவும், முகம் முழுவதும் வெட்டுக்காயங்களுடன் கை விரல்கள் மூன்றை இழக்க வேண்டியேற்பட்டதாகவும் 25 வருட சேவை அனுபவம் கொண்ட வழக்கறிஞரான இவர் மேலும் தெரிவித்துள்ளார். ○

## உமா நீ எங்கே?

கொழும்பு களனி திஸ்ஸ மின்நிலையக் குண்டு வெடிப்பிற்குப் பின்னர் அதனைச் சூழவுள்ள பிரதேசங்கள் பொலிசாரின் அதிக பட்ச கண்காணிப்புக்கு உட்பட்டு வருகிறது. இந்த வகையில் பலாமரச் சந்தி தொடக்கம் களனிப் பாலம் வரையிலான தமிழர்கள் செறிந்து வாழும் இடங்களில் அடிக்கடி தேடுதல் நடவடிக்கைகளும் இடம் பெறுவதுண்டு. அண்மையில் 'உமா' என்ற பெயரைக் கொண்ட பெண்புலி, கிறாண்ட்பாஸ், நவகம்புர வீடமைப்புத் திட்டத்துக்கு முன்புறம் இருக்கும் வீடொன்றில் தங்கி இருக்கின்றார் என்ற சந்தேகத்தின் பேரில் அப்பிரேதசம் சி.ஐ.டி. பொலிஸ் புலனாய்வுத் துறையினரால் விசாரணைக்கு உள்ளானது. அப்பிரதேசத்தில் வசிக்கும் உமா என்ற பெயரைக் கொண்ட அனைத்துப் பெண்கள் தொடர்பாகவும் விசாரணைகள் இடம் பெற்றுள்ளன. ○

## பத்து வருடங்களுக்கு மேலும்...

கொலைகள் செய்யாது அரச சொத்துக்களை வீணடிக்காது ஆயுதங்களை கீழேவைத்து விட்டு ஜனநாயக வழிக்கு வருவதாயின் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு வடக்குப் பிரதேசத்தை 10 வருடங்களுக்கு மட்டுமல்ல அதற்கு அதிகமான காலத்திற்காயினும் ஆட்சி செலுத்த வழங்குவது தவறானதல்ல என நாட்டின் பிரபல பிக்குமார் சிலர் தமது கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

பிரபாகரன் ஜனநாயகத்திற்குள் இணைவராயின் அரசியல் ரீதியாக ஆட்சிக்குவர ஜனாதிபதி அவருக்கு உதவுவார் என்றே ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டுள்ளார். இதில் எந்தவித பிழையும் இல்லை. பிரபாகரனை கொலைஞன் என குற்றம் சாட்டி யுத்தத்தில் ஈடுபடுத்தும் தேவை ஜனாதிபதிக்கு இல்லையென அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஜே.வி.பியினர் அரசியல் தலைவர்களைக் கொன்றனர் என்ற காரணத்துக்காக ஜனநாயக வழிக்கு வந்தவுடன் நாம் அவர்களை விரட்டி விட்டோமா?

ஐ.தே.கவும் கடந்த ஆட்சிக் காலத்தில் பிக்குகளைக் கொன்றனர். இளைஞர் யுவதிகளை படுகொலை செய்தனர். அவர்களும் படுகொலை லேபில்கைளை ஒட்டிக் கொண்டவர்களே. அவர்கள் கூட ஜனநாயக ரீதியாக ஆட்சிக்கு வர முனைகின்றார்கள் அல்லவா பிரேமதாச புலிகளுக்கு ஆயுதங்கள், பணம் வழங்கியது, பிரபாகரன் அந்தப் பிரதேசத்தை நிர்வகிக்கவே. இதன்படி ஜனாதிபதி கூறியது எவ்வாறு பிழையாகும்? எனவும் பிக்குமார்கேள்வியெழுப்பியுள்ளதாக லுக்பிம குறிப்பிட்டுள்ளது. ○

## முஸ்லிம் இளைஞரும் புலி?

பெப். 16 அன்று கல்முனை - மருதமுனைப் பகுதியில் வைத்து கல்முனைப் பொலிசாரினால் இருவர் சந்தேகத்தின் பேரில் சுடப்பட்டு மரணமானது தெரிந்ததே.

ஒருவர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரா. ஈஸ்வரன் (வந்தாறுமூலை) என்பவர், மற்றவர் பொலநறுவையைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர் பர்ஹான்.

பர்ஹான் வீதியில் சைக்களில் சென்று கொண்டிருந்த போது ஈஸ்வரன் ''லிப்ற்'' கேட்டிருக்கிறார். கொடுத்ததன் விளைவு பர்ஹானும் புலியாக்கப் பட்டிருக்கிறார்.

கல்முனை ஆஸ்பத்திரியில் இருவரது உடல்களும் வைக்கப் பட்டிருந்தன. மாவட்ட நீதிபதி அன்ரன் பாலசிங்கம் அவற்றைப் பார்வையிட்டார்.

புலி உறுப்பினரின் சடலத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. முஸ்லிம் இளைஞரின் சடலத்தைப் பொறுப்பேறகற உறவினர் வந்திருந்தனர்.

ஆனால், பொலிசார் சடலத்தைக் கொடுக்க மறுத்தனர். கொல்லப்பட்ட முஸ்லிம் இளைஞரும் புலி என்று கையொப்பமிடப்பட்டால் தான் சடலம் ஒப்படைக்கப்படும். தற்போது புலி இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது என மிரட்டினர்.

அதிஷ்டவசமாக நீதிபதி அருகே வரவே உறவினர் முறையிட்டனராம்.

புலிகள் இயக்கத்தில் முஸ்லிம் இளைஞர் உள்ளனரா எனக்கேட்டு வீதியில் 'லிப்ற்' கொடுத்தற்காக அவரையும் புலியாக்கலாமா எனக் கேட்டு ஒருவாறு உறவினரிடம் சடலங்களை ஒப்படைக்க வழி வகுத்தார் அவர்.

அவ்விடத்தில் நீதிபதி இல்லாவிட்டால் அவரும் முஸ்லிம் புலியாக அல்லது முஸ்லிம் என்ற பெயரில் அடையாள அட்டை வைத்திருந்த புலியாக ஆக்கப் பட்டிருப்பார் அல்லவா? ○

## விஜேயதாசவும் மற்றும் ராஸ்கல்களும் !

ராஸ்கல் என்று உங்களை யாராவது திட்டினால் உங்களுக்கு எப்படி இருக்கும்? மூக்கு வியர்த்துக் கொண்டு வருகிறதா?

திட்டி இருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் செயலாளர் கே.எச்.ஜே. விஜேதாச; அதுவும் தொலைக்காட்சியில்.

பெப். 8ந்திகதி ரி.என்.எல். தொலைக் காட்சியில், 'இன்சைட் ஸ்ரோரி' நிகழ்ச்சியில், சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க தலைமையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின் ராஜினாமா பற்றி நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு திட்டி இருக்கிறார். (கலந்து கொண்ட மூன்றாமவர் மேஜர் ஜெனரல் லக்கி அல்கம)

எப்படி?

'Some rascals in the Safty of Colombo are asking for Sepereation. என்று. (சில ராஸ்கல்கள் கொழும்பில் பாதுகாப்பாக இருந்து கொண்டு பிரிவினை கோருகிறார்கள்.)

குமார் பொன்னம்பலம் சொல்கிறார்: விஜேதாச பிரிவினை கோருபவர்களைப் பற்றியே பேசி இருக்கிறார். அதனூடாகச் சில தமிழர்களைச் சுட்டிக் காட்ட அவர் விரும்புகிறார். ஆகவே, அவர் 'ராஸ்கல்ஸ்' என்று திட்டியது தமிழர்களைத் தான் என்பது தெளிவாகிறது.

சிங்கள இனவாதிகளது பேச்சு எப்போதுமே இப்படித்தான் இருந்து வந்திருக்கிறது. இது சிங்கள சோவனிசத்தின் வெளிப்பாடு.

'கொழும்பில் இருந்து கொண்டு' என்று அவர் குறிப்பிடுவதனூடாக இலங்கை சிங்கள பௌத்த நாடு. அது உங்களுக்கு உரிமையற்றது என்ற தொனியே மேலோங்கியிருக்கிறது.

தமிழர்களோ கொழும்பிலோ மற்றும் எங்குமோ பாதுகாப்பாக இல்லை. கைது செய்யப்படல், காணாமல் போதல், கொலை செய்யப்படல், பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப் படல் என்று தமிழ் மக்களின் நிலைமை துயரகரமானது என்று குமாரின் அறிக்கை நீண்டு கொண்டே போகிறது.

சரி, Rascals என்றால் போக்கிரித் தனம்/ கயமைத்தனம் புரிபவர்களை அல்லவா குறிக்கும். ஒடுக்குமுறைக் குள்ளாகும் தமிழ் மக்களுக்கு அது ஒரு போதும் பொருந்தப் போவதில்லை.

தமிழ் மக்கள் ஒவ்வொரு நாளும் அரச இயந்திரத்தால் வதைக்கப்படுகிறார்கள் என்ற உண்மையை மறைத்து, திரித்து போக்கிரித்தனம், கயமைத்தனம் புரிபவர்களுக்குத் தான் அது பொருந்தும். அவர்கள் சிங்களவர்களாக இருந்தாலென்ன தமிழர்களாக இருந்தாலென்ன?

அப்போ உண்மையில் ராஸ்கல்கள் யார் என்று புரிகிறதா? ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# வவுனியா: வரிப் புலிகளின் தேசம்!

தம்பு

வவுனியாவில் உள்ள ஆயுதக் குழுக்களின் இன்றைய செயற்பாடுகள் குறித்து முழுமையாக இராணுவமும், பொலிசாரும் அறிந்து வைத்துள்ளார்கள். ஆயினும், அவர்களுக்கு எதிராக எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை. அதிகாரம் பெற்ற அடாவடித்தனக்காரர்களாகவே அவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

இங்கே ஆயுதம் தரித்த இராணுவத்தினர் இருக்கின்றார்கள். பொலிசார் உள்ளனர். ஒன்றுக்கு மூன்று இயக்கங்கள் இருக்கின்றன. இவர்களை விட பொலிஸ், இராணுவ காவல் துறைகளைச் சேர்ந்த உளவுப்பிரிவினரும் செயற்பட்டு வருகின்றார்கள். பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வளவெல்லாம் இருந்தும் இனந்தெரியாத முறையில் எண்ணற்றவர்கள் இரவு நேரங்களில் கொலைசெய்யப்பட்டுத் தெருக்களிலும், மூலை முடுக்குகளிலும் வீசப்படுகின்றார்கள். இவற்றை யார் செய்கின்றார்கள்? ஏன் செய்கின்றார்கள் என்பது குறித்து எவருக்கும் எதுவுமே தெரியாது. இந்த வகையில் பாதுகாப்புக் காரணங்களுக்காக படையினரால் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு நடவடிக்கைகளுக்கும் இவர்களது விட்டேற்றியான செயற்பாடுகளும் ஒரு முக்கிய காரணம் எனக் கூறுவதும் பொருத்தமானதே.

தமது அரசியல் நோக்கங்களுக்காகவும், சுயநலத்தேவைகளுக்காகவும் இந்த அரசியல் குழுக்கள் மேற்கொள்கின்ற செயற்பாடுகள் குறித்து எந்த விதமான நியாயத்தையும் கற்பிக்க முடியாது.

மறைமுகமான முறையில் இன்று வவுனியாவில் சீவிக்கின்றவர்கள் அத்தனை பேரும் இந்தக் குழுக்களுக்கு வரி செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தகவல் பலருக்குப் புதியதாக இருக்கலாம். பல மாதங்களாகவே இந்த நடைமுறை இங்கு அமுலில் இருந்து வருகின்றது.

வவுனியா நகருக்கு புத்தளம், குருணாகல் போன்ற இடங்களில் இருந்தே தேங்காய் கொண்டுவரப் படுகின்றது. தேங்காய் மொத்த வியாபாரம் குறிப்பிட்ட ஒன்றிரண்டு பேருக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தேங்காய் வியாபாரத்திற்கென அனுமதிக்கப் பட்டுள்ளவர்கள் குறிப்பிட்ட இயக்கத்திற்கு ஒரு தேங்காய்க்கு இவ்வளவு தர வேண்டும் என்ற ஒப்பந்த அடிப்படையில் அவர்கள் தமது தேங்காய் வியாபாரத்தை நடத்தி வருகின்றார்கள்.

இந்த இயக்கத்திற்குக் கொடுக்கப் படுகின்ற தொகையையும் தமது கொள்விலையில் சேர்த்தே வவுனியா நகர வியாபாரிகளுக்கு அவர்கள் விற்பனை செய்கின்றார்கள். இந்த நடைமுறை காரணமாக தேங்காய் ஒன்றின் விலை 12/= அல்லது 13/= ரூபாவுக்கு மேலேயே விற்பனை செய்யப்படுகின்றது.

இந்த வர்த்தகத் தொழில் நுட்பம் தேங்காயில் மட்டுமல்ல புத்தளம் பகுதியில் இருந்து இங்கு கொண்டு வரப்படுகின்ற மீன், மற்றும் தென் பகுதிகளிலிருந்து இங்கு கொண்டு வரப்படுகின்ற முட்டை, தேயிலை போன்ற பல்வேறு பொருட்களின் விற்பனையிலும் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் இதன் மூலம் சுயலாபம் அடைகின்ற ஆயுதக் குழுக்களுக்கு பொது மக்கள் வரி செலுத்துகின்ற சுமை வெளியில் தெரியாத நிலையில் மறைக்கப் பட்டுள்ளது. அத்துடன் அவர்களும் பொதுமக்களுடன் நேரில் மோதிக் கொள்வதும் தவிர்க்கப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிகளில் இராணுவம் நடைமுறைப்படுத்தி வருகின்ற பொருளாதாரத்தடை நடவடிக்கைகள் அப்பகுதியின் வர்த்தகச் செயற்பாடுகளை முழுமையாக அழித்துள்ளன. தனியார் வர்த்தகர்கள் அப்பகுதிக்குப் பொருட்களைப் பெருமளவில் வர்த்தகத் தேவைகளுக்காகக் கொண்டு செல்வது நிறுத்தப்பட்டு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் மட்டுமே கொண்டு செல்லலாம் என்ற நடைமுறையே இப்போது வழக்கத்தில் உள்ளது.

இதனால் வன்னிப் பகுதியின் பொருளாதாரம் மட்டும் அழிக்கப்படவில்லை. அங்குள்ள பொதுமக்களின் ஆரோக்கியமான வாழ்க்கையும் அழிக்கப்பட்டுள்ளது. தொழில்கள் செய்ய முடியாது. வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. அரசாங்கம் அனுப்பி வைக்கின்ற பிச்சைத்தனமான நிவாரணப் பொருட்களைக் கொண்டு தான் அவர்கள் தமது வயிற்றுப்பாட்டைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

இதனால் அங்குள்ள மக்களிடையே பசி, பட்டினி, போஷாக்கின்மை என்பன பெருகியுள்ளன. இதுபற்றி அக்கறை கொண்டு செயற்படுவதற்கு எவரும் முன்வந்ததாகத் தெரியவில்லை. இதனைப் போக்குவதற்கு சம்பந்தப்பட்ட எவரும் முயற்சிகள் மேற்கொண்டதாகவும் தகவல் இல்லை. இவ்வாறானதொரு நிலையை வவுனியாவிலும் இங்குள்ள ஆயுதக்குழுக்கள் ஏற்படுத்தி விடுவார்களோ என்ற அச்சம் இப்போது தலையெடுத்துள்ளது.

ஆயுதக்குழுக்களின் சீவியத்திற்கும் நாளாந்த செயற்பாடுகளுக்கும் தேவையான பொருளாதாரத்தை - பணத்தை அங்குள்ள வர்த்தகர்களே கொடுக்க வேண்டும். மாதாந்த வரி ஒரு புறம். மறுபுறத்தில் இயக்கங்கள் எதிர்கொள்கின்ற திடீர் செலவுகளையும் வர்த்தகர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். அழைக்கும் நேரங்களில் அவர்களது அலுவலகங்களில் வர்த்தகர்கள் (அவர்கள் வசதி உள்ளவர்களானாலும் சரி, இல்லாதவர்களானாலும் சரி) அனைவரும் சமூகமளித்திருக்க வேண்டும்.

மூன்றாந்தரமான வார்த்தைப் பிரயோகங்களே அங்கு சாதாரணமாகப் பயன்படுத்தப்படும். எவரும் எதிர்த்துப்பேச முடியாது. வர்த்தகர்கள் தாங்களே விரும்பி தங்களுக்குப் பிடித்தவர்களுக்குச் செய்கின்ற பல்வேறு செலவுகளும், நன்கொடைலைகளும் கீழ்த்தரமான முறையில் சுட்டிக் காட்டப்பட்டு அதற்குச் செய்கின்ற நீங்கள் எமக்கும் செய்ய வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுவது சாதாரண விடயமாகியுள்ளது.

வயது, தராதரம், அந்தஸ்து என்பதெல்லாம் அங்கு தூசுக்கே சமம். நாலு நல்ல வார்த்தைகள் தெரியாத,

→20

## மட்டு.:

# வெள்ளை வேன் கடத்தல் : கப்டன் முனாஸ் ?



யோகநாதன் எங்கே ?

சடாயு

மட்டக்களப்பில் வெள்ளை வேன் ஆட்கடத்தல் சம்பவம் மீண்டும் ஆரம்பத்திருக்கின்றது. பெப்.9ம் திகதி செங்கலடியில் வைத்து கந்தவனம் ஆனந்தசேகர், யோகநாதன், மூர்த்தி ஆகியமூவர் வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டனர். பெப்.10ம் திகதி கருவேப்பங்கேணியில் தெய்வநாயகம் ரமணன் என்பவர் கடத்தப் பட்டுள்ளார்.

இந்நிலையில் மட்டக்களப்பின் இராணுவ நிலை தொடர்பான கடந்த கால சில நிகழ்வுகளையும் திரும்பிப் பார்க்க வேண்டியுள்ளது. 1990ம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பில் இடம்பெற்ற வெள்ளை வேன் ஆட்கடத்தல், காணாமற் போதல், சந்தைக்குண்டு வெடிப்பு போன்ற நிகழ்வுகள் தற்போது மீளவும் தலை தூக்கியுள்ளதாலே கடந்த கால நிகழ்வுகளை மீட்டுப் பார்க்க வேண்டியிருக்கிறது. 90ஆம் ஆண்டு காலப் பகுதியில் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரியாக இருந்த மேஜர் ஷக்கி இன்று மட்டக்களப்பு மாவட்டப் பாதுகாப்பு இணைப்பதிகாரியாகக் கடமையாற்றுகின்றார். சிறைச்சாலை முகாம் பொறுப்பதிகாரியாக இருந்த ஷக்கி மட்டக்களப்பில் நடந்த பல குண்டுவெடிப்புக்களின் சூத்திரதாரியாகவும், செயற்பாட்டாளர்ாகவும், இருந்திருக்கின்றார். சிறைச்சாலை முகாமில் இவரின் வழிநடத்தலில் இவருக்கு வலது கையாக செயற்பட்டவரே ''கப்டன் முனாஸ்'' என்ற புனைபெயரில் இயங்கிய ''டயஸ்'' என்பவர். முனாஸ் செய்த குற்றங்களை மறைப்பதற்காக அநுராதபுரத்தில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றில் இந்த முனாஸ் என்பவர் இறந்ததாக இராணுவத் தரப்பு கூறுகின்றது. ஆனால் உண்மையில் முனாஸ் என்ற பெயருக்குரிய ''டயஸ்'' இன்னும் உயிரோடு தான் இருந்து கொண்டிருக்கின்றார். கப்டன் முனாஸ், மட்டக்களப்பில் நடந்த பல கொலைச் சம்பவங்களில் தொடர்பு இருப்பது ஊர்ஜிதப்படுத்தப் பட்டதனால், இராணுவத் தரப்பால் கப்டன் முனாஸ் என்ற பெயரை சாகடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இல்லையேல் இதனால் தங்களுக்குப் பாதிப்பு ஏற்படலாம் என இராணுவம் கருதியது.

ஆனால், இன்று மட்டக்களப்பில் இடம்பெறும் குண்டுச்சம்பவங்கள், வெள்ளை வேன் ஆட்கடத்தல் போன்றவை 90ஆம் ஆண்டை ஒத்திருப்பதாலும் மேஜர் ஷக்கியே கேர்ணல் ஷக்கியாக மீண்டும் மட்டக்களப்புக்கு வந்திருப்பதாலும், தற்போது சிறைச்சாலை முகாம் பொறுப்பதிகாரியாக இருக்கும் ஜெயக்கொடி ஐ.பி.யாக கப்டன் முனாஸே பெயர்மாற்றத்துடனும் பதவி உயர்வுடனும் வந்திருக்கலாம் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. ஏனெனில் வெள்ளை வேனில் கடத்தப் பட்டவர்கள் இந்த முகாமுக்கே கொண்டு செல்லப்பட்டதாலும், மட்டக்களப்பு மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் ஓட்டோவுடன் வெடித்த குண்டு ஓட்டோ இராணுவப் புலனாய்வு முகாமில் இருந்தே கடைசியாக வந்தது என்பதாலும சந்தேகங்கள் மேலும் வலுப்படுகின்றன.

90ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் போராடவென்று புறப்பட்டு ஒருவரை ஒருவர் கொன்று குவித்து தெருத்தெருவாய் துப்பாக்கிகளுடன் அலைந்து திரிந்தவர்களை முனாஸ் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். இதில் புளொட் மோகன் குழுவினர் முனாசுக்கு தோளோடு தோள் நின்றனர். காட்டிக்கொடுப்பதற்கும், வீதியோரத்தில் ரயர் போட்டு எரிப்பதற்கும் முன்மாதிரியாக வழிகாட்டினார்கள். தெருக்களில் மண்டை ஓடுகளையும் சதைப் பிண்டங்களையும் நாய்கள் கவ்வித் திரிய கொலை வெறியர்களுடன் கைகோர்த்து நின்று ரசித்தார்கள். இவர்கட்கு பல இலட்சம் ரூபாய்கள் மறைமுகமாக வழங்கப்பட்டது. இதற்கு இன்னமும் இவர்களில் ஒரு பகுதியினர் நன்றிக்கடன் செலுத்தி வருகின்றனர்.

90ம் ஆண்டு வெள்ளைவேனில் கடத்தப்பட்ட அனைவரும் ஷக்கியின் நேரடி விசாரணைக்கு உட்படுத்தப் பட்ட பின்பே ரயர் போடப்பட்டதும், 4ம் மாடிக்கு அனுபப்பட்டதும்நடைபெற்றிருக்கிறது. இவர்களில் பலர் இன்று இராணுவத்தினராலும் பொலிசாராலும் ஏதோ ஒரு வகையில் கண்காணிக்கப்பட்டுக் கொண்டே வருகிறார்கள். 90 ஏப்ரலில் கைது செய்யப்பட்ட ஒரு அரச ஊழியரை சிறைச்சாலை முகாமில் யாருக்கும் தெரியாத வகையில் 85 நாட்கள் மறைத்து வைத்து ஷக்கி நேரடி விசாரணை செய்திருக்கின்றார். இவரைத் தேடிவந்த குடும்பத்தாரிடம் தாங்கள் பிடிக்கவில்லையென ஷக்கி கூறியிருக்கின்றார். ஐ.சி.ஆர்.சியினர் 13 தடவைகள் இவரைத்தேடி இந்த முகாமுக்கு சென்றிருக்கிறார்கள். ஐ.சி.ஆர்.சியினர் வரும் தினங்களில் கண்களும்கைகளும் கட்டிய நிலையில் தனது ஜீப்பில் அதிகாலை 4மணிக்கு ஏற்றிக் கொண்டு வெபர் முகாமுக்குக் கொண்டு சென்று அரங்கு படிக்கட்டின் கீழே தள்ளிவிட்டு சோறு தண்ணீர் இல்லாமல் இரவு 9மணிக்கே முகாமுக்கு ஏற்றிச் சென்றிருக்கிறார் ஷக்கி. இவருக்கு மட்டக்களப்பில் உள்ள அரசியல்வாதி ஒருவர் அன்றில் இருந்து இன்று வரை துணை நின்றதனாலே இவர் மீண்டும் மட்டக்களப்பு வருவதற்கு வழி கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது.

கள்ளவனைப் பிடித்து விதானை வேலை கொடுத்த மாதிரி ஷக்கி மட்டக்களப்புக்கு பாதுகாப்பு இணைப் பதிகாரியர்க வந்தது இருக்கிறது. இவர் வந்ததன் பின்பே இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் இராணுவ சிவில் நிர்வாகத்தின் கைங்கரியத்தை மக்கள் அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்றது. இவ்வருடம் ஜனவரி தொடக்கம் இன்று வரையான இரண்டு மாதங்களில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் 100க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இருக்கின்றார்கள். இதில் ஒரு அரச ஊழியரும், 18 வயதுக்குட்பட்ட 4 மாணவர்களும் உள்ளடங்குகிறார்கள். இவர்களில் 19 பேருக்கு தற்போது அம்மை நோய் பிடித்திருக்கிறது. இவர்கள் அம்மை நோய் கொப்பளங்களில் பெற்றோல் ஊற்றி சித்திரவதைப் படுத்தப்படுகின்றனர். இதேவேளை இராணுவ கட்டுப் பாட்டிலில்லாத பிரதேசங்களில் கடமையாற்றும் ஊழியர்களும் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

* இராணுவ ரீதியாக நோக்கும்போது இது ஒரு மறைமுகமான இன ஒழிப்பு என்று கூறலாம்.

(1980ம் ஆண்டு புள்ளிவிரங்களின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் 65 வீதமாக இருந்த தமிழ் மக்களின் சனத்தொகை 1997ம் ஆண்டின் கணிப்பீட்டின்படி 40 வீதமாகக் குறைவடைந்துள்ளது. இதற்கு மூன்று காரணங்கள் கூறப்படுகின்றது.

(அ) வன்செயல்களால் இறந்தது.

(ஆ) வன்செயலின்போது காணாமற் போனது.

(இ) வன்செயலினால் இடம் பெயர்ந்தது.

→20


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அஷ்ரப் – பௌஸி மோதல் பத்திரிகைகளுக்குத் தீ





அஷ்ரஃப் - பௌஸிக்கிடையிலான மோதலின் பரிமாணங்கள் பற்றி கடந்த சரிநிகர் இதழில் (பெப். 12-பெப். 25) ஸிராஜ் மஷ்ஹூர் எழுதியிருந்தார். இருவருக்குமிடையிலான மோதலின் தொடர்ச்சி அண்மையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மோட்டார், வீதிப்போக்குவரத்துத் தொடர்பான விவாதத்தின் போதும் இடம்பெற்றுள்ளது.

அக்கறைப்பற்றுக்கும் கல்முனைக்கும் இடையே அறுபது அடி அகலமான வீதியொன்று அமைத்துத் தருவதாக வாக்குறுதியளித்த பௌஸி அதனை மீறிவிட்டார் என்று பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார் அஷ்ரஃப். இதற்கு பதிலளித்த அமைச்சர் பௌஸி ''நானொன்றும் வாக்குறுதியை மீறவில்லை. நிதிப்பற்றாக்குறை இருந்தும் கூட வீதிநிர்மாணப் பணியை ஆரம்பித்திருக்கிறோம். இதனை அஷ்ரஃப்தான் பிரச்சினைப் படுத்துகிறார். அவர் வீதி அறுபது அடி அகலத்தில் இருக்க வேண்டும் என்கிறார். ஆனால் பிரதேச மக்களும், பொ.ஐ.முன்னணி பிரதிநிதிகளும் ஆட்சேபனை தெரிவிக்கிறார்கள். வீதி ஐம்பது அடி இருந்தால் போதுமானது என்பது அவர்களின் கருத்து. அப்போதுதான் நிறைய வீடுகள், கடைகள் பாதிக்கப்படாமல் இருக்கும் என்கிறார்கள்.''

இந்தப்பாராளுமன்ற மோதல் விவாதத்தை அடுத்து இன்னொரு பிரச்சினையையும் அஷ்ரஃப் கிளப்பியிருக்கிறார். குறித்த விவாதத்தின் போது தனது உரையை பிரசுரிக்காது இருட்டடித்துவிட்டு பௌஸியின் உரையைப் பிரசுரித்திருக்கிறது தினகரன் என்கிறார் அஷ்ரஃப். ''இந்த வேலைக்காக தினகரனை நானே முன்னின்று தீயிடுவேன்'' என்றும், சூளுரைத்திருக்கிறார். இக்கூற்று பிரச்சினையை அதன் உச்சத்துக்கு கொண்டு சென்றுள்ளதுடன் பலரிடம் சலசலப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இது தொடர்பாக 'சண்டே டைம்ஸ்' ஆங்கில வார இதழில் அஷ்ரஃப் கருத்துத்தெரிவிக்கையில்... ''நான் என் அனுபவங்களிலிருந்துதான் பேசுகிறேன். நான் ஒரு பத்திரிகை நிருபராகவே வாழ்க்கையைத் தொடங்கினேன் என்பது பலருக்குத் தெரியாது. இன்று சில பத்திரிகையாளர்கள் லஞ்சம் வாங்கிக்கொண்டு, குடிபோதையில் இருந்து கொண்டு எழுதுகிறார்கள். நான் எப்போதும் எதனையும் வெளிப்படையாகவே சொல்வேன்..''

''தினகரனை தீவைக்க வேண்டும் என நான் ஒரு குறியீடாகவே சொன்னேன். தினகரன் அரசியல் சித்து விளையாட்டில் ஈடுபடுகிறது என்பதை மக்கள் அறியவேண்டும் என்பதற்காகவே அப்படிச் சொன்னேன். தொடர்ந்தும் எனது பல உரைகளை தினகரன் இருட்டடிப்புச் செய்து வருகிறது. இதற்குப்பின்னால் ஒரு மறைகரம் இயங்குகிறது. பத்திரிகைககள், அரசியல்வாதிகளினதோ வேறு யாரினதோ அடகுக் குட்பட்டிருக்கக் கூடாது. எனது ஆதரவாளர்களுக்கு இதைத் தெரியப்படுத்த விரும்புகிறேன். அவர்களுக்குத் தெரிந்தால், அவர்கள் தினகரனை வாங்கமாட்டார்கள். விற்பனையாகாத பத்திரிகையால் என்ன தான் லாபமிருக்கப்போகிறது..?''

''நான் இதுபற்றி நிருபருக்கு பத்திரிகையாசிரியருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சபாநாயகரைக் கோரியுள்ளேன்'' என்று தெரிவித்துள்ளார்.

இது பற்றி பௌஸி கருத்துத்தெரிவிக்கையில், 'அஷ்ரஃப்பிடம் பத்திரிகைகளை அச்சுறுத்தும் ஒரு பழக்கம் இருந்து வருகிறது. முன்பும் வீரகேசரிப் பத்திரிகைகளை இவர்கள் தீயிட்டார்கள், ஒரு பத்திரிகையில் எல்லாரதும் எல்லாவற்றையும் போட இடம் அனுமதிக்காது. சிலவேளைகளில் தாமதித்துப்பிரசுரமாகலாம். அத்துடன் பாராளுமன்றப்பேச்சுக்களை சொல்லுக்குச் சொல் பதிய வைக்கிற ஹன்சாட் அறிக்கை இருக்கிறதுதானே...''

அஷ்ரஃப் - பௌஸி மோதலாகத் தொடர்கிற இது இன்னொரு பரிமாணமாக பத்திரிகையாளர்களை உள்ளிழுத்திருக்கிறது. அத்துடன் தினகரன் போன்ற அரச ஊடகவியலாளர்களுக்கு எப்போதும் எதுவும் செய்ய முடியாத நிலை. சும்மா பக்கசார்பில் செயற்படுகிறவர்களுக்கு இப்படியொரு பிரச்சினை வருவதே புதினமானது. ஆக, இப்பிரச்சினை எடுத்துக்காட்டுவதெல்லாம் அஷ்ரஃப் - பௌஸி மோதலையே. தினகரன், ஆளுங் கட்சியாளுக்கா, ஆளுங்கட்சிப்பங்காளிக்கா முக்கியம் கொடுப்பது என்ற திணறலில் அஷ்ரஃப்பை உதறவிட்டிருக்கிறது. இது தொடரும் மோதலில் தனக்கேற்பட்ட தோல்வியாகக் கருதினாரோ என்னவோ பத்திரிகையை கொளுத்த வேண்டுமென்ற உணர்ச்சிவச எல்லைக்குப் போய்விட்டு இப்போது நான் அதை ஒரு குறியீடாகவே சொன்னேன் என்றும் மழுப்பிக் கொண்டிருக்கிறார்.

'அஷ்ரஃப் குறியீடாகச் சொன்னாரோ வேறு எப்படிச்சொன்னாரோ அவரின் பத்திரிகைகளை எரிக்கும் கதையோடு எனக்கு உடன்பாடே இல்லை...'' எனத்தெரிவித்திருக்கிறார் முஸ்லிம் காங்கிரசின் செயலாளரும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான ரவூப் ஹக்கீம்.

ஆட்டிப்படைப்பது யாரென்ற சிக்கலில் ஆடிப்போயிருக்கிறது அரச தமிழ்ப்பத்திரிகை தினகரன். அஷ்ரஃப்பின் செய்தி வர வேண்டும், அப்படி வந்திருந்தால் பிரச்சினை இல்லையென்பது ஓர் ஆதிக்க நிலைதான். அத்துடன் அரச கட்டுப்பாட்டிலில்லாத பத்திரிகைக்காரர்களே சுதந்திரமாய் இயங்க, எழுத முடியாத நிலையில் தினகரன் பத்திரிகையாளர்களால் என்ன தான் செய்ய முடியும்? செய்தல் பதவிகள் போகும். இக்பால் அத்தாஸுக்கு எதிராக நடந்த சம்பவத்தை ஆட்சேபித்து பல நூறு பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். தினகரனுக்குச் சார்பாக அவ்வாறு செய்ய முடியாத நிலைதான் இருக்கிறது. ஏனெனில், தினகரனோ வேறு அரச ஊடகங்களோ கருத்துச் சுதந்திரத்தின் பரந்துபட்ட வாயில்களாய் எப்போதும் செயற்பட்டதில்லை. இது வெறும் உள்வீட்டுச் சிக்கல் என்றுதான் சொல்ல வேண்டியிருப்பினும் இந்த மோதலில் ஒன்றும் செய்யமுடியாத தினகரன் காரர்கள் பாவம். அத்துடன் அஷ்ரஃப்பின் கூற்றிலுள்ள 'குடிகார லஞ்சப் பத்திரிகையாளர்கள்' என்ற பதங்கள் முக்கியமானவை. இதற்கான வழியையும் ஊடகவியலாளர்களே திறந்து வைத்திருக்கின்றனர் என்பதும் மறுப்பதற்கில்லை.

→20

---

# அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ராகிங்:

# நரகத்திற்கு எழுதப்பட்டவரின் கதை



பல்கலைக்கழகத்துக்கென்றே பெயர் போன பகிடிவதைக் கலாசாரம் தற்போது ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குள்ளும் நுழைந்து தன் கோர முகத்தைக்காட்டத் தொடங்கியுள்ளது. பல்கலைக்கழகத்தில் வரப்பிரகாஷையும், ஹாடி தொழிநுட்ப கல்லூரியில் துஷாரவையும் பலிகொடுத்த துயர் இன்னும் எங்கும் ஆறாத நிலையில், அது ஓர் விட்டுக்கொடுக்க முடியாத உரிமையாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. பகிடிவதைக் கலாசாரத்துக்குள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் பெயர்கள் அவ்வளவாக அடிபடுவதில்லை. ஆனால், அண்மையில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் பெயர் இது தொடர்பில் அடிபட்டு முக்கியம் பெற்றிருக்கிறது.

பெப். 13ம்திகதி தினகரன் பத்திரிகை முதற்பக்கத்தில் 'அட்டாளைச்சேனை பயிற்சிக்கலாசாலையில் பகிடிவதை சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு ஆசிரியர் வைத்தியசாலையில் அனுமதி' என்று செய்தி வெளியிட்டிருந்தது. மூதூரைச் சேர்ந்த ஆசிரியரொருவரே இவ்வாறு பாதிப்புக்குள்ளாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பயிற்சிக் கலாசாலையில் பகிடிவதையே இடம்பெறவில்லையென்று மறுப்பு அறிக்கையொன்றும் ஞாயிறு தினகரனில் வெளியாகியிருந்தது. கலாசாலை அதிபர் எம்.எஸ்.நெய்னா முஹம்மதுவினால் இவ்வறிக்கை வெளியிடப் பட்டிருந்தது. எனினும், உண்மை நிலை வேறுமாதியாக இருப்பதை பலரைத் தொடர்பு கொண்ட போது அறிய முடிந்தது.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மிகவும் பழைமை வாய்ந்த ஆசிரிய கலாசாலைகளில் ஒன்றாகும். இது முஸ்லிம் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான போதனா பீடமாக உருவாக்கப்பட்டதாகும். தற்போது இக்கலாசாலைக் கட்டிடங்களில் கல்விக் கல்லூரியும், தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடமொன்றும் என மூன்று பிரிவுகள் இயங்கி வருகின்றன.

இவற்றில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் யாரும் எதிர்பார்க்காத வகையில் பகிடிவதை எல்லைமீறி நடைபெற்று வருவது பலரை விசனத்துக்குள்ளாக்கியிருக்கிறது. பகிடிவதை தொடர்பான ஓரிரு சம்பவங்கள் கசியக் கசியவே மேலும் பல சம்பவங்களும் சந்திக்கு வந்திருக்கின்றன.

இக் கலாசாலை பகிடிவதை குறித்து தெரிய வருகிறவைகளில் பாலியல் ரீதியான சம்பவங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளதை அறிய முடிகிறது. ஒரு சம்பவத்தில் பெண் போன்ற ஓர் உருவத்தை கட்டிலில் வரைந்து அதை புணருமாறு புதிய ஆசிரிய பயிலுனரொருவரை பணித்திருக்கின்றனர். இன்னொரு நபரை உள்ளாடையுடன் கட்டித்தொங்க விட்டுள்ளனர். இது போன்ற சம்பவங்கள் மிகச் சாதாரணமாகவே இடம்பெற்று வருவதாகத் தெரிகிறது. அத்துடன் திருக்குறள் வடிவத்தில் பாலியல் வசனங்களை உருவாக்கி அதனைப்பாடமாக்கவும் நிர்ப்பந்திக்கின்றனராம் இக்''குறள்கள்'' பல்கலைக்கழகங்களிலே மிகவும் பிரபலமானவை.

இங்கு இன்னொரு விஷேசம் என்னவென்றால், இந்தப் பகிடிவதைச் சேஷ்டைகளுக்கெல்லாம் 'லீட்' பண்ணுபவர் இலங்கையின் தென் பகுதியைச் சேர்ந்த (ஊர் பெயர் தவிர்க்கப்பட்டுள்ளது) ஒரு மௌலவி (மதகுரு) பயிலுனர்தானாம். இதனால் புதிய மாணவ ஆசிரியர்களும், ஏனைய பலரும் வெட்கப்படுகின்றனர். இது பற்றி அவரிடம் கேட்டால் 'என் பெயர் நரகத்துக்கென்று எழுதியாயிற்று' இப்படித்தான் செய்வேன்' என்கிறாராம். பள்ளிவாசலில் தொழுகை முடிந்து வெளியேவர பகிடிவதைக்கு புதிய மாணவர்களை அழைத்துச் செல்ல வெளியே கூட்டம் கூட்டமாகக் காத்துக் கிடக்கிறார்கள். இந்தச் சேஷ்டைகளை தாங்க முடியாத பலர் அதிவிடி காலையிலேயே உடைமைகளை விட்டுவிட்டு ஊர் போயுமுள்ளனர்.

முன்பும், இக்கலாசாலையில் நடந்த பகிடிவதையின் போது, பகிடிவதைக் குட்பட்டவர் சேஷ்டைகளை பொறுக்க முடியாது பகிடிவதைக் குட்படுத்தியவர்களை அடித்துவிட்டு பயிற்சி பெறாமலே சென்ற சம்பவமும் இடம்பெற்றிருக்கிறது.

மாணவர்களை நெறிப்படுத்தி கல்விபுகட்டென பயிற்சிபெறும் ஆசிரியர்களே, இவ்வாறு நடந்து கொள்வது தான் சகிக்கமுடியாதுள்ளதென இங்கு நடப்பவைகள் பற்றி நன்கறிந்த பலர் தெரிவிக்கின்றனர். தனிப்பட்ட குரோதங்களினால், நடப்பவைகளை பெரிதுபடுத்தி, கலாசாலையின் பெயருக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணுகிறார்கள் என இச்சம்பவங்கள் தொடர்பாக கலாசாலை பிரதி அதிபர் கருத்து தெரிவித்தார். 'இங்கு வந்து பாருங்கள், மாணவர்களுடன் கதைத்துக் கேட்டுப்பாருங்கள். இங்கு அவ்வாறானவைகள் நடப்பதில்லை எனத் தெரியவரும் எனவும் கூறினர். 'முதற்பக்கத்தில் இது சம்பந்தமான செய்தியை வெளியிட்ட தினகரன், அதிபரின் மறுப்பை சின்னதாய் உள்ளே ஒரு மூலையில் போட்டிருக்கிறது' என்றும் குறைப்பட்டார்

எது எப்படியோ.... பகிடிவதைச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கிறது, நடைபெறுகிறது என்பது நிரூபணங்கள் மூலம் அறியக் கிடைககிறது. இது தொடர்பான செய்திகளால் இழுக்கு ஏற்படுகிறது என்று கருதுவதைவிட இப்படி நடப்பதால் இழுக்கு ஏற்படுகிறது என எண்ணி பொறுப்பானவர்களும், ஆசிரிய மாணவர்களும் இதை நிறுத்தி முன்மாதிரியாக இருக்கவேண்டுமென்பதுதான் பலரது விருப்பம்.

அத்துடன் பகிடிவதையின் மோசமான விளைவுகளை (வரப்பிரகாஷ், துஷார ஆகியோரின் மரணங்களையடுத்து), அடுத்து அதனை நிறுத்துவதற்கான சட்டமூலமொன்றும் அரசால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதாவது பகிடிவதையில் எவரும் ஈடுபடுவாரானால், அவருக்கு ஐந்து வருடங்கள் வரையான சிறைத்தண்டனை அளிக்கப்படும் என்பதாகும். உண்மையில் பகிடிவதை போன்ற சம்பவங்கள் சட்டங்களால் நிறுத்தப்படக் கூடியதன்று. பகிடிவதைப்படுத்துவோரோ பகிடிவதைப்படுவோரோ அல்லது ஆசிரியர்களோ, விரிவுரையாளர்களோ இது பற்றி புகார் தெரிவிக்கவும் மாட்டர். ஒத்துக்கொள்ளவும் மாட்டர். இதுதான் இன்று வரையான பகிடிவதை சம்பவங்களால் அறியமுடிகிறது. மரணத்தின் எல்லைவரை சென்றபின் அண்மையில் நடந்த இரு சம்பவங்களும் பரவலாக வெளிவந்து இது பற்றிய ஒரு பிரக்ஞையை ஏற்படுத்தியிருக்கிறது. எனினும், அது கூட பலரில் தாக்கத்தை ஏற்படுத்தாது ஏதோ ஓர் உளவியல் ரீதியான பிரச்சினையாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆக, இது ஓர் உணர்வு பூர்வமான முறையில் நிற்பாட்டப்படுவதென்றால், தனிநபர் கட்டுப்பாட்டொழுங்குதான் பேணப்பட வேண்டும். இதற்கு சகலமட்டங்களிலும் ஒரு திறந்த சிந்தனை தோற்றம் பெற வேண்டியது அவசியமாகிறது.

தகவல்: ஐ.யூ.ஷா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொ. ஐ. மு. அரசின் சாதனைகள் !

வி.த. யசோதரன்

## கிளிநொச்சியில் என்ன நடந்தது?

அங்கு நிலை கொண்டிருந்த இராணுவத்தைத் தாக்கிய புலிகள் அவர்களைப் பின்வாங்கச் செய்ததுடன், அவர்கள் நிலை கொண்டிருந்த தளங்களையும் தாக்கி அழித்திருந்தார்கள் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்திருந்தது. புலிகளால் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களையும் கூடப் புலிகள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்திருந்தார்கள்.

சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டக் களிப்பில் ஈடுபட்டிருந்த அரசாங்கம், புலிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிப் போய் இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கையில் இந்தச் சம்பவங்கள் நடந்து முடிந்திருந்தன.

புலிகளைப் பெருமளவில் தாம் கொன்றுவிட்டதாகவும், 200க்கும் மேற்பட்ட புலிகளின் சடலங்கள் தம்மிடம் இருப்பதாகவும், அவை புலிகளிடம் கையளிக்கப் படுமென்றும் அரசாங்கம் கூறியிருந்தது. பிறகு, அவைகள் பழுதடைந்து விட்டதாகவும், தாமே அடக்கம் செய்துவிட்டதாகவும், அறிவித்தது. இன்னும் ஒருபடி மேலே போய், கிளிநொச்சியில் எதுவுமே நடக்கவில்லை என்று தெரிவித்தது. கொழும்பிலிருந்து பத்திரிகையாளர்களையும், பிற தொடர்பியலாளர்களையும் கூட்டிச் சென்று காட்டியது. வடக்கிலுள்ள இராணுவத்தினர் மிகவும் உற்சாகமாகவும், வெற்றி மீதானநம்பிக்கையுடனும் இருப்பதாகத் தொலைக்காட்சிக் கெமராக்கள்காட்டின. கிளிநொச்சியில் ஒன்றும் நடக்கவில்லை என்பதனை உறுதி செய்வதற்காகக் "கிளிநொச்சி" என்று எழுதிய நடுகல்லைப் படம் பிடித்துக் காட்டினார்கள்.

புலிகள் தமது முழுச் சக்திகளையும் குவித்துக் கிளிநொச்சியில் சண்டையிடுகிறார்கள். ஆனாலும் அந்தோ பரிதாபம், அவர்களால் எதையுமே செய்ய முடியவில்லை என்றும் பாதுகாப்புப் பிரிவை மேற்கோள் காட்டித் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை என்று எல்லாம் கூட்டாகத் தெரிவித்தன. ஆனால் உண்மைகள் என்னவோ வேறு விதமாக இருந்தன. யாழ். குடாநாட்டிலேயே புலிகளின் தாக்குதல்கள் பரவலாக நடக்கத் தொடங்கின. அரசாங்கம் திரும்பத்



திரும்ப அறிவித்தும், ஜனாதிபதி நேரடியாகவே ஓடிப்போன இராணுவத்தினரைத் திரும்பி வரும்படி கோரியும் யாரும் வந்ததாகத் தெரியவில்லை. பதிலாக ஜனாதிபதியின் 'பிரபாகரனுக்குப் பத்து வருடம் வடக்கை ஆள அனுமதிப்பது' என்ற டைம்ஸ் பத்திரிகைப் பேட்டி, அநுருத்த ரத்வத்த அவர்களின் இராஜினாமா, பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸ் அவர்கள் மீதான தாக்குதல் முயற்சி என்பனவே அரசாங்கத்தின் பிரதான பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கையில் வடக்கில் புலிகளின் தாக்குதல்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இராணுவத் தாங்கிகளை ஏற்றிச் சென்ற வாலம்புரி, பப்ப(த்)த ஆகிய கப்பல்களை மூழ்கடித்த சம்பவமும் இந்தத் தாக்குதலின் தொடர்ச்சியாகவே நடைபெற்றது.

முழுப் பூசனிக்காயைச் சோற்றுக்குள் மறைக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை, யுத்த முனையில் தாம் தொடர்ந்தும் வெற்றி பெற்றே வருகிறோம் என்ற பிரச்சாரத்தை முறியடிப்பதாக இந்தச் சம்பவங்கள் அமைந்தன. அதையும் கூடத் தலைப்புச் செய்தியாக வெளியிட அரச சார்பு பத்திரிகையான 'டெய்லி நியூஸ்'க்கு மனம் பிடிக்கவில்லை. புலிகளின் படகுகள் நிர்மூலம் ஆக்கப்பட்டன என்றுதான் அதற்குச் செய்தி எழுத முடிந்தது.

யுத்தமுனையில் நடப்பதை மூடிமறைப்பது, யுத்தம் தோல்வியினை நோக்கிச் செல்வதற்குக் காரணமானவர்கள் என்று விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குப் பதவி நீடிப்பு வழங்குவது, புலிகள் பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் நின்று சண்டை பிடிப்பதால் எம்மால் தாக்க முடியவில்லை என்று தமது இயலாமைக்கு நியாயம் கற்பிப்பது என்று தொடர்கிறது, இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள்.

"சமாதானத்திற்காக" என்று கூறிக் களத்தில் இறங்கிய இந்த அரசாங்கம், சமாதானத்திற்காக நடாத்துவதாகத் தாம் கூறும் யுத்தத்தைக்கூட ஒழுங்காகச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு இப்போது பரவலாக முன் வைக்கப் படுகிறது.

அது சரி, இந்த அரசாங்கம் எதைத்தான் ஒழுங்காகச் செய்தது என்று கேட்கிறீர்களா?

கடந்த நான்காண்டு கால ஆட்சியில் அது சாதித்த சில விடயங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

ஒன்று, பத்திரிகையாளரையும், பிற தொடர்பு சாதனவியலாளர்களையும் கிரிமினல்கள் என்று நிலைநாட்டியது.

இரண்டு, விசாரணைக் கமிஷன்களை நியமிப்பதிலும், அவைகளது கண்டுபிடிப்புக்களைப் பிரசாரம் செய்வதிலும், ஆனால் அவற்றின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தாது, உடைப்பில் போடுவதிலும் உலக சாதனை நிலை நாட்டியது.

மூன்று, நாட்டின் ஐம்பதாவது ஆண்டு சுதந்திரப் பொன்விழாவை இராணுவத்தினரும், பொலிசாரும், மந்திரி, பிரதானிகளும், அவர்களது குடும்பத்தினரும் மட்டும் பார்வையிடுகின்ற ஒரு உயர் மட்டக் களியாட்டமே என்று நடத்திக்காட்டியது.

நான்காவது, எந்த ஜனாதிபதிப் பதவி எமக்கு வேண்டாம் என்று சொன்னார்களோ, அதே ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை முன்னைய ஜனாதிபதிகள் யாருக்கும் சளைக்காத விதத்தில் பிரயோகிப்பது.....

இப்படி நிறையச் சொல்லலாம்.....

இந்தச் சாதனைகளை எல்லாம் இதுவரை எந்த அரசாங்கம் தான் முறியடித்திருக்கிறது?

---

# ஈராக்: சதாம் செய்யப் போவது என்ன?

பாக்தாத்திற்கு வந்து ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனுடன் பேச்சு வார்த்தை நடாத்திவிட்டு, புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து திரும்பியுள்ளார் ஐ.நா. செயலாளர் கொபி அன்னான் அவர்கள். சதாமுடனான தமது பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.


அவர் என்ன தான் சொன்னாலும் அந்த ஒப்பந்தம் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நோக்கங்களுக்கு இசைவானதாக அமையாவிட்டால், அதை ஏற்றுக் கொள்ள முடியாதென்று தெரிவித்திருக்கிறது அமெரிக்கா. அமெரிக்காவுடன் கூட்டாக ஒத்தூதியுள்ளது பிரிட்டன்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்கள் அமுல் படுத்தப்படுவது குறித்து சபையின் செயலாளருக்கு இல்லாத அக்கறை அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும்!

ஈராக்கின் தலைவராக யார் இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கும் உரிமையும் பாதுகாப்பு கவுன்சிலுக்கு இருக்க வேண்டும். அதன் வழி அந்த உரிமை அமெரிக்காவுக்கு இருக்கவேண்டும் என்று சொல்லாத குறையாக அமெரிக்கா ஈராக் மீது தனது காய்ச்சலை வெளிப்படுத்தி வருகிறது.

உலக அரங்கில் அமெரிக்காவின் திமிர்த்தனத்திற்கும் ஆதிக்க வெறிக்கும் பெரும் சவாலாக உள்ள நாடுகளுள் முக்கியமானது ஈராக். பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை அடுத்து ஏழு வருடங்களுக்கு முன் கொண்டு வரப்பட்ட ஈராக் மீதான பொருளாதார தடைக்குப் பிறகும் ஈராக் இவ்வளவு இறுமாப்புடன் இருப்பதை அமெரிக்காவால் சகிக்க முடியவில்லை. ஈராக்கை தாக்குவதற்குத் தயாராக தமது படைகளை மத்திய கிழக்கு முழுவதும் பரவலாக நிறுத்திவிட்டு பாதுகாப்புச் சபையை அதற்கு ஆமாம் சாமி போடுமாறு கேட்கிறது அது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையும் வழமையாக ஆமாம் சாமி போடும் ஒரு சபையாகத் தான் இருந்து வந்திருக்கின்றது என்ற போதும் இந்தத் தடவை அதனால் அப்படிச் செய்ய முடியில்லை. இதற்கு முக்கிய காரணம் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளான சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் இதனை இம்முறை ஈராக் மீது தாக்குதல் நடாத்த வேண்டுமென்ற அமெரிக்காவின் வற்புறுத்தலை முழுதாக ஏற்றுக்கொள்ளாததே.





ஐ.நா. சபையில் பாதுகாப்புச் சபையினால் நியமிக்கப்பட்ட ஆயுதப் பரிசோதகர்கள் சபையின் தீர்மானங்களின் படி ஈராக்கிலுள்ள அனைத்து ஆயுத உற்பத்தி நிலையங்களையும் பரிசீலிக்க அதிகாரம் பெற்றிருந்தார்கள். ஈராக் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஆயுதப் பரிசோதனைகளுக்கு ஒப்புக் கொண்டிருந்த போதும், தொடர்ச்சியாக இந்தப் பரிசோதகர்கள் குறித்து சந்தேகத்தைக் கிளப்பி வந்துள்ளது. பரிசோதகர்களில் அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் பரிசோதகர்களே அதிகம் என்றும், அவர்கள் அந்த நாடுகளின் உளவுப் படைகளை சேர்ந்தவர்கள் என்றும் ஈராக் தொடர்ந்து குற்றம் சாட்டி வந்துள்ளது. அவர்களுக்கு ஆயுதப் பரிசோதனைக்கும் மேலான உள்நோக்கங்கள் இருப்பதாக அது தொடர்ந்து தெரிவித்து வந்தது. "பாதுகாப்புச் சபைக்கு ஈராக்கிய ஆயுத தொழிற்சாலைகளை பார்க்க முடியும். ஆனால் அமெரிக்க உளவாளிகளுக்கு அல்ல" என்று அது கூறி வந்தது. ஈராக்கின் இந்த மறுப்பை அமெரிக்கா எதிர்த்த போதும் பிற பாதுகாப்புச் சபை நாடுகள் ஓரளவுக்கு ஈராக்கின் நிலைப்பாட்டை ஒப்புக் கொண்டதுடன் தமது நாடுகளிலிருந்து பெருமளவுக்கு பரிசோதகர்களை அனுப்பியும் வைத்தன. இதன் மூலம் மொத்த பரிசோதகர்களின் எண்ணிக்கையில் நியாயமான பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்த அவை உதவின.

ஈராக் மீதான பொருளாதாரத் தடை அங்கு பாரியளவு வறுமையையும், நோயையும் ஏற்படுத்தியிருந்தது. சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டனர். வைத்திய வசதியும் மருந்துமின்றி பல சிறார்கள் மாண்டனர். ஈராக் மீதான தடை நீக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை, இவற்றின் காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக வலுப்பெறத் தொடங்கியது இதற்கு ஈராக் ஆயுதப் பரிசோதனைகளுக்கு போதியளவு ஒத்துழைப்பு வழங்கியதும் ஒரு காரணமாகும். உண்மையில் 1997 வரை பாதுகாப்புச் சபையின் அனைத்துத் தீர்மானங்களையும் ஏற்றுக்கொண்டு ஈராக் ஒத்துழைப்பு வழங்கித்தான் வந்தது. ஆனால், ஈராக்கை அமெரிக்காவினதும், பிரிட்டனினதும் ஏவலால் போல சிறுமைப்படுத்தும் விதத்திலான இந் நாடுகளின் போக்கு கொஞ்சம் கொஞ்சமாக வளரவே ஈராக் முரண்டு பிடிக்கத் தொடங்கியது. "சதாம் ஹ சைன் உயிரோடு இருக்கும் வரை தடை நீக்கப்பட அனுமதிக்க மாட்டோம்" என்பது போன்ற கருத்துக்களை கிளின்ரன் நிர்வாகம் தெரிவிக்கத் தொடங்கியதும் ஈராக் எரிச்சலடைந்தது. ஆயுதங்களை பரிசோதிப்பதற்கான ஐ.நா.வின் விசேட ஆணைக்குழுவினருடன் ஒத்துழைத்து வந்த ஈராக் தனது போக்கை மாற்றிக் கொண்டது.

இதன் விளைவு தான் இன்றைய முறுகல் நிலைக்கு வித்திட்டது. ஈராக் மீதான தடை நிறுத்தப்பட வேண்டுமென்றால், ஈராக் பேரழிவு ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களை உற்பத்தி செய்ய மாட்டாது என்பதை உறுதி செய்வதற்கான தொடர்ச்சியான நீண்ட கால கண்காணிப்புக்கு உடன்பட வேண்டும், ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட அனைத்து இடங்களும் பரிசோதனைக்கு அனுமதிக்கப்பட வேண்டும். ஈராக் இஸ்ரேலுடன் ஒஸ்லோ சமாதான ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு ஒத்துப்போக வேண்டும். கர்க்கட்-கைபா என்ற எண்ணெய்க் குழாயினை திரும்பவும் இணைப்பதற்கு ஒப்புக் கொள்வதன் மூலம் ஈராக்கிலுள்ள அமெரிக்க கம்பனிகளுக்கு பொருளாதார வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற கோரிக்கைகளை அமெரிக்கா முன் வைத்தது.

இந்தக் கோரிக்கைகள் இறைமையும் சுயாதிபத்தியமும் உள்ள எந்தவொரு நாட்டுக்கும் எரிச்சலூட்டக்கூடிய ஒன்று என்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அதுவும் ஈராக் போன்ற ஒரு நாடு இதனை எப்படி எதிர்கொள்ளுமென்று சொல்லித் தெரியவேண்டியதில்லை.

அமெரிக்காவின் நலன்கள் அந்தப் பிராந்தியத்தில் நிறுவப்பட வேண்டுமென்பதற்காக, ஈராக்கை நசுக்குவதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையை பகடைக் காயாக பயன்படுத்த அது எடுத்த நடவடிக்கையின் விளைவு தான் இன்றைய நிலைக்குக் காரணமாகும். ஆனால் இந்த நலன்களை ஒப்புக் கொள்வது என்பது ஈராக் அரசின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும் ஒன்றாகும். மற்றைய அரபு நாடுகளைப் போலல்லாமல் அப்பிராந்தியத்தில் தனித்துவத்தையும், சுதந்திரத்தையும் முடிந்தால், ஆதிக்கத்தையும் கொண்டிருக்க விரும்பும் ஒரு நாடு ஈராக். அரபு தேசியத்தை உயர்த்திப் பிடிப்பதில் தான், அதன் அரசியல் இருப்பே தங்கியிருக்கிறது. அப்படியிருக்கும் ஒரு நாடு, அமெரிக்காவின் தெருச் சண்டித்தனத்துக்கு விட்டுக் கொடுப்பது அதன் சுய இருப்புக்கு ஆபத்தானதாகும்.

ஆக, இந்த முறுகல் நிலை கொபி அனானின் ஒப்பந்தத்தாலும், உலக மக்களின் அபிப்பிராயத்தாலும் தற்காலிகமாக யுத்தமாக வெடிக்கும் நிலைக்கு இட்டுச் செல்லா விட்டாலும், யுத்த சூழ்நிலை

→20

மு. நை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுதந்திரம் என்றால் என்ன?

''சுதந்திரம் சுதந்திரம் என்று அலட்டுகிறீர்களே, சுதந்திரம் என்றால் என்னவென்று விளக்குவாயா?'' என்று என் உள் விமர்சகன் என்னைச் சீண்டினான்.

''தயவு செய்து அலட்டாமல் இரு. நான் கொஞ்சம் சும்மா இருக்க விரும்புகிறேன்.'' - நான் எரிச்சலோடு பதிலிறுத்தேன்.

''சும்மா இருக்க விடமாட்டேன். எனக்கு அவசரமாக இதுக்கு பதில் வேணும்'' - அவன் விடுவதாய் இல்லை.

''சும்மா இருப்பது எனது சுதந்திரம். தலையிடுவது என் சுதந்திரத்தைப்பறிப்பது அடாவடித்தனம். இப்போது சுதந்திரம் என்றால் என்னவென்று புரியுதா'' - நான் சினந்தேன்.

''கேள்வி கேட்பது, சிந்திப்பது இந்த ஜனநாயக நாட்டின் எவனுக்கும் வழங்கப்பட்டுள்ள சுதந்திரம்.'' - அவன்.

''உனது சுதந்திரம் மற்றவர் விவகாரத்தில் மூக்கை நுழைத்தால் அது சுதந்திரம் ஆகாது. அது வன்முறை. ஒரு குடும்பத்தை நடத்தும் கணவன் மனைவிக்கும் சரி, நண்பர்களுக்கும் சரி, ஒரு நாட்டில் வாழும் இரண்டு இனங்களுக்கும் சரி, அல்லது இரண்டு நாடுகளுக்கும் சரி, ஏன் உனக்கும் எனக்கும் சரி, சுதந்திரமாக உடன் இருந்து வாழ இது அவசியம். ஒருவர் சுதந்திரம் மற்றவர் சுதந்திரத்தை பறிக்கக் கூடாது'' -நான்

''அப்படியானால் சுதந்திரம் என்பது...?'' -அவன் ஒரு வரைவிலக்கணத்தைத் தேடுபவன் போல் இழுத்தான்.

''நாம் சுயமாக இயங்குவது, அந்த எமது சுய இயக்கம், மற்றவர் சுய இயக்கத்துக்குத் தடையாக நீளக் கூடாது'' - நான் வரையறை வழங்கினேன்.

''ஒவ்வொரு விடுதலைப்போராட்டமும், ஒரு இனம், அல்லது சமூகம், அல்லது வர்க்கம் இன்னொரு இனத்தை அல்லது வர்க்கத்தை, அல்லது சமூகத்தை ஆக்கிரமித்து அதனது சுதந்திர இயக்கத்தைக் கட்டுப்படுத்தி, சுரண்டும்போதுதானே எழுகிறது...?'' - அவன் நடை முறைக்கு வந்தான்.

''நிச்சயமாக ஈழத்தில் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைப் போராட்டமும், சிங்கள இனம் தமக்குக் கிடைத்த சுதந்திரத்தை தமிழ் பேசும் மக்களை அடக்குவதற்கு நீட்டிய போது தானே வெடித்தது?'' -நான் இன்னும் அருகே வந்தேன்.

''அப்படியானால், ஒடுக்கப்படும் மக்கள் எப்பொழுதும் எந்நிலையிலும் சுதந்திரத்தை மோகித்து நிற்பார்கள் இல்லையா...?'' - அவன்.

''உண்மை. சுதந்திரத்திற்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத்தயாராக இருப்பார்கள்.'' - நான் ஆமோதித்தேன்.

''அப்படியானால், தமிழர்களின் விடுதலைப் போராட்டம் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிக்கும் இக்காலத்திலும் தாம் தப்பினால் போதும் என்ற ரீதியில் அனேக தமிழ் மக்கள் தம்பிள்ளை குட்டிகளோடு போர் இல்லாத இடங்களுக்குத் தப்பிப்போவதும், அங்கு தம் சுதந்திரத்தைப் பறிக்கும் ஆளுவோர் மத்தியிலும், பல துன்பங்களுக்கு மத்தியிலும் வாழ்ந்து வருவதும் இன்று காணக்கூடிய யதார்த்தம். இது ஒரு முரணபாடு. இது ஏன் ஏற்படுகிறது?'' -அவன்.

''இது நமது விடுதலைப்போராட்டம் மக்கள் போராட்டமாக மாறாமல் போனதால் ஏற்பட்டது'' -நான்.

''மக்கள் போராட்டமாக எந்த விடுதலைப் போராட்டத்தையும் மாற்றுவது எது?'' -அவன்

''மாற்றுவதா?'' என்று கேட்ட நான், ''விடுதலைக்காக போராடும் இனம் முதலில் விடுதலை பெற்றதாக சுதந்திரம் உடையதாக இருக்க வேண்டும். அதுதான் விடுதலைப் போராட்டத்தை மக்கள் போராட்டமாக மாற்றுவது'' - என்றேன்.

''அதை விளக்குவாயா?'' -அவன்.

''விடுதலைக்காகப் போராடும் எந்த அமைப்பும் தம்மக்களை சுதந்திரம் உடையவர்களாக வைத்திருக்க வேண்டும். அவர்களுக்கு மிக தேவைப்படும் அடிப்படை உரிமைகளான பேச்சு,எழுத்து சுதந்திரம் இருக்க வேண்டும். விடுதலைப்போராட்ட அமைப்பையே விமர்சிக்கும் சுதந்திரம் மக்களுக்கு இருக்க வேண்டும். அப்போது தான் போராட்டத்தின் பிழைகளை மக்கள் தட்டிக் கேட்கவும், மக்கள் விடும் பிழையை அமைப்பு சுட்டிக் காட்டவும் ஒன்றை ஒன்று பரஸ்பரமாக புரிந்து கொண்டு வளர்ந்து மக்கள் போராட்டமாக மாறும்.'' - நான் விளக்கினேன்.

''ஆனால், விடுதலைப் போராட்டத்தில் குதித்த எந்தத்தமிழ் இயக்கத்திடமும் இந்தப் பண்பு இருக்கவில்லையே! மாறாக, தம்மை எந்தக் கேள்விக்கும் உள்ளாக்க விரும்பாத ஒரு 'புனித' போக்கைத் தானே எல்லாரும் வளர்த்துக் கொண்டார்கள்?'' அவன்.

''அதனால் தானே இன்றைக்கும் யாழ்ப்பாண மக்களுக்கும் 'சுதந்திரம்' வழங்கப்போன உள்ளூராட்சித்தேர்தல் மன்னர்கள் கத்தியும், பொல்லும் கொண்டு இராணுவக் காரர்கள் விலக்குப் பிடிக்கப்போகிற அளவுக்கு மோதிக்கொண்டு திரிகிறார்கள்! தமக்குள்ளேயே உடன் இருந்து வாழும் சுதந்திரதைப் பேண முடியாத் இவர்களா தமிழ் மக்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுத்தரப் போகிறார்கள்? எனக்கென்றால்...'' நான் இழுத்தேன்.

''கவலைப்படாதே கால ஒட்டத்தில் இவையெல்லாம் அள்ளுப்பட்டுப்போய் விடும். இவற்றையெல்லாம் கேள்விக்குள்ளாக்கி, உண்மையான மக்கள் போராட்டத் தையும், சுதந்திரத்தையும் நோக்கிய அருட்டல்கள் ஏற்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன.'' - அவன் பேச்சில் திடீரென அமைதி தெரிந்தது.

''ஆனால், எனக்கோ அடக்கு முறையும், அதற்கெதிராக போராட முடியாது தற்கொலை செய்து கொண்ட கவிஞர் மயக்கோவ்ஸ்கீயின் முகமும் தான் எங்கும் தெரிவது போல் படுகுது...'' -நான்

''அப்படியானால் இதுக்கு என்ன சொல்லப்போகிறாய்?'' -அவன்.

''எதுக்கு?'' -நான் ஆவலாய் கேட்டேன்.

''எந்த அடக்கு முறைக்குள்ளும் அகப்படாது சுதந்திரமாகத் திரிந்த எழுத்தாளன் ஹெமின்வே கூட ஒரு நாள் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை, செய்து கொண்டானே இது ஏன்?'' - அவன் அமைதியாகவே கேட்டான்.

''ஏதாவது விரக்தி, கவலை அவனுக்கு இருந்திருக்கும்'' -நான்.

''சரி, அப்படியானால் புறத்திலுள்ள பெரிய அடக்கு முறைகள் அகன்று சுதந்திர பொன்னுலகு மலர்ந்தாலும் மனிதனை அகத்தில் வாட்டும் விரக்தி, துக்கம் என்பவை அவனைத் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும் அதிலிருந்து விடுதலை பெறுவதுதான் பூரண சுதந்திரம் இல்லையா?'' -அவன்.

''அதற்கென்ன செய்ய வேண்டும்?'' - நான் அப்பாவி போல் கேட்டேன்.

''என்னை நீ யார் என்று அறிய வேண்டும்?'' - என்று கூறிவிட்டு அவன் பெரிதாகக் கடகடவென்று சிரித்தான்.''

''உன்னையா?'' என்று கேலியாக கேட்டுவிட்டு, 'நான் செத்தால் என்னோடு செத்துப் போகும் நீ பெரிய ஞானி மாதிரி கதைக்கிறாயே.'' என்றேன் சிரித்துக் கொண்டு.

''உனக்கு விசர்! நீ என்னை இன்னும் வடிவாகத்தெரிந்து கொள்ளவில்லை !'' - என்று பட்டென மறுதலித்தவன், ''நீ செத்தால் நான், இன்னொருவனில் இருந்து குரல் கொடுப்பேன். எல்லாருக்குள்ளும் நான் இருக்கிறேன். சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்குள்ளும் எல்லா இனத்தவர்களுக்குள்ளும் நான் தான் இருக்கிறேன். பலருக்கு என் குரல் கேட்பதில்லை. அத்தனை சுயநலத் தடிப்பு அவர்களுடையது! சிலர் கேட்டாலும் செவிமடுப்பதில்லை. அவர்களும் அந்த வகையில் தான். மிகச்சிலருக்கே என் குரல் தெளிவாகக்கேட்கிறது. அவர்களைக்கொண்டே நான் இயங்குகிறேன். எல்லாவித அகப்புற தடைகளை அறுத்துக்கொண்டும், தேக்கங்களைத் தகர்த்துக்கொண்டும் அதர்மத்தையும், அடிமைத் தனத்தையும், அழித்துக்கொண்டும் அவர்கள் மூலம் நான் இயங்குகிறேன். என் அருட்டல்களால் தான் இன்று வரை சுதந்திர - தர்ம எழுச்சிகள், உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன...!''

''உன் பெயர் என்ன?'' -நான் கேலியை விட்டுக் கேட்டேன்.

''உன்னைப் போல் என்னைப் பற்றி அதிகம் தெரியதவர்கள் 'மனச்சாட்சி','தர்மசிந்தனை' என்பார்கள். என்னைப்பற்றி பூரணமாக விளங்கியவர்கள் என்னையே 'சுதந்திரம்' என்பார்கள். அதனால் தான் இருப்புவாதிகள் என்னையே தமது 'இருப்பு' என அழைக்கின்றனர்.

திடீரென என் கைகள் இறக்கைகளாக விரிவது போல் இருந்தது.

சங்கன்



# யுகவிலக்கு?

தம்பலகாமத்தில் எட்டுத்தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப் பட்டது தொடர்பாக மேலும் சில தகவல்கள் வந்து கொண்டிருக் கின்றன.

இச்சம்பவம் நடைபெறுவதற்கு முதலே ஓரிரு பொலிசார் தாம் மிக நெருக்கமாகப் பழகும் சில வீடுகளுக்குச் சென்று 'இன்றிரவு பொலிசார் வந்து கதவைத் தட்டினால் யாரும் கதவைத் திறக்க வேண்டாம். கவனமாக இருங்கள். அவர்கள் ஏதோ திட்டம் தீட்டி இருக்கிறார்கள்' என்று சொல்லி விட்டுப் போயிருக்கிறார்களாம். அதே போல இரவு பொலிசார் கதவைத் தட்டிய போது திறக்காத வீட்டில் இருந்த இளைஞர்கள் தப்பி இருக்கிறார்கள்.

இச்சம்பவம் வழமை போல அரசாங்கமோ அல்லது அதன் வால்பிடிகளோ சொல்லும் 'புலிகள் சுட்டு ஆத்திர மூட்டியதால் தான் பொலிசார் சுட்டனர்' என்பதைப் பொய்யாக்கி இருக்கிறது. காரணம் எதுவுமின்றி திட்டமிட்டு இளைஞர்களை அழைத்துப் போய் சுட்டிருக்கிறார்கள். இதைத் தான் இனப்படுகொலை என்கின்றனர் தமிழ் மக்கள்.

ஆனால், வழமை போல ரூபவாஹினி எட்டுப் பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்றே அறிவித்தது: உண்மை வெளியாகி இத்தனை நாட்களின் பின்னும் அச் செய்தி திருத்தப்படவேயில்லை.

அப்பாவி இளைஞர்களைப் பயங்கரவாதிகள் என்று 'மொழி பெயர்த்தது' யார் என்று தான் தெரியவில்லை. ரூபவாஹினி செய்தி ஆலோசனைப்பிரிவில் மும்மொழியும் சரளமாகத் தெரிந்த தமிழர்களும் இருப்பதாகத் தகவல். அவர்கள் கூட இச்செய்தித் தவறைத் திருத்த ஆலோசனை சொன்னதாகத் தெரியவில்லை. அல்லது அவர்களுடைய ஆலோசனையில் தான் அப்பாவிகள் பயங்கரவாதிகளாகினரோவென்று யாமறியோம்?

ரூபவாஹினி பற்றி இன்னொரு விடயம். கடந்த சனிக்கிழமை 9.30 மணிக்கு புதிய ஒரு சிங்கள தொலைக்காட்சி நாடகம் ஆரம்பமாகி உள்ளது. 'யுகவிலக்குவ' - நெறியாளர் சுதத் ரோஹண, எழுத்துரு - சுகதபால டி சில்வா.

இனப்பிரச்சினை பற்றிய நாடகமாம். அந் நாடகத்தில் ஒரு காட்சி. வடக்கு/ கிழக்கின் ஒரு கிராமத்தில் 'பாதுகாப்புப்' படையினர் தேடுதல் நடத்துகின்றனர். உச்சி வெய்யிலில் நடக்க முடியாமல் தொண்டை வரள தாகத்துடன் உட்கார்ந்திருக்கிறாள் ஒரு தமிழ்ப் பெண்மணி. அவளுக்கு நாற்பத்தைந்தோ ஐம்பது வயதிருக்கும். தேடுதலில் ஈடுபடும் படையினருள் ஒருவன் தான் கொண்டு வந்திருந்த சிறிய கான் ஒன்றிலிருந்து தண்ணீர் எடுத்துப்பருகுகிறான். தண்ணீர் வேண்டுமா எனக் கேட்டு அமர்ந்திருந்த அப்பெண்ணுக்கும் கொடுக்கிறான். மறைந்திருந்து குறிபார்த்து தண்ணீர் கொடுத்த படையினனைப் புலிகள் சுடுகின்றனர். தாகத்துக்குத் தண்ணீர் கொடுத்த 'மனிதாபிமானமுள்ள' படையினன் கொல்லப்படுகிறான்.

தம்பலகாம யதார்த்தமும், 'யுகவிலக்குவ' கற்பனையும் எப்படி இருக்கிறது பார்த்தீர்களா?

இவ்வாறான படங்களை நாங்கள் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். வியட்நாமில் முதுகெலும்பு முறித்து அனுப்பப்பட்ட அமெரிக்கா தனது தோல்வியை மறைக்க இப்படி 'மனிதாபிமானமுள்ள' நிறையப் படங் களை எடுத்து வெளியிட்டது. அந்தப்படங்களின் இறுதிக் காட்சியில் அரிவாளும், சுத்தியலும் பொறிக்கப்பட்ட சிகப்பு நிறக்கொடியினால் வில்லன் சுற்றப்பட்டு கட்டி இழுத்துச் செல்லப்படுவான். கம்யூனிசம் அழியும். சமாதானமும் ஜனநாயகமும் மலரும்!

ஏன், மணிரத்தினத்தின் பம்பாய், ரோஜா, இருவர் எல்லாமே யதார்த் தத்தை மூடி மறைத்து ஒடுக்குமுறையாளரின் மனிதாபிமானம் பற்றிப் பேசின. பம்பாய் இந்து அடிப்படைவாதிகளின் மனிதாபிமானம் பற்றிப் பேசியது. இந்துக்களை முஸ்லிம்களின் புனித குர்ஆனை காப்பாற்றுபவர்களாகவும், முஸ்லிம்களை எப்போதும் அரிவாள் தூக்குபவர்களாகச் சித்திரித்தது. ரோஜா காஷ்மீர் மக்களின் அரசியற் கோரிக்கைகளை பயங்கரவாதமாகச் சித்திரித்து, அப்பயங்கரவாதிகள் அப்பாவி இளைஞன் ஒருவனைக் கடத்திச் செல்வதையும், அவனை மீட்க அவன் மனைவியும் இந்திய இராணுவமும் எடுக்கும் 'மனிதாபிமானமுள்ள' நடவடிக்கைகளையும் பற்றிப் பேசியது.

இந்த வகையறாக்களுள் யுகவிலக்குவும் அடக்கம் போல் தெரிகிறது. ஆனால், சுகதபால டி சில்வா போன்ற மதிப்புள்ள கலைஞர்களுமா என்கிற போது தான் கலைஞர்களின் அரசியல் பற்றிப் பேச வேண்டி வருகிறது. 'மனிதாபிமானத்தின்' அரசியல் பற்றிப் பேச வேண்டி வருகிறது. துயர்ப்படும் மக்களின் குரலாக ஒலிக்க வேண்டிய கலைஞர்களின் குரல் ஒடுக்கு முறையாளர்களின் குரலுடன் எவ்வாறு இணைகின்றது என்பதைக் கேள்வி எழுப்ப வேண்டி வருகிறது.

-சுப்பு-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனி செய்யக் கூடியது என்ன ?

வ.ஐ.ச. ஜெயபாலன்



படம்: ஜனக மாயதுன்னை

எனது வரலாற்றுப் பங்களிப்பாக 1983ல் வெளிவந்த ''தேசிய இனப் பிரச்சினையும் முஸ்லிம் மக்களும்'' என்ற நூலில் பின்வரும் கருத்துக் களை முன்நிலைப்படுத்தியிருந்தேன்.

''தமிழ் மக்களைப் போலவோ சிங்கள் மக்களைப் போலவோ தத்தமது மொழி வழங்கும் மாநிலங்களுள் வாழும் பண்பை முஸ்லிம் மக்கள் பெற்றிருக்கவில்லை என்பதும், தமிழ் வழங்கும் மாநிலத்தில் 40 சதவீதத் தவர்கள் மட்டுமே வாழ்கின்றனர் என்பதும் இங்கு கவனத்துக் குரியனவாகும். இதைவிட மேலும் சிக்கலான பண்பு தொடர்ச்சியான புவியியல் பிரதேசங்களில் வாழாமல் இலங்கைத் தீவு முழுவதிலும் சிதறி வாழ்வதாகும்.

சிதறி வாழ்வதனால் ஒரு பலமான தேசிய இனமாக வளர்ச்சிபெறுவதற்கு அவசியமான பொது புவியியற் பிரதேசமற்றவர்களாகவும், பலமான இயக்கத்தைக் கட்டி எழுப்புவதில் தொடர்பு சாதனங்களைப்பொறுத்தும் (Communication) தொடர்புபட்ட சமூக பொருளாதார நலன்களைப் பொறுத்தும் நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்குபவர்களாகவும் முஸ்லிம் மக்கள் உள்ளனர்.'' (பக்கம் 6)

''எப்படிப் பார்த்தாலும் முஸ்லிம் மக்களைப் பொறுத்து தமிழ் பேசும் மாநிலத்தில் வாழும் முஸ்லிம் மக்களும் ஏனைய தமிழர்களும் தேசிய இனத்தன்மையையும், சிங்கள மாநிலத்தில் வாழும் முஸ்லிம் மக்களும் ஏனைய தமிழர்களும் தேசிய சிறுபான்மை இனத்தன்மையையும் கொண்டுள்ளனர் என்ற அடிப்படை உண்மையை ஏற்றுக் கொள்வது அவசியமாகும்'' (பக்கம்36)

உண்மையில் 1983ல் எழுதப்பட்ட எனது நூலின் அடிப்படை சேதி என்ன? தமிழ் வழங்கும் மாநிலத்து அரசியல் வேறு சிங்கள மாநிலத்து அரசியல் வேறு. இரண்டையும் ஒன்றாகப் பார்த்தோ அல்லது ஒன்றை மற்றதாகப் பார்த்தோ அரசியல் செய்து குழப்புவது இரண்டு பக்கமும் அரசியலின் தோல்விக்கே வழி வகுக்கும். வடகிழக்கு மாநில அரசியல் முஸ்லிம் மக்களின் தேசிய இன கட்டுமானத்தையும், சுயநிர்ணய உரிமையையும் கோரிநிற்கிறது. தென்மாநில அரசியல் முஸ்லிம்களின் சமூக, பொருளாதார, கலாசார ரீதியான சம அந்தஸ்தையும் பாதுகாப்பையும் கோரிநிற்கிறது. வடகிழக்கு மாநிலத்தில் முஸ்லிம் மக்களின் தேசிய இன வளர்ச்சியும் ஸ்தாபன ரீதியான அரசியலும் மட்டுமே தென் மாநிலத்து முஸ்லிம்களுக்கும் உண்மையான பாதுகாப்பாக அமையும்.

1970களின் நடுப்பகுதிகளில் தமிழ் பேசும் மாநிலத்திலும் வெளியிலும் பரந்துபட்ட முஸ்லிம்களிடையே கற்றறிந்த நடுத்தர வர்க்க வளர்ச்சி பரவலாகக் காணப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் இருந்து சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக அவர்களது நிலப்பறிப்பு இயக்கத்துக்கு எதிராக முஸ்லிம் இளைஞர்களின் குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. முஸ்லிம் களின் பாரம்பரிய பிரதேசமான தீகவாபியை மீட்காமல் இந்த இளைஞர்கள் ஓயமாட்டார்கள் என்று தோன்றியது. புதிய தலைமைத் துவத்தின் கருவறையாக அம்பாறை மாவட்டம் தெரிவு செய்யப்பட்டது. இக்காலகட்டத்தில்தான் கருவறைக் குள்ளேயே குழந்தையை முடக்கி வைத்திருக்க வேண்டும் என்று கருதிய அம்பாறை மையவாத ஆபத்தும் பலம் பெற்றது. எனினும் அம்பாறை மையவாதத்தை உடைத்துக் கொண்டு இந்த இளைஞர்கள் முன்செல்வார்கள் என்று நம்புவதற்கு சாதகமான சூழல் இருந்தது.

வடகிழக்கு தேசிய இனக் கட்டுமானம் இலகுவான ஒரு பணியல்ல. மிகுந்த அர்ப்பணிப்புகளுடன் வடகிழக்கு மாகாணத்து முஸ்லிம் அலகுகளை தொடர்பு சாதனங்களின் வலைப் பின்னலால் இணைத்து பலமான ஒரு இயக்கத்தைக் கட்டி எழுப்புவதன் மூலம்தான் இயல்பாகவுள்ள நடை முறைச் சிக்கல்களை வெற்றிகரமாக எதிர்நோக்கி முன்செல்ல முடியும். இதுதான் 1983ல் வெளிவந்த எனது நூலின் அடிப்படைச் சேதி.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்று வித்தல் பற்றிய கலந்துரையாடல் காத்தான்குடி மாநாடு 21.09.1980 என்ற தலைப்பிட்ட துண்டுப் பிரசுரத் தில் பரிசீலிக்கப்பட வேண்டிய அடிப் படைக் கருத்துக்களென குறிப்பிடப் பட்டிருந்தவற்றில் வடகிழக்கு மாகா ணம் பற்றிய விசேட அக்கறை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவற் றுள் பின்வரும் அம்சங்கள் முக்கிய மானவை.

04. இலங்கையில் சகல மதங்களுக்கும் சம அந்தஸ்தை ஏற்படுத்துவதும் அந்நிலையைப் பாதுகாப்பதும்.

06. சிங்கள மொழியுடன் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்த்தைப் பெறுதல்.

07. (ஆ) அத்துடன் குறிப்பாக வட கிழக்கு மாகாணங்களிலுள்ள அரச வெற்று நிலங்கள் யாவும் அவ்வப் பகுதிகளில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்களுக்கு ஒதுக்கப்பட வேண்டி முயலல்.

(இ) 7ம் அம்சத்தில் உள்ள நோக் கத்தை அடைவதற்காக

1. இதுவரை தமிழ் பேசும் பகுதிகளில் திட்டமிட்டும் இரகசியமாகவும், அரசாங்க அதிகாரிகளின் ஆதரவுடன் செய்யப்பட்ட அன்னியக் குடியேற் றங்களை அங்கிருந்து சட்டபூர்வமாக வெளியேற்ற பாடுபடுதல்.

2. மேற்கண்ட இத்தகைய குடியேற் றங்களைத் தடுத்தல்

இத்துண்டுப் பிரசுரத்தில் தமிழர் தொடர்பாகவும், தமிழ் பேசும் பகுதிகளின் பாரம்பரிய நிலத்தின் பாதுகாப்பு தொடர்பாகவும், வடக்கு கிழக்கு முஸ்லிம் இளைஞர்கள் கொண்டிருந்த சரியான நிலைப்பாடு வெளிப்பட்டிருந்தது.

1980கள் ஆரம்பித்த போது முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த எம்.எச்.எம். அஷ்ரஃப், அஹமட் லெப்பை போன்ற முன்னணி முஸ்லிம் சக்திகளின் சிந்தனை கருவறையில் ஏற்கெனவே வளர்ந்திருந்தது. அன்று அவர்களுக் கிருந்த அடிப்படைக் குழப்பங்களில் முக்கியமானது முஸ்லிம் தேசிய இன அரசியலின் களப்பிரதேசம் தொடர் பானது. இது அடிப்படையான சிக்கல்.

1949களில் இலங்கைத் தமிழர்களின் தேசிய இன நிர்மாணப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்ட பின்னர் தமிழரசுக் கட்சியின் தலைவர்களான எஸ்.ஜே. வி. செல்வநாயகம், கு. வன்னிய சிங்கம் போன்றவர்கள் எது தமிழர்களது தேசிய இன அரசியல் களம் என்கிற அடிப்படைப் பிரச்சி னையை எதிர்கொண்டார்கள். அன்று பலமாக இருந்த தமிழ் காங்கிரஸ் உட்பட அனைத்து தமிழ் மக்கள் ஸ்தாபனங்களும் தென் இலங்கையில் வாழும் தமிழர்களை வெளியில் விட்டுவிட்டு அரசியல் செய்வதை எதிர்த்தார்கள். அவர்களுக்கு அவர்க ளது காரணங்கள் இருந்தது. அனைத்து இலங்கையிலும் சிறுபான்மை இன அரசியல் செய்வதா அல்லது வடகிழக்கு மாகாணத்தில் தேசிய இன அரசியல் செய்வதா எது இலங்கை வாழ் அனைத்து தமிழர்களுக்கும் உகந்தது என்பதையிட்டு வளர்ந்து வந்த தமிழர் தேசிய சக்திகள் சரியான ஒரு முடிவு எடுக்க வேண்டியிருந்தது. இறுதியில் தமிழ் காங்கிரஸ் கட்சியை உடைத்து 1949 டிசம்பர் மாதம் தமிழரசுக்கட்சி ஆரம்பித்தபோது கட்சியும் அதன் தலைமையும் வடகிழக்கு மாகாணத்தில் தமிழர் தேசிய இன கட்டுமானப்பணியே தனது வரலாற்றுக் கடமை என்கிற இரும்பிலும், உறுதியான முடிவை எடுத்திருந்தார்கள். தமிழ் மக்களும் பாராளுமன்ற நலன்கள் என்ற எலும்புத் துண்டுகளை முதன்மைப் படுத்தாத அர்ப்பணிப்புடன் தமிழரசுக் கட்சியின் பின்போர்க் குணத்துடன் அணி திரண்டனர். அவர்களது தீர்க்க தரிசனத்தை வரலாறு உறுதிப்படுத்தி யுள்ளது. 1960களின் சத்தியாக்கி ரகத்தின் தோல்வியின் பின் ஏற்பட்ட ஊடுருவல்களால் தமிழரசுக்கட்சி தடம்புரண்ட போதும் அவர்கள் ஆரம்பித்தப் போராட்டங்கள் ஒரு வரலாற்று ஜீவநதியாக பிரவகித்து நிலைபெற்றது. தனது சகல தவறு களுடனும் பின்னடைவுகளுடனும் மேற்படி போராட்டமே தென் இலங் கைத் தமிழர்களுக்கும், மலையகத் தமிழர்களுக்கும் பாதுகாப்பாயிற்று. அது மலையகத் தமிழர்களுக்கு மட்டுமன்றி முஸ்லிம் மக்களுக்கும் தேசிய இன உரிமைப் போராட்டத்தை இலகுவாக முன்னெடுத்துச் செல்லத் தக்க அரசியல் இடத்தை ஏற்படுத்தித் தந்தது. அவர்களது போராட்டம் ஏற்படுத்திய அரசியல் இடம்தான் சிங்கள மக்களது ஜனநாயகப் போராட்டத்துக்கும் வழியாயிற்று. ஆனால், துரதிர்ஷ்டவசமாக தமிழ் தேசிய சக்திகள் இன்றுவரை தமது வரலாற்று பொன் பாத்திரத்தின் முக்கியத்துவத்தை உணரத் தவறி விட்டார்கள். தம்மோடு இணைந்து பலம் தரக்கூடிய அத்தனை போராட் டங்களையும் இடறி விழுத்தித் தங்களையும் தனிமைப்படுத்துகிற ஆபத்தான போக்கை இன்னமும் திருத்திக் கொள்கிறார்கள் இல்லை.

1949ல் வரலாறு தமிழரசுக் கட்சியின் முன்னமும் எஸ்.ஜே.வி. செல்வநாய கத்தின் தலைமையின் முன்னமும் வைத்த அதே கேள்விகளை 1980 களின் ஆரம்பத்தில் முஸ்லிம் காங்கி ரஸ் பதாகைகளை நெய்யத்தொடங்கி யிருந்த முஸ்லிம் தேசிய சக்திகளதும் அச்சக்திகளின் தலைவராக இயல்பா கவே மேம்பட்டுவந்த எம்.எச்.எம். அஷ்ரஃப் முன்னமும் வைத்தது.

தம்மவர்களுள் 60சதவீதம் பேர் 'கேட்'டுக்கு வெளியே இருக்கிற நிலையில் விரிந்தது வடகிழக்கு முஸ்லிம்களின் குருசேஷ்த்திரப் போர்க்களம். நீடித்த போராட்ட வரலாறும் அனுபவமற்ற இனத்துவப் பின்னணியில் வந்த முன்னணி வீரர்களைத் தடுமாற வைத்தது இதுதான். இந்த தடுமாற்றம் என்கிற எலியையும் வைத்து கட்டப்பட்ட பொதியாயிற்று முஸ்லிம் காங்கிரஸ். முஸ்லிம் காங்கிரசும் வடகிழக்கு முஸ்லிம் மக்களும் இன்று எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளின் அடித்தளம் இதுதான்.

ஏன் முஸ்லிம் காங்கிரசால் ஒரு பலமான ஸ்தாபனத்தைக் கட்டி எழுப்ப முடியவில்லை? ஏன் முஸ்லிம் காங்கிரசால் வடகிழக்கு முஸ்லிம் மக்களைத் தகவல் தொடர்பு வலைப் பின்னல் மூலம் ஸ்தாபன ரீதியாக ஒருங்கிணைக்க முடியவில்லை? ஏன் முஸ்லிம் காங்கிரசால் தனது வளங் களை வடகிழக்கில் பரவலாக்கி முஸ்லிம் மக்களை பொதுப் போராட்டங்கள் மூலமும் கலாசார நடவடிக்கைகள் மூலமும் அம்பாறை மையவாதத்தை உடைப்பதன் மூலமும் பலமான ஒரு தேசிய இனமாக ஒருங்கிணைக்கிற பணியைத் தீவிரமாக முன் எடுத்துச் செல்ல இயலவில்லை? ஏன் முஸ்லிம் காங்கிரசும் தான் தீவிரமாக எதிர்த்த தென் இலங்கை முஸ்லிம் தலைமை கள் போல சிங்கள பேரினவாத கட்சிகளின் மத்தியில் சந்தர்ப்பவாத அரசியல் செய்ய நேர்ந்தது? ஏன் முஸ்லிம் காங்கிரஸ் எல்லா நிலைமைகளிலும் சிங்களவரதும், தமிழரதும் அரசியலின் மத்தியில் தான் முஸ்லிம்களின் அரசியல் உள்ளது என்ற உண்மையை நிராகரிக்கின்றது? முஸ்லிம் காங்கிரஸ் சிங்கள அரசியலை மட்டும் சார்ந் திருந்த தசாப்தத்தில் திம்புப்பேச்சு வார்த்தை, இலங்கை - இந்திய உடன்படிக்கை உட்பட இடம்பெற்ற இனப்பிரச்சினைக்கான சகல அரசி யல் பேச்சுவார்த்தைகளிலும் கலந்து கொள்ள அது தனது பிரதிநிதிகளை அனுப்ப வல்லமையற்றுப் போனது ஏன்?

வடகிழக்கு முஸ்லிம்களின் தேசிய இன முகமும் அடையாளமுமாயுள்ள முஸ்லிம் காங்கிரஸ் தனது பின்னடைவுகளில் இருந்து மீண்டும் உயிர்த்தெழுகிறதற்குள்ள ஒரே மார்க்கமான சுயவிமர்சனத்தில் முன் நிலைப்படப்போகிற தங்கப் பதக்கத் துக்குரிய கேள்விகள் இவை தான். இத்தகைய கேள்விகளுக்கான சாத்தியமான பதில்களின் அடிப்படை, 'ஆரம்பத்திலேயே முஸ்லிம் காங்கி ரஸ் பொதியினுள் வைத்துக்கட்டப் பட்ட தேசிய அரசியல் தலைமை என்கிற சந்தர்ப்பவாத பம்மாத்து எலியை கொன்று போட வேண்டும்' என்பது தான். இதுதான் வடகிழக்கு முஸ்லிம் மக்களை பலமான ஒரு தேசிய இனமாக ஒருங்கிணைக்கும் வரலாற்றுப் பணியை நிறைவு செய்கிறதற்கான ஒரே மார்க்கம் வடகிழக்கு முஸ்லிம் மக்களின் தேசிய இன வளர்ச்சி மட்டும்தான் தென் இலங்கை முஸ்லிம் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய உண்மையான பாதுகாப்பு.

வடகிழக்கு முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் வடகிழக்கு முஸ்லிம் தேசிய தலைமை களுக்கானது. தென்னிலங்கையில் முஸ்லிம்களின் சமத்துவம் சமூக நீதிக்கான அரசியல் தென்னிலங்கை முஸ்லிம்களின் தேசிய சிறுபான்மை இன தலைமைக்கானது. இரண்டும் இரண்டு தோணிகள். ஆற்றுக்கும் அரசியலுக்கும் இரண்டு கரைகள் விரும்பினாலும் விரும்பாவிடினும் தென் இலங்கை முஸ்லிம் மக்களது அரசியலின் இரண்டு கரைகள். தற்போது ஸ்ரீ.ல.சு.க., ஐ.தே.க. என்கிற இரு முகங்களைக் கொண்டிருக்கிற சிங்கள அரசும், மலையகத் தமிழர் களது தேசிய அரசியலுமாகும். வடகிழக்கு முஸ்லிம் தேசிய இன அரசியலின் இரண்டு கரைகள் சிங்கள அரசும், தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டமுமாகும்.

ஒரு கரையுடன் ஆறும், ஒரு கரை மட்டும் சார்ந்து நிமிரக்கூடிய உரிமைக்கான அரசியலும் இல்லை. அத்தகைய அரசியல் தனிமனித சந்தர்ப்பவாத அரசியலாகும். கற்ப னையில் கரைகளை உருவாக்கும் சாத்தியங்களும் இல்லை.

இன்றைய பின்னடைவு காலகட்டம் உருவாகிறதற்குத் தமிழர்களும், தமிழ்ப் போராளிகளும் செய்த தவறுகளும் பங்களிப்பு செய்திருக் கிறதை ஒருவர் சுட்டிக்காட்டலாம்.

→19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்கள் பற்றிய மூன்று திரைப்படங்கள்

- ரத்னா -

இந்தியத் திரைப்படங்கள் பாலியல் குறித்து பேசத்தலைப்பட்டு விட்டன. பாலியல் குறித்து மட்டுமின்றி ஓரின உறவு, அலிகள் தொடர்பாகவும் அவை தயக்கமின்றி பேசத்தலைப் பட்டுவிட்டன. அண்மைய வரவுகளான தமன்னா(Tammanna), பயர் (Fire), தயாரா(Dayara) என்பன முறையே அலிகளின் அவலங்களையும் ஓரின உறவினையும், ஆணின் வினோத பழக்கத்தையும் கருப்பொருளாகக் கொண்டுள்ளன.

இந்தியத் திரைப்படங்களில் சத்யஜித்ரே காலம் தொடக்கம் யதார்த்தமும், இந்திய சமூகத்தின் அவலமும், அது எதிர் கொள்ளும் நெருக்கடியும் ஏழ்மையும் கமெராவினுள் கொண்டவரப்பட்டிருந்தன. அவை உலக அளவில் பேசப்படுபவையாகவும் உள்ளன. ஒரு புறம் வர்த்தக ரீதியான படங்கள் மாயா ஜாலங்களை, போலிகளை வளர்த்துச் செல்ல, மறுபுறம் அதற்கு மாற்றாக வர்த்தகரீதி




அல்லாத திரைப்படங்களில் யதார்த்ததை வெளிப்படுத்த மாற்றுத் திரைப்படவியலாளர்கள் முனைகின்ற போக்கொன்று மெல்ல மெல்ல முனைப்படைந்து வருகிறது. அந்த முனைப்பின் முன்னேற்றகரமான வெளிப்பாடுகள் தாம் பாலியல் குறித்தும், தன்னினச்சேர்க்கையாளர்கள், அலிகள் குறித்ததுமான படைப்புகள்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது, இம்மூன்று திரைப்படங்களிலும் காணப்படுகின்ற பெண்கள் தொடர்பான சித்திரிப்புக்களாகும். பாலியல், தன்னினச்சேர்க்கை, அலிகள் என்ற வெவ்வேறான விடயங்கள் யதார்த்த சித்திரிப்பில் எதை வெளிக்காட்டுகின்றன?

மகேஷ்பட்டின் இயக்கத்தில், பூஜா பட்டின் தயாரிப்பில் வெளிவந்துள்ள 'தமன்னா'(Tammanna), அலிகள் பற்றிய சித்திரிப்பாகும். செல்வந்த குடும்பத்தாரால் வெறுத்தொதுக்கப்பட்டு தகப்பனாரால் குப்பைத் தொட்டியில் வீசப்படும் பெண் குழந்தையை, தனிமையில் வாடும் அலி ஒருவர் எடுத்து வளர்க்கின்றார். தன் தனிமைக்கும், ஆதரவுக்கும தான் எடுத்து வளர்க்கும் தன் மகள் உள்ளாள் என மகிழ்வுறும் அலி, தன்னை தகப்பனாகவே மகளுக்கு இனம் காட்டுகின்றார். பருவ வயதில் அவளின் சுய பாதுகாப்பைக்கருத்திற் கொண்டு மகளை கன்னியர் மடத்துக்கு அனுப்பும் அலி, மகளின், திருமணத்துக்காக எதிர்காலத்துக்காக, பிற அலிகளைப் போல் பெண் வேடமிட்டு கல்யாண வீடுகளிலும், விழாக்களிலும் நடனமாடி ஆண்களை மகிழ்வித்து பணம் சம்பாதிக்கின்றார். எதிர்பாராத சந்தர்ப்பமொன்றில், கன்னியர் மடத்தில் இருந்து வீடு திரும்பும் மகள், தந்தையின் உண்மை நிலவரத்தை அறிந்து வெறுத்தொதுக்குக்கின்றாள். எனினும் அவர் மகளிடம் தனது நிலையைச் சொல்லி தன்னை ஏற்றுக் கொள்ளச் செய்து உண்மை தகப்பனை, தாயை கண்டு பிடிக்கவும் உதவுகிறார். இறுதியில் அவ் அலியை விட்டுப் பிரிய முடியாது, அவள் அலிகளுக்கான அச்சேரியில் வாழத் துணிகின்றாள்.

பெண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்ததினால், செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்த தாய் அனுபவிக்கும் சித்திரவதைகள், பாதுகாப்பற்ற நிலையில் பெண் குழந்தை ஒன்று எதிர்கொள்ளும் அவலங்கள், தனது தந்தை ஓர் அலி என்பதை ஏற்க மறுக்கும் ஓர் பெண்ணின் சாதாரண மனப்பாங்கு என்பன 'தமன்னா' அலிகள் குறித்தும், பெண்கள் பற்றியும் பேசுகின்றது என்பதனை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

தீபா மேத்தாவின் 'பயர்' (Fire), சகோதரர்கள் இருவரின் மனைவிமாரின் ஓரினக் காதல் பற்றிய சித்திரிப்பு. குழந்தைகள் இல்லாத ராதா, தன் கணவனுடன் பல வருடங்களாக பாலியல் தொடர்பு கொள்ளாதவள். கணவனின் இளைய சகோதரன் சீதா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட போதும், அவன் சீன தேசத்து நண்பியுடனேயே உறவினைப் பேணுகின்றான். சீதா, ராதா ஆகியோரின் திருமண வாழ்வு இவ்வாறு தோல்வியுறுவதும், இருவரும் தங்கள் தங்கள் பிரச்சினைகளை மனம் விட்டுப் பேசுவதும்,ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்பதும் அவர்களுடைய நெருக்கத்தை அதிகரிக்கிறது. அது காதலாகி இறுதியில் இவர்களுக்கிடையில் ஓரினப் பாலுறவும் ஏற்படுகின்றது.

இம்மாறான உறவை அறியும் கணவன்மார்களினால் குடும்பம் பிரச்சினைக்குள்ளாகுகின்றது. தமது உறவின் நியாயத்துக்காகப் போராடும் இரு பெண்கள் பற்றியதே 'பயர்'

ஓரின உணர்வு மூலம் தமது இருப்பை பேணுதலானது இந்து, இந்திய குடும்ப அமைப்பில் எவ்வளவு கடினமானது என்பதை தீபா சுட்டிக் காட்டுகின்றார்.

அமொல் பலிகாரின் 'தயாரா' (Dayara) இந்தியக் கிராமமொன்றின் அழகுராணிக்கும், பெண் உடைகள் மேல் விருப்புக் கொண்டு பெண் போல் வாழ விரும்பும் ஆடவனுக்கும் இடையிலான நட்பு பற்றிய சித்திரிப்பாகும். அழகுராணியாக தேர்ந்தெடுக்கப்படும் இப்பெண் ஒரு குழுவினால்



பாலியல் வன்முறைக்குள்ளாகுகின்றாள். பின்னர் அவள் பெண் வேடமிட்டு வாழ விரும்பும் ஆடவனுடன் வாழ்கின்றாள். தான் மீண்டும் ஒரு முறை பாலியல் வன்முறைக்குள்ளாகி விடுவோம் என்ற அச்சத்தில் அவள், அவ் ஆடவனைப் பின்பற்றி ஆண் வேடமிட்டு வாழ்கிறாள். ஒரு சந்தர்ப்பத்தில் அப்பெண் தமது வீட்டை அடையும் போது ஆண் வேடமிட்டு வாழ்வது தொடர்பாக குறைகூறி அவளது தகப்பன் அவளை வீட்டை விட்டு விரட்டுகின்றார். மீண்டும் அவள் தான் நேசிக்கும் அவ் ஆடவனை அடைந்து அவனது வினோத பழக்கத்தைக் கைவிட்டு தன்னோடு வாழும்பட்டி கோருகின்றாள்.

இதில் ஆண்கள், பெண்கள் வேஷமிடுவதை ஏற்றுக் கொள்ளும் இந்தச் சமூகம், தற்பாதுகாப்புக்காகவேனும் பெண், ஆண் வேடமேற்பதை ஏற்பதில்லை என்பதைச் சித்திரிக்கின்றது. 1996ம் ஆண்டு டைம் (Time) சஞ்சிகை தேர்ந்தெடுத்த மிகச்சிறந்த 10படங்களில் 'தயாரா'வும் ஒன்றாகும். இப்படம் பெண்களின் பாலியல் உரிமைகள், சமூகத்தில் பெண் என்ற பாத்திரங்களின் அவலங்கள் என்பனவற்றைச் சுட்டிக்காட்டுகின்றது.

குறிப்பாக தீபா மேத்தாவின் 'பயர்' (Fire), இது நாள் வரை பாலியல் குறித்தும், ஓரின்க்காதல் குறித்தும் பேச மறுத்த சமூகத்திலிருந்து, வெளிப்பட்டது பல சம்பிரதாய கட்டுடைப்புகளின் பிரதிபலிபப்பாக

→13



# பெண்ணியம் பேசும் சினிமா

மென்மையான புல்லாங்குழல் இசை மனசை வருட சிறுமிக்கு புல்வெளி ஒன்றில் வைத்து குடும்பம், காதல், வாழ்வு பற்றி பெற்றோரால் விளக்கம் கொடுக்கப்படுகிறது. சிறுமிக்கு விளங்கவில்லை. தாய் கண்ணை மூடிக் கொண்டு காணும் காணுவதாய் நம்பும் காட்சியும் புரியவில்லை. புரிகிறது; இறுதியில் அச்சிறுமிக்கு உண்மையான காட்சி தெரிகின்றது; எப்படி?

எவ்விதத்திலும் தன் உணர்வுகளுடன் ஒத்துப்போகாத ஒருவனை மணம் முடித்து கூட்டுக் குடும்பம் ஒன்றினுள் நுழைகின்றாள் *சீதா (நந்திதா தாஸ்)* ராமாயணத்தில் சீதையின் தீக்குளிப்பை மெய்சிலிர்க்க கண்ணீர் உகுத்துப் பார்க்கின்ற, ரசிக்கின்ற குடும்பம் அது. கணவனின் அண்ணன், அவர் மனைவி *(ஷபனா அஸ்மி)*, கணவனின் நோய்வாய்ப்பட்ட நடக்க முடியாத வயதான தாய், வேலைக்காரன் ஆகியோரைக் கொண்ட அக்குடும்ப அமைப்பினுள் அவளது சுதந்திரமான உணர்வுகள் அடிபட்டுப் போகின்றன. தன்வரைக்கும் முற்போக்கு எண்ணம் கொண்ட இன்னொரு பெண்ணிடம் தொடர்பு வைத்துள்ள சராசரி ஆணான கணவனில் அவளால் காதல், தீவிர ஆசை, உணர்ச்சி, காமம் என்பவற்றை வைக்கவும் முடியவில்லை. அவனால் அவற்றைக் கொடுக்கவும் முடியவில்லை. தன் துயரங்களை ராதாவிடம் (அண்ணனின் மனைவி) கூறுகிறாள். ராதா அக்குடும்ப அமைப்பின் ஆணிலைச் சிந்தனைகளால் கூறுபோடப்பட்டு வெறும் இயந்திரமாக கருதப்படும், பிள்ளை பெற முடியாத உடல் தன்மை கொண்டவள். இருவருக்கிடையிலும் ஆழமான நேசம் உருவாகின்றது. அது இயல்பாக வளர்ந்து காதல், அரவணைப்பு, காமம் என்பவனவாகவும் பரிணமிக்கின்றது. பாரம்பரிய மிக்க ஆண் -பெண் காதலிலிருந்து விலகி பாரம்பரியமற்ற காதலாக மலரும் அவர்களிடையேயான உறவு அக்குடும்பத்திற்குத் தெரியவர, அவர்களை வெறும் இயந்திரங்களாகவே பார்த்துப் போன மனிதர்களுக்கு, அவர்களின் உணர்வுகளை மதிக்கத் தெரியாத அந்தக் குடும்பத்திற்கு அது பேரதிர்ச்சியாக இருக்கின்றது. தாம் கட்டிக் காத்த ஆணிலைச் சிந்தனைகள் மீது வீழ்ந்த சக்திமிக்க அடியாக அதனைப் பார்த்த அக்குடும்பத்திலிருந்து சீதா வெளியேறுகின்றாள். கூடவே ராதாவையும் வருமாறும் ஒன்றாக வாழ்வோம் எனவும் அழைக்கின்றாள். தனக்கு பழக்கப்பட்டுப்போன அடிமைத் தளைகளிலிருந்து விடுபட முடியாமலும் சீதாவினுடனான காதலிலிருந்து பிரிய முடியாமலும் தவிக்கும் ராதா இறுதியில் துணிந்து சீதாவுடன் ஒன்று சேருகின்றாள். கொட்டு மழையில் அவர்கள் இறுகத்தழுவி நிற்கும் காட்சியுடன் படம் முடிவடைகின்றது.

இது தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட தீபா மேஹ்தாவினால் எழுதி இயக்கப்பட்ட ''பெண்ணிய சினிமா துறையில் ஒரு புதிய போக்கு'' எனும் குறிப்புடன் வெளிவந்துள்ள ***Fire (நெருப்பு)*** சினிமாவின் கதை. சொல்லப்பட்டவாறு எந்தளவிற்கு இது பெண்ணியம் பேசுகின்றது எனவும், அதன் மூலம் இது எழுப்பும் கேள்விகள் எவை எனவும் பார்த்தல் அவசியமாகின்றது.

பொதுவாக வர்த்தக சினிமாவிலும் சரி, நடைமுறையில் நாம் கொண்டிருக்கும் சில தவறான நம்பிக்கைககளிலும் சரி, பெண்- பெண் காதல் உறவை நாம் பார்ப்பது வேறுவிதமாக. தம்மால் ஆண்களுடன் உடலுறவுவில் ஈடுபட முடியாதவர்கள் ஈடுபடவிரும்பாதவர்கள், அதில் அருவருப்பைக் கொண்டவர்கள் தான் இத்தகைய பெண் - பெண் பாலுறவில் ஈடுபடுகின்றார்கள் என்பதே பொதுவான எம் நம்பிக்கை. பெண் - பெண் பாலுறவை மட்டுமன்றி ஆண் - ஆண் பாலுறவையும் இப்படி ஒரு வடிவத்துள் வைத்தே பார்ப்பதுண்டு. தவிரவும் இவர்களிடையே உருவாகும் காதலைக்கூட முற்றிலுமான பாலுணர்வு வயப்பட்டதாகவே நாம் நம்புவது வழக்கம். ஆனால், அவர்களுக்கிடையிலும் காதல் உச்ச நிலையில் காணப்படுவதே உண்மை. இந்த உண்மையை இச்சினிமா அழகாக வெளிக் காட்டுகின்றது. சீதாவிற்கும், ராதாவிற்கும் இடையில் முகிழ்க்கும் உறவு மிகுந்த இயல்பாகவே காட்டப்பட்டுள்ளது. அவர்களின் முதல் முத்தம், கலவி, இறுதிக் காட்சி வரை இவ் உணர்வு வெளிக்காட்டப்படுகின்றது. ஆணிலைவாத சிந்தனைகளும், அதன் வயப்பட்ட நடைமுறை பழக்க வழக்கங்களும் பெண்ணைக் கேவலமாகப் பார்க்கும் யதார்த்தத்தை சில காட்சிகள் இலகுவானதாகவே எமக்குள் புகுத்துகின்றன. தன் மனைவி ராதாவை சீதாவுடன் உடலுறவில் ஒன்றாகப் பார்த்த கணவன் தன் ஆண்மை மீது சந்தேகங் கொள்வது. அதன் வழியே அவளை நோக்கி ''நான் ஆண்மையற்றவனா'' எனக் கேட்பது என்பன எமக்குள் இயக்குநர் எழுப்ப விரும்பிய கேள்விகளை எழுப்புகிறது. ஏன் இந்தக்கேள்வி? இன்னும் கூட குடும்பம் ஒன்றினுள் ஆண் தன் மனைவியை உடலுறவில் ஈடுபடுத்துவதை தன்னுடைய ஆண்மையை வெளிக்காட்டக் கிடைத்த சந்தர்ப்பமாகவே கருதுகின்றான். காதல் நேசத்திற்கு அப்பால் திருமணம் என்பதே பெண்ணை பாலுறவில் ஈடுபடுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட வழிமுறையாகவே கருதப்படுகின்றது. இதன் ஊடாகவே அவனால் இக்கேள்வி கேட்கப்படுகின்றது. தான் இன்றி, ஆண் துணையின்றி பெண் பாலுணர்வுத் தேவையை இன்னொரு பெண் உதவி கொண்டு பூர்த்தி செய்வது அவனது ஆண்மைக்கு எதிரான ஒரு விடயமாகவே பார்க்கப்படுகின்றது. அவ்வுறவிற்கு பின்னாலுள்ள அன்பு, காதல், பெருவிருப்பு என்பவற்றைப் புரிந்து கொள்ள அவனது ஆணிலைச் சிந்தனை தடுத்து விடுகின்றது. இக்காட்சியில் மட்டும் இன்றி இன்னும் சில காட்சிகளிலும் இவை நன்கு சித்திரிக்கப்படுகின்றன.

இங்கு வரும் இரு பெண்களுமே எவரிடமிருந்தும் அன்போ, அங்கீகாரமோ கிடைக்காத நிலையிலேயே ஒருவர் மீது இன்னொருவர் காதல் கொள்ள வேண்டி வருகின்றது. சூழ்நிலையின் விளைவாகவே அதன் எதிர்தாக்கமாகவே இது உருவாவதாகவே சித்திரிக்கப்படுகின்றது. இங்குதான் கேள்வி எழுகிறது. பெண்ணிற்கு ஆணிடம் இருந்து இவை கிடைக்கும் போது ஓரின குடும்ப அமைவின் அவசியம் என்ன? ஆணும் பெண்ணும் உறவு கொள்ள/ காதல் கொள்ள அவசியப்படாத இக்காரணம் இங்கு அவசியமாவது அதன் இயல்பான தன்மையை, காதல் உருவாகும் இயல்பான காரணங்களை நிராகரிக்கின்றது அல்லவா?

இறுதியில் பெண்கள் தாம் ஒன்றாக இருக்க தீர்மானிக்கின்றனர். இங்கும் இன்னொருவரின் சுதந்திரத்தில் மற்றவர் தலையிட வழிவகுக்கும் ஒரு கட்டமைப்பாக, குடும்பமாக உருவாவதை எவ்வாறு எதிர் கொள்ளப் போகின்றனர்? தற்போதைய குடும்ப அமைப்பிற்கு மாற்றீடாக முன்வைக்கப்படும் ஓரின குடும்ப அமைப்பு இதனை எவ்வாறு எதிர் கொள்ளும்? இவ்விசாரணைகள் எமக்குள் எழும்புகின்றன; பதில்கள் இல்லாமல்.


காட்சி அமைப்புகளில் உள்ள அழகியல் தன்மைகள், அதற்கு பின்னால் உள்ள ஏ.ஆர்.ரகுமானின் (சில இடங்களில் ஒத்துப் போகாவிடினும் கூட) இதமான இசைத் தொகுப்பு என்பன இப்படத்தை அழகியல் ரீதியில் உயர்த்துகின்றன. குறிப்பாக புல்வெளியில் சிறுமிக்கான விளக்கக் காட்சிகள் ஒரு சிறந்த குறியீட்டு காட்சியாகவும், ரம்மியமாகவும் அமைந்துள்ளன. இவற்றிற்கு மத்தியில் இச்சினிமா பேசும் அரசியலான பெண்ணியம் தீவிரமாக இல்லாவிடினும் ஓரளவிற்கேனும், வர்த்தக சினிமாவிற்குரிய அம்சங்களுடன் இணைந்து தன்னை வெளிப்படுத்துகின்றது.

— அ. ரஜீசன்..

www.tamilarangam.net



# பேரினமயமாக்கலுக்கு எதிரான எழுச்சிகளை அடக்க வந்த திட்டம்!









இலங்கையின் அரசியல் யாப்பு வரலாற்றில் பேரினமயமாக்கலுக்கான ஆரம்பங்கள் 1921 மானிங் சீர்திருத்தத்துடனேயே துளிர்விடத் தொடங்கியிருந்தன. அச் சீர்திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையே இதன் தொடக்கப் புள்ளியாக விளங்கியது. தொடர்ந்து வந்த டொனமூர் சீர்திருத்தங்கள், இவை விரிவாக்குவதற்கான வழிகளைத் திறந்து விட்டன.

எனினும் பேரினமயமாக்கலுக்கான கட்டுப்படாத அடிப்படைகளை சோல்பரி அரசியல் திட்டமே வழங்கியிருந்தது. இதற்கு முன்னைய யாப்புகள் சுதந்திரத்திற்கு முன்னரான யாப்புகளாக இருந்தமையினால் பிரித்தானிய ஆட்சியாளரின் கட்டுப்பாடுகளையும் மீறி பேரினமயமாக்கலுக்கான அடிப்படைகளை இயல்பாகக் கொடுக்கக் கூடியதாக இருக்கவில்லை. சோல்பரி யாப்பு சுதந்திரத்தின் பின்னரான யாப்பாகவும் இருந்தமையினால் இயல்பாகவே அதற்கான அடிப்படைகளைப் பெற்றுக் கொடுத்தது.

இச் சோல்பரி யாப்பு சுதந்திரத்திற்கு முன்னரான யாப்பாக இருந்தமையினால், தமிழர்களினதும் இந்திய அரசினதும் நிர்ப்பந்தங்கள் காரணமாக சிறுபான்மையினர் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சேர்க்க வேண்டிய நிலைக்கு யாப்பினை உருவாக்கியவர்கள் தள்ளப்பட்டனர். விளைவு சிறுபான்மையோர் காப்பீடுகள் என்ற வகையில் சில பகுதிகள் அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டன. அரசியல் யாப்பின் 29ஆவது பிரிவு இதன் முக்கிய ஏற்பாடாக விளங்கியது.

இக்காப்பீடுகள் பெயரளவு காப்பீடுகளாக இருந்தபோதும் ஒரு முழுமையான பேரினமயமாக்கலுக்குத் தடையாக விளங்கின. இவற்றை மீற முற்பட்ட போதெல்லாம் தமிழரசுக் கட்சி பாரியளவு பிரச்சாரத்தினை மேற்கொண்டது மட்டுமல்லாமல் மக்களை இணைத்து போராட்டங்களையும் நடாத்தியது.

1956ஆம் ஆண்டு காலிமுகத்திடல் சத்தியாக்கிரகப் போராட்டம், 1957 திருமலை யாத்திரை, 1961ஆம் ஆண்டு தமிழ்ப்பிரதேசம் தழுவிய சத்தியாக்கிரகப் போராட்டம், கோமறைக் கழகம் வரை சென்ற கோடீஸ்வரன் வழக்கு என்பன போராட்டங்களிலும் பிரச்சாரங்களிலும் முக்கிய இடங்களை வகித்தன.

இப் போராட்டங்களும் பிரச்சாரங்களும் தமிழர் போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தோடு சிங்கள ஆட்சியாளர்களுக்கு அரசியல் யாப்பையே மீறிய ஆட்சியாளர்கள் என்ற அவப்பெயரையும் பெற்றுக் கொடுத்தது. இதனால் இதனை நீக்க வேண்டும் என்பதில் பேரினவாதிகள் குறியாக இருந்தனர்.

1972 அரசியல் திட்டம் யாப்பு வழியில் இருந்த மேற்கூறிய தடைகளை நீக்கியதோடு தான் மேற்கொள்ளும் அனைத்துப் பேரினமயமாக்கல் நடவடிக்கைகளையும் யாப்பு வழிமுறைகளினூடு செய்வதற்கான வழிகளைத் திறந்து விட்டது. இதனூடு பேரினமயமாக்கலை முழுமையாக்கும் கைங்கரியத்தினை செய்து முடித்தது.

இப்பேரினவாத முழுமையாக்கல் தமிழ் மக்களை மைய அரசியலிலிருந்து அந்நியமாக்கியது. அவர்கள் தனி நாட்டுப் போராட்டத்தினை முன்னெடுக்க ஆரம்பித்தனர். தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், தமிழ் ஈழ விடுதலை இயக்கம், போன்ற இளைஞர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அமைப்புக்கள் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் போராட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கின. ஈற்றில் தமிழர்களின் மிதவாத அமைப்பான தமிழர் விடுதலைக் கூட்டணி 1976இல் வட்டுக்கோட்டையில் நடாத்திய முதலாவது மாநாட்டில் தமிழ் ஈழப் பிரகடனத்தை ஒரு தீர்மானமாக எடுத்தது. தொடர்ந்து 1977 தேர்தலை தமிழ் ஈழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பாக பிரகடனம் செய்தது. இத்தேர்தலில் வடக்கு-கிழக்கில் 19 தொகுதிகளில் 18 தொகுதிகளைக் கைப்பற்றியதன் மூலம் மக்களிடமிருந்து தமிழ் ஈழத்துக்கான அங்கீகாரத்தினையும் பெற்றுக் கொண்டது.

இவ்வாறு சகல முனைகளிலும் தனிநாட்டுப் போராட்டம் வளர்ச்சியடைந்து வந்த ஒரு நிலையில் அதனை அடக்க வேண்டிய நிலைக்கு சிங்கள அரசு பேரினவாதிகளால் கட்டாயப்படுத்தப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தேர்தலில் தமக்குக் கிடைத்த ஐந்தில் நான்கு பெரும்பான்மையைப் பயன்படுத்தி இக்கட்டாயத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் புதிய அரசியல் திட்டத்தை உருவாக்க முனைந்தது.

1978 செப்டம்பர் 7ஆம் திகதி புதிய யாப்பு அமுலுக்கு வந்தது. இதன் பிரதான நோக்கங்களாக எழுச்சியடைந்து வரும் தனிநாட்டுப் போராட்டத்திற்கான அடிப்படைகளை அகற்றுவதும் அதனை அடக்குவதும் என்பதே அமைந்திருந்தது.

இவ் அடிப்படைகளை அகற்றல், அடக்குதல் என்பன பேரினமயமாக்கலை அரசியல் யாப்பில் மேலும் வலுப்படுத்துதலும், அதனை நீக்குவதை கடினப்படுத்துதலும், வடக்கு-கிழக்கு இணைய முடியாத வகையில் கிழக்கை சிங்களமயப்படுத்துதல், ஈவிரக்கமற்ற சட்டங்களை உருவாக்கி தமிழரது போராட்டங்களை நசுக்குதல் என்கின்ற மூன்று வழிமுறைகளினூடாகவே மேற் கொள்ளப்பட்டன.

1972 அரசியல் யாப்பில் பேரினமயமாக்கல் முழுமை பெற்றிருந்தாலும் எதிர்கால நிர்ப்பந்தங்களினால் இவை மாற்றங்களுக்கு உள்ளாகக்கூடும் என்ற அச்சம் பேரினவாதிகளிடையே நிலவியிருந்தது. அதனை நீக்கும் வகையிலேயே இதற்குரிய ஏற்பாடுகளை 1978 அரசியல் யாப்பில் சேர்த்திருந்தனர்.

வலுப்படுத்துதல் என்ற வகையில் இரண்டு பிரதான அம்சங்கள் யாப்பில் சேர்க்கப்பட்டன. ஒன்று, பேரினவாதத்தினை யாப்பு ரீதியாக வலுப்படுத்தும் வகையிலான விடயங்களை அரசியல் யாப்பில் சேர்த்தல். இரண்டாவது, அவ் வலுவான விடயங்களை திருத்துவதை கடினமாக்கல் என்பவையே அவை இரண்டுமாகும்.

வலுப்படுத்துதல் என்ற வகையில் முதலாவதாக இலங்கைக் குடியரசு ஒரு ஒற்றையாட்சி அரசு ஆகும் எனக் கூறப்பட்டது. இதன் மூலம் எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கும் அதிகாரத்தினைப் பங்கிடக்கூடிய வகையிலான கூட்டாட்சி அரசு அமைதல் என்பது தடுக்கப்பட்டது.

இரண்டாவதாக அரசின் இறைமை மக்களுக்குரியதாகும் எனக்கூறப்பட்டது. இதன் அர்த்தம் இறைமை என்னும் ஆட்சி செய்யும் அதிகாரம் பெரும்பான்மை மக்களாகிய சிங்கள மக்களிடம் உள்ளது என்பதாகும். இவ் இறைமைகளின் பிரயோகம் பின்வருமாறு இருக்கும் எனவும் கூறப்பட்டது.

"மக்களது சட்டமாக்கற் தத்துவம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தினாலும் மக்கள் தீர்ப்பொன்றின் போது மக்களினாலும் பிரயோகப்படுத்தப்படுதல் வேண்டும்.

இதன் அர்த்தம் சட்ட ஆக்க அதிகாரம் சிங்கள உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்றத்திடமும் மக்கள் தீர்ப்பு என்ற வகையில் பெரும்பான்மை மக்களாக சிங்கள மக்கள் இருப்பதால் அவர்களிடமும் இருக்கும் என்பதாகும்.

அதே வேளை அரசியல் யாப்பின் 76வது பிரிவில் இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1. "பாராளுமன்றம் அதன் சட்டமாக்கற் தத்துவத்தை துறத்தலோ எந்த விதத்திலும் பாராதீனப்படுத்துதலோ ஆகாது. என்பதுடன் ஏதேனும் சட்டமாக்கற் தத்துவம் கொண்ட ஏதேனும் அதிகாரத்தை நிறுவுதலுமாகாது."

இவ் ஏற்பாடு எதிர்காலத்தில் சட்ட ஆக்க அதிகாரத்தில் தமிழ் மக்கள் பங்கீட்டினை பெற்றுக் கொள்வதைத் தடுக்கின்றது. குறைந்தபட்சம் கூட்டாட்சி என்ற வகையிலாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு வரும் போது தனது தாயகத்தின் சட்ட ஆக்க அதிகாரம் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும். இவ் ஏற்பாடு அதனை இல்லாமல் செய்கின்றது.

2. "இலங்கையின் பாதுகாப்பு உள்ளிட்ட மக்களது ஆட்சித்துறைத்தத்துவம் மக்களால் தெரிவு செய்யப்படும் குடியரசின் ஜனாதிபதியால் பிரயோகப்படுத்தல் வேண்டும்."

இங்கு 75 வீதத்திற்கு மேல் பெரும்பான்மை இனத்தவர் உள்ள நாட்டில் சிறுபான்மை இனத்தவர் எவரும் ஜனாதிபதியாக வர முடியாது.

எனவே நிர்வாக அதிகாரம் சிங்கள மக்களிடம் உள்ளது என்பதே இவற்றின் அர்த்தமாக உள்ளது.

3. மேலும் மக்களின் நீதி முறைத்தத்துவமானது, பாராளுமன்றத்தினாலும் பாராளுமன்றத்தினால் உருவாக்கப்பட்ட நீதிமன்றங்களினாலும் அரசியல் யாப்பினால் அங்கீகரிக்கப்பட்ட நீதிமன்றங்களினாலும் மேற்கொள்ளப்படும்.

இங்கு பாராளுமன்றமும் அரசியல் யாப்பும் பேரின ஆதிக்கம் உள்ளதாக இருப்பதால் அதன் மூலம் உருவாக்கப்பட்ட நீதிமன்றங்களிலும் அவ் ஆதிக்கமே மேலோங்கி உள்ளது. இந்த வகையில் நீதி அதிகாரமும் சிங்கள மக்களிடமே கொடுக்கப்பட்டுள்ளது.

மூன்றாவதாக பேரினவாத குறியீடுகளுக்கு அரசியல் யாப்பு அந்தஸ்து கொடுத்தல் என்ற விடயம் அமைந்தது. இதன்படி பேரின குறியீடுகளுடன் உருவாக்கப்பட்ட தேசியக்கொடி, தேசியகீதம், தேசிய தினம், அரச இலட்சினை என்பவற்றிற்கு அரசியல் யாப்பு அந்தஸ்து கொடுக்கப்பட்டது.

அரசியல் யாப்பின் 6, 7, 8, 9ஆம் பிரிவுகள்இதுபற்றி குறிப்பிடுகின்றன.

6ஆம் பிரிவு

இலங்கைக் குடியரசின் தேசியக் கொடி சிங்கக் கொடியாக இருத்தல் வேண்டும்.

7ஆம் பிரிவு

இலங்கைக் குடியரசின் தேசிய கீதம் "ஸ்ரீ லங்கா தாயே" என்பதாக இருத்தல் வேண்டும்.

8ஆம் பிரிவு

இலங்கை குடியரசின் தேசிய தினம் பெப்ரவரி 4ஆம் திகதியாக இருத்தல் வேண்டும்.

9ஆம் பிரிவு (அரசமதம்)

இது பற்றிக் குறிப்பிடுகின்றது. 1972ஆம் ஆண்டு அரசியல் திட்டத்தைப் போலவே இவ் அரசியல் திட்டத்திலும் பௌத்தத்திற்கு முதன்மை ஸ்தானம் வழங்கப்பட்டது. அந்தயாப்பில் உள்ளது போலவே ஏனைய மதங்களின் சுதந்திரங்கள் பேணப்படுகின்ற அதே வேளை பௌத்த மதத்தினை பேணி வளர்த்தலும் பாதுகாத்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும் எனவும் கூறப்பட்டது.

## யாப்பு திருத்தங்களை கடினப்படுத்துதல்.

யாப்பிலுள்ள ஏற்பாடுகளை விட அதனைத் திருத்துவதிலுள்ள கடினமான வழிமுறைகளே ஏற்பாடுகளை மேலும் வலுவுள்ளதாக மாற்றின. அதன்படி இலங்கைக் குடியரசின் இறைமை சம்பந்தமான ஏற்பாடுகளை மாற்றுதல், இலங்கைக் குடியரசின் தேசிய தினத்தினை மாற்றுதல், பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்ட முதன்மை ஸ்தானத்தை மாற்றுதல் போன்றவற்றை திருத்த வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு தேவைப்படுவதோடு மக்கள் தீர்ப்பு ஒன்றின் மூலம் மக்களின் சம்மதமும் அவசியம் எனக் கூறப்பட்டது.

பேரினமயப்பட்ட பாராளுமன்றமும் பேரினமயப்பட்ட சிங்கள மக்களும் இருக்கும் போது இத்திருத்த முறை நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்று என்பது இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியதே. அரசியல் யாப்பினை உருவாக்கியவர்களின் எண்ணமும் அதுதான். எந்தக் காலத்திலும் பல்லினத்தன்மை கொண்ட யாப்பிற்கு இடம்கொடுக்கக்கூடாது என்பதில் அவர்கள் தெளிவாக இருந்தார்கள்.

இக்கடினத்தன்மை இனப்பிரச்சினைக்கான தீர்வினைத் தட்டிக் கழிப்பதற்கும் காலம் கடத்துவதற்கும் உதவியிருந்தது என்றே கூற வேண்டும். தமிழர் போராட்டங்கள் சர்வதேச ரீதியாக பிரபல்யமடைந்து பல பக்கங்களில் இருந்தும் பிரச்சினைகளைத் தீர்க்கக் கோரி அழுத்தங்கள் வரும் போது அதை தட்டிக் கழிப்பதற்கும் காலம் தாழ்த்துவதற்கும் இவையே உதவியிருந்தன.

பிரச்சினையைத் தீருங்கள் என அழுத்தங்கள் வரும் போதெல்லாம் ஆட்சியாளர்கள் கூறுகின்ற பதில் இதுதான். "எம்மால் தனித்து மட்டும் இதனைத் திருத்த முடியாது. பராளுமன்றத்தில் சகலரது ஆதரவும் தேவை. அத்தோடு மக்களின் ஆதரவும் தேவை. அதற்கான முயற்சிகளையே நாம் செய்து வருகின்றோம்."

பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தமிழ்க் கட்சிகள் பிரச்சினையைத் தீர்க்கும்படி அவரை வற்புறுத்தியபோது அதற்கு அவர் கூறிய பதில்.

"பாராளுமன்றத்தில் எனக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை இதனால் தனித்து என்னால் தீர்வினைக் கொண்டுவரமுடியாது. வேண்டுமானால் வட்டமேசை மாநாட்டைக் கூட்டுகிறேன் அதில் சகல கட்சிகளும் ஒரு உடன்பாட்டுக்கு வரட்டும்" என்பதாகும்.

திருத்துவதில் கடினமாக இருந்த மேற்கூறிய விடயங்களை விட மேலும் சில விடயங்கள் பேரினமயமாக்கலைக் கெட்டியாக்கியிருந்தன. இதனைத் திருத்துவதற்கு பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. ஆனால் மக்கள் தீர்ப்பு தேவையில்லை. அவை எவை எவ்வாறு இருந்தன என்பதைப் பார்ப்போம்.

செம்பாட்டான்

வரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பெருந்தோட்ட உற்பத்தி உறவுடன் தொடர்புடைய உலகப்பெருந்தோட்ட மக்களிடையே ஒரு உந்து சக்தியை அளிக்கக்கூடிய வேலை நிறுத்தங்கள் இரண்டு இவ் ஆண்டு நடை பெற்றன.

உலகின் மிகப்பெரிய தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளான கென்யாவிலும், இலங்கையிலும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். கென்ய தொழிலாளர்களின் சமூக, வாழ்க்கை நிலைமைகளை விட மிகவும் மாறுபட்ட இலங்கையின் பெருந்தோட்டத் துறையில் 99% இந்திய வம்சாவளித் தமிழ் தொழிலாளர்களுடன் 0.1% சிங்கள முஸ்லிம் தொழிலாளர்களும் இணைந்து வர்க்க ரீதியாக அணி திரண்ட இவ்வேலை நிறுத்தத்தில் ஆறு இலட்சம் தொழிலாளர்கள் இறங்கினர்.

பெருந்தோட்டத்துறையில் 172 வருட கால வரலாற்றிலும், சுதந்திர இலங்கையின் 50 வருட வரலாற்றிலும் மிகவும் புறக்கணிக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட மக்களாக வாழ்க்கை வசதிகள், சீவனோபாய வசதிகள் மறுக்கப்பட்ட மக்களாக, அரசியல் பொருளாதார, உரிமைகள் மறுக்கப்பட்டு நாடற்றவராக, வீடற்றவராக கல்வி, தொழில் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டவர்களாக, சுகாதார வசதியற்றோராக, வயிற்றுப் பாட்டுக்கு தேவையான கூலியற்றவராக, தினக்கூலிகளாக பஞ்சப்பராரிகளாக இம்மக்கள் நடத்தப்படுகின்ற நிலைமையே தொடர்கின்றது.

இம்மக்களின் அவல வாழ்வுக்கு பிரித்தானிய ஏகாதிபத்தியமும், இந்திய, இந்துத்துவ, சாதிய, கிராமிய அமைப்பும் எப்படியெல்லாம் காரணமாகியதோ அதே போல நவீன இந்திய, இலங்கை ஆளும் வர்க்கங்களும், மலையக தொழிலாளரிடையே எழுந்த அரசியல் தொழிற்சங்க இயக்கங்களும் காரணமாயின. இடதுசாரிகளாலும், வலதுசாரிகளாலும், தொண்டமான் தலைமையிலும் அதன் பின்னரும் கிளைவிட்ட 7000 தொழிற் சங்கங்களாலும் அதேவிதமான துரோகங்கள் செய்யப்பட்டுள்ளன.

1992ம் ஆண்டு தோட்டங்கள் 23 தனியார் கம்பனிகளிடம் கையளிக்கப்பட்டன. 1992 நவம்பர் மாதம் வருடாந்த சராசரி வரியாக தேயிலை மீது விதிக்கப்பட்ட வரியை அரசு ரத்து செய்தது. தோட்ட தொழிற்சங்கங்கள் சம்பள உயர்வு கோரிய போது மறுக்கப்பட்டது. பிரேமதாசா தலையிட்டு 20/= சம்பளவுயர்வுக்கு வழிவகுத்தார். அதில் மீதி 8/=வை வழங்க டி.பி.விஜேதுங்க மறுத்தார். பின்னர் இரண்டு அடையாள வேலை நிறுத்தங்களை கூட்டு கமிட்டி நடத்தியது. 1996ல் 5 நாள் வேலைநிறுத்தம் நடத்தப்பட்டது. ஆனர்ல், தொழிலாளர்கள் வெறும் 2ரூபா50சத சம்பள அதிகரிப்பை மட்டுமே பெற முடிந்தது.

1992-97காலப்பகுதியில் தோட்டக் கம்பனிகள் வரிவிலக்கு காரணமாக வருடாந்தம் சராசரி 2500 கோடி ரூபாவை பெற்ற அதேவேளை 1,20,000 தொழிலாளரை வேலையிலிருந்து நீக்கியதன் மூலம் கிடைத்த மீதப்படுத்தல்கள், தோட்டங்களில் இருந்த மரங்கள், இரத்தினக்கற்கள், தரிசுநில பயிர்செய்கைகள் என சுரண்டி கொழுத்தன இக்கம்பனிகள். 1997ம் ஆண்டுவரை தோட்ட நிர்வாகிகள், பணிப்பாளர்களின் சம்பளம் பல மடங்கு அதிகரித்துள்ளது. ஆனால் தொழிலாளர் சம்பளம் அவர்களது சீவனோபாயத்திற்கே போதாததாக இருந்து வருகிறது. இரண்டு டொலருக்கும் குறைவான நாள் சம்பளம் வழங்கப்படும் போது தேயிலை ஒரு கிலோகிராம் 3-5 டொலருக்கு விற்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ கிராமுக்கு சராசரி இலாபம் 50/= வரை கிடைத்துள்ளது.

இந்நிலையில் 1996 ஏப்ரல் வேலை நிறுத்தம் போலவே இத்தடவை அனைத்து மலையக தொழிற்சங்கங்களும் இணைந்து நடத்திய வேலை நிறுத்தத்தில் தொழிற்சங்கங்கள் முதலில் 150/=, 125/= கோரிக்கைகளை முன்வைத்தன. பின்னர் படிப்படியாகக் கீழிறங்கி 105/= எனக் குறைத்துக் கொண்டன.

ஆனால், கடந்த 5 வருடத்தில் வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1000 புள்ளிகளால் அதிகரித்துள்ளது. இதனோடு வரவு செலவுத்திட்ட அதிகரிப்பும் கிடைத்திருப்பின் 150/= திரட்டிய சம்பளம் கிடைத்திருக்கும். ஆனால், தோட்ட தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திற்கும், தோட்ட முதலாளிகளுக்கும் முதுகு சொறிந்ததன் விளைவு தாம் முன்வைத்த அற்ப தொகையில் ஒரு ரூபாவைக் கூட வென்றெடுக்க முடியாமல் போயுள்ளன.

கடந்த 3.2.1998 இல் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் கம்பனிகள் 93/= சம்பளம் தர உடன்பட்டன. தொழில் அமைச்சர் தலையிட்டு 95/= வழங்குமாறு ஏற்பாடு செய்தார். ஆனால், சகல தொழிற்சங்கங்களும் ஏற்க மறுத்து வெளிநடப்புச் செய்தன. ஆனால், இ.தொ.கா. தலைவர் தொண்டமானும் கூட்டுக் கமிட்டித் தலைவர்களில் கந்தையா, இராமையா, கிருஷ்ணசாமி வகையறாக்களும் பின்கதவு பேரங்கள் நடத்தி 95/= சம்பள உயர்வைப் பெற உடன்பட்டுள்ளனர். தேயிலை விலை அதிகரிப்புக்கேற்ப 6/= போனசாக வழங்கப்படுமெனவும், இதற்கு மாதாந்தம் வழங்கப்படும் வேலை நாட்களில் 60% நாட்களுக்கு வேலை செய்யவேண்டுமெனவும், அடுத்த 18 மாதங்களுக்கு (2000 ஆண்டுவரை) சம்பள உயர்வு கேட்பதில்லை எனவும், துரோக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இவ்வொப்பந்தத்தை எதிர்த்து வெளியேறியதன் மூலம் சந்திரசேகரன், செல்லசாமி, அஷ்ரப் அஸீஸ் ஆகியோர் தொண்டமானிலிருந்து தாம் வேறுபட்டு நிற்பதாகக் காட்ட முனைந்தாலும்,பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் அவர்களது எதிர்ப்புக் கூட ஒரு நாடகமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. அவர்கள் போராட்டத்தைத் தொடரவோ, பதவிகளைத் தூக்கி எறியவோ தயாராக இல்லையென்பதும் குறிபபிடத்தக்கதே!

உலகமே வியக்கும் வண்ணம் 6 இலட்சம் தொழிலாளர்கள் வீதியில் இறங்கியதும், ஆர்ப்பாட்டங்கள் செய்ததும், கடையடைப்பு நடத்தியதும், பொலிசாருடன் மோதியதும் 10 நாட்கள் வேலைநிறுத்தம் செய்ததும் வெறும் 10 தனிநபர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு வீணடிக்கப்பட்டு விட்டது. வரலாறு மீண்டும் வஞ்சித்து விட்டது.

ஏகாதிபத்தியங்களின் ஏஜென்டுகளும், சிங்கள நாட்டின் ஜனாதிபதியுமான சந்திரிகாவுக்கு தோட்ட தொழிலாளர் மீது பாசம் பொத்துக் கொண்டு வருவதாக அரச தொடர்பு சாதனங்கள் உளறிக் கொண்டிந்தன. ஆனால், கம்பனி முதலாளிகளதும் உலக வங்கியினதும் பிரதிநிதியாக நின்று 95/= சம்பளத்தை பெறுமாறு நிர்ப்பந்தித்ததன் மூலம் தனக்கு யார் மீது பாசம் என்பதை அவர்தெளிவாக வெளிக்காட்டியுள்ளார்

சுதந்திர நாட்டின் மலையக மக்களுக்கு சிங்கள -பௌத்த அரசாங்கங்கள் துரோகம் இழைத்த போதெல்லாம், தொண்டமானின் அனுசரணையுடன் தான் அவை நடந்துள்ளன என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. அந்தப் பட்டியலில் இப்போது கந்தையா, இராமையா, கிருஷ்ணசாமி வகையறாக்கள் சேர்ந்திருக்கிறார்கள். ஜனாதிபதியையும், கம்பனிகளையும் கடவுளராகவே நினைத்து உரிமைகளைப் போராடிப் பெறுவதற்குப் பதிலாக சலுகைகளுக்காக காலை நக்கும் அரசியல் பண்பாட்டைக் கட்டி வளர்த்து, அதைத் தோட்டங்களில் உள்ள தோட்டத் தலைவர்களுக்கு புகட்டி கங்காணியாகவும், தலைவராகவும், நல்ல அடிமையாகவும் வாழ வைக்கிற துரோகத் தலைமைகளுக்கு வரலாறு கற்றுக் கொடுக்கும்.

- எவ்வித போராட்டமும் இன்றி சலனமுமின்றி பெற்றிருக்க கூடிய 95/=வுக்காக தொழிலாளர்களை 10நாட்கள் வேலை நிறுத்தம் செய்ய வைத்தது ஏன்?
- தொழிலாளர்கள் வீதியில் இறங்கிப் போராடிய போது தொண்டமான் இந்தியாவுக்கு ஓடியது ஏன்?
- சகல தொழிற்சங்கங்களும் ஒன்றாகப் போராடிய போது துரோக ஒப்பந்தம் ஏற்பட்டது எவ்வாறு?
- ஏன் உலகறிய இந்தப் பெரிய நாடகம் நடத்தப்பட்டது?
- வேலைநிறுத்தம் செய்யச் சொன்ன சக்திகளின் அரசியல் என்ன?
- அட்டனில் துப்பாக்கி சூடு நடத்தக் கட்டளையிட்டது யார்?
- துரோக ஒப்பந்தத்தை ஏற்காத


## தொண்டமானின் துரோகங்கள்

- 1948 பிரசாவுரிமை சட்டத்திற்கு எதிராகப் போராடாமை.
- 1949 இந்திய பாகிஸ்தானிய பிரசாவுரிமை சட்டத்தை ஏற்றமை.
- 1954 நேரு, கொத்தலாவை உடன்பாட்டுக்கு தலை சாய்த்தமை.
- 1964 சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்திற்கு தலை சாய்த்தமை.
- 1974 சிறிமா - இந்திரா ஒப்பந்தத்திற்கு தலை சாய்த்தமை.
- 1974 பஞ்சப்படி 17.50 போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தமை.
- மாதச் சம்பளப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தமை.
- 1977 ஜெயவர்தனவை ஜனாதிபதியாக்கியமை.
- ஐ.தே.கவின் 17 வருட மிலேச்சர்களின் ஆட்சிக்கு முட்டுக் கொடுத்தமை.
- 1956, 1958, 1977, 1979, 1981, 1983, 1984 வன்செயல்களை கைகட்டிப் பார்த்திருந்ததோடு அதற்குக் காரணமான ஆட்சியினரை பாதுகாத்தமை.
- 1971 மக்கள் விடுதலை முன்னணியை அழிக்கத் துணை நின்றமை.
- 1989 மக்கள் விடுதலை முன்னணி கிளர்ச்சியை அடக்கவும், ஒரு இலட்சம் இளஞரை எரிக்கவும் துணை போனமை.
- 1977 வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை காட்டிக் கொடுத்தமை.
- 1983இல் தமிழ்த் தலைவர்கள் பாராளுமன்றத்தை விட்டு விரட்டப்பட்ட போது அமைச்சராக வீற்றிருந்தமை.
- 28 வருட கால அவசரகால ஆட்சிக்கு ஆதரவளித்தமை.
- அவசரகாலச் சட்டத்தை ஆதரிப்பதன் மூலம் மலையகத் தமிழ் இளைஞரை கைது செய்யவும், வதைக்கவும் துணை போகின்றமை.
- பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஆதரித்து சத்தியப் பிரமாணம் செய்தமை, தோட்டத் தொழிலாளரை சத்தியப்பிரமாணம் செய்யக் கோரியமை.
- போலி வீட்டுரிமை சான்றிதழ் வழங்கி ஏமாற்றியமை. (இரண்டு தடவை.)
- இந்தியாவில் இருந்து ஆசிரியர் கொண்டு வரப் போவதாக பொய் கூறியமை.
- பேரனை தலைவனாக்க மக்களை தாரை வார்த்தமை.
- அடையாள வேலைநிறுத்தம் செய்தபோதெல்லாம் தொழிலாளரைக் காட்டிக் கொடுத்தமை.
- 1977 டெவன் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தமை.
- 1986 மலையக எழுச்சியை ஒடுக்க துணை போனமை.
- 1988 பொது வேலை நிறுத்தத்தைக் காட்டிக் கொடுத்தமை.
- 1996 ஏப்ரல் வேலை நிறுத்தத்தைக் காட்டிக் கொடுத்தமை.
- 1998 வேலை நிறுத்தத்தைக் காட்டிக் கொடுத்தமை.
- சாகும்வரை அமைச்சராக இருக்கப் போவதாகப் பிரகடனப்படுத்தியமை.
- மலையக சிங்கள குடியேற்றங்களுக்கு மறைமுக ஆதரவு வழங்கியமை.
- மலையகத்தின் தொழிலாளிகளின் கொலைகளுக்கு உடந்தையான அரசாங்கங்களை ஆதரித்தமை.
- கலன், மடகும்புர, மஸ்கெலியா, சென்ன், செர்கஸ் தோட்டம் நடத்திய போராட்டங்களைக் காட்டிக் கொடுத்தமை.
- போராட்ட தொழிலாளர்களை பொலிசாரிடம் காட்டிக் கொடுத்தமை.
- மலையகத்தில் மாற்றுக் கருத்தும், மாற்று இயக்கங்களும் எழுந்த போதெல்லாம் அவற்றை ஒடுக்கும் சக்திகளை ஊக்குவித்தமை.
- அகிம்சாமூர்த்தி எனக் கூறிக்கொண்டே பல தொழிலாளரை தம் குண்டர்கள் கொன்றதை நியாயப்படுத்தியமை.
- தமிழ் மக்களுக்கெதிரான யுத்தத்தை வழிநடத்தும் அமைச்சரவையில் இருக்கின்றமை.
- 5,00,000 மக்களை அகதிகளாக்கியும், பாசிச யுத்தம் புரியும் அரசாங்கத்தை ஆதரித்து நிற்பது.
- இந்திய தரகு முதலாளித்துவத்தின் கைக்கூலியாக தொழிற்படுவது.
- இலங்கையின் சிங்கள - பௌத்த பேரினவாத ஆட்சியாளரை ஆதரித்து நிற்கின்றமை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






ற்றுத் தலைமையை
சந்திரசேகரன்,
பின்னடித்தது ஏன்?

க துரோகங்களை
காண்டு தன்னெழுச்சி
தொழிலாளர்கள்
வேலைநிறுத்தத்தில்
போது அதற்குத்
ங்கிச் செல்ல எந்த
லாமல் போனதேன்?

ளுக்கு தெளிவான
ல. சம்பள உயர்வு
ஏதாவது உரிமை
ாளுமன்ற கதிரை
திருக்கலாம். அம்மைச்
துறந்திருக்கலாம்.
ன்னின்[illegible]ண்ணா
நக்கல[illegible]ிப்படி
அகிம்சாமூர்த்தி
ன் போர்க்குணமிக்க
ளத் தூண்டி

றயில் தனியார்
பின்னர் ஏற்பட்ட
விளைவாக
விட்டு ஏறத்தாழ
லாளர்கள் விலகி

வணை

றுப்பினர் சரிவு

| | 1990/91 | 1991/92 | 1992/93 | 1993/94 | 1994/95 | 1995/96 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | .42,127 | 1,31,870 | 1,25,145 | 1,24,145 | 1,15,371 | 91,638 | 91,638 |
| | - | 10,257 | 6725 | 1000 | 8774 | 23,733 | 50,489 |

காரியாலயங்களை
பர்களுக்கு சம்பளம்
ர்சார, தொலைபேசி
செலுத்தவோ
ற்பட்டுள்ளது. இதே
ச்சங்கம், தொழிலா
என்பவற்றுக்கும்
சங்கொடிச் சங்கம்
டத்தை முன்வைத்
அலுவலகங்களை
ர வேலைநீக்கவும்

கள் அரச சார்பற்ற
தொடர்பு கொண்

டும், அரச சார்பற்ற நிறுவனங்களை ஆரம்பித்தும் நிதி திரட்டலை தொடங்கியுள்ளன.

இந்த இக்கட்டான நிலையில் கடந்த மார்ச் 1997 நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில், மக்கள் முகத்தில் அறைந்திருந்தனர். தொழிற்சங்கங்களின் துரோகத்திற்கும், பொதுஜன முன்னணியின் இனவாதயுத்தத்திற்கும் எதிராக வாக்களித்தனர். இம் மக்கள் 1994 ஜனாதிபதி தேர்தலில் முழுமையாக பொதுஜன முன்னணியையும், ஜனாதிபதி சந்திரிகாவையும் ஆதரித்திருந்தனர்.

இந்த வீழ்ச்சிப் போக்கினையும் அவமானத்தையும் திசைதிருப்பி மக்களிடம் வீரபிரதாபம் காட்டவும் பேட்டை ரவுடியிசம் மூலம் மக்களை ஏமாற்றவுமே ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தப்பட்டன. 1997 மார்ச் உள்ளூராட்சித் தேர்தலில் பொகவந்தலாவை, தலவாக்கலை, நோர்வூட் பகுதியில் கேள்வி கேட்ட இளைஞர்களை வீடுதேடி அடித்துப் பிடித்த ஆறுமுகம் தொண்டமான், இன்றைய அட்டன் ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கிய போதும் பொலிஸ் தாக்குதல் தொடுக்கவில்லை. ராஜரட்னம் புசல்லாவையில் நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்தை பொலிசார் தடை செய்தனர். ஆனால், மலையகம் எங்கும் 300க்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டங்களை மக்கள் அமைதியாக நடத்தியிருந்தனர். 60க்கும் மேற்பட்ட நகரங்களில் கடையடைப்பு நடத்தினர். பொலிஸ் தாக்குதலுக்கு எதிராக மலையக தொழிற்சங்க தலைவர்கள் வாய்த் திறக்கவில்லை.

### சாதக நிலைமைகள்

- வேலைநிறுத்தம் ஆரம்பமான போது அரசு அதன் சுதந்திர பொன்விழாவை கூட திட்டமிட்டபடி நடத்த முடியாதிருந்தது.
- கிளிநொச்சியில் பெரும் போர் வெடித்திருந்தது.
- உலக சந்தையில் தேயிலை விலை மிக அதிகமாக இருந்தது.
- கம்பனிகள் 3800கோடி ரூபா வருமானம் பெற்றிருந்தன.
- அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றுபட்டிருந்தன.
- கென்ய தேயிலைத் தோட்டங்களில் வேலைநிறுத்தம் வெடித்தது.
- நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்தது.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகாவால் ஏகாதிபத்திய நிதிமூலதன எஜமானரையோ, கம்பனி முதலாளிகளையோ, புலிகளையோ ஏமாற்ற முடியாது. காலை நக்க காத்துக் கிடக்கும் மலையக தொழிற்சங்க தலைவர்களை மடக்கி பணிய வைத்தார்கள்.

மலையக வரலாறு கண்ட 1956, 1977, 1986 வரிசையில் 1998 மிகுந்த முக்கியத்துவமுடையது. ஆனால் ஒவ்வொரு தடவையும் சொந்த தலைவர்களால் காட்டி கொடுக்கப்படுவதே இம் மக்களின் விதியாகிப் போயிருக்கிறது. 1998இல் மிக முக்கிய திருப்பங்கள் நிறைந்த போராட்டம் நடத்தப்பட்டது.

- எல்லா சங்கங்களும் ஒன்றுபட்டன.
- நகர வர்த்தகர்களின் ஆதரவும் கிடைத்தது.
- தொழிலாளர் வீதியில் இறங்கினார்கள்.
- மாணவர்கள் ஆதரவு கொடுத்தனர்.
- தமிழ் கட்சிகள் ஆதரித்து நின்றன. ஆனால் அனைவரது முதுகிலும் குத்தப்பட்டுள்ளது.

### தொழிலாளரின் ஆத்திரமும் அவமானமும்

13ம்திகதி இரவு வேலைநிறுத்தம் முடிந்தது விட்டது. வேலைக்கு திரும்புங்கள் என வானொலி, தொலைக்காட்சி செய்திகள் குறிப்பிட்டன. ஆனால் 14ம்திகதி சனிக்கிழமை 10 சதவீத தொழிலாளரே வேலைக்குத் திரும்பியதாக அறிவிக்கப்பட்டது. 90% தொழிலாளர் ஆத்திரம் பொங்க செவிமடுக்க மறுத்தனர். இது கரிநாள் என இ.தொ.காவை ஏளனம் செய்தனர்.

ஆத்திரமுற்ற தொழிலாளர்கள் பொகவந்தலாவை, தலவாக்கலை, உடப்புசல்லாவை, அக்கரபத்தனை பகுதிகளில் இ.தொ.காவுக்குஎதிராகவும் தொழிற்சங்க துரோக தினத்துக்காகவும் கறுப்புக்கொடி கட்டப்பட்டது. இ.தொ.கா. அலுவலகம் தாக்கப்பட்டது.

தொழிலாளர்கள் போராடத் தயாராக இருந்த போதும் தலைமை கொடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை. நிலைமையை ஆராய்வதற்காக சந்திரசேகரன் கூறியதோடு மலையக மக்கள் முன்னணி மலையகம் எங்கும் சூறாவளிப் பிரச்சாரம் நடத்துகிறது. ஆனால் மக்கள் யாரை நம்புவது? வரலாற்றில் இன்னொரு துரோகம் இழைக்கப்பட்டு விட்டது.

''நாம் உழைக்கவும், சாகவும் மட்டுமல்ல, வாழவும் பிறந்தோமென மலையகம் ஆர்த்தெழும் போது வரலாற்றை யார் படைக்கின்றனர் என்பது பலருக்குப் புரியக்கூடும்''

**கௌசிகன்**

---

**நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தின் பின்னணி பற்றிக் கூறுங்கள்?**

சம்பள உயர்வுக்கான ஒரு போராட்டத்தை இந்த ஜனவரியில் நடாத்த வேண்டும் என்ற விடயத்தை மலையக மக்கள் முன்னணி தான் முதன் முதலில் முன்வைத்தது. இது தொடர்ாக நாங்கள் தலவாக்கலையிலும், பொகவந்தலாவையிலும் இரண்டு வீதி மறிப்புப் போராட்டங்களை நாங்கள் நடத்தினோம். அதன் பிறகு ஏனைய தொழிற்சங்கங்களும் இதே கோரிக்கையை முன்வைத்தன. ஆரம்பத்தில் சம்பள உயர்வு தொடர்பாகப் பல்வேறு கோரிக்கைகள் தொழிற்சங்கங்களிடையே இருந்தாலும் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் முதல் கட்டமாக ரூபா 125/= சம்பளமாகக் கோருவதாகத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் பின்னர் இத்தொழிற் சங்கங்களிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விளைவாக 105 ரூபா அடிப்படைச் சம்பளமாகக் கோருவது எனத்தீர்மானிக்கப்பட்டது. இதனடிப்படையில் சகல தொழிற்சங்கங்களும் இது தொடர்பாக அறிக்கை விட ஆரம்பித்தன.

இதற்கிடையில் பெப். 3ம்திகதி தொழிலமைச்சர் ஜோன் செனவிரட்னவின் அழைப்பின் பேரில் முதலாளிமார் சம்மேளனம் உட்பட சகல தொழிற்சங்கங்களும் கலந்த கொண்ட பேச்சுவார்த்தை ஒன்று தொழிலமைச்சில் இடம்பெற்றது. அப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட முதலாளிமார் சம்மேளனம் அடிப்படைச்சம்பளமாக ரூபா 93/= தருவதாகவும், இலாபப்பங்காக 5 ரூபா தருவதாகவும் உறுதியளித்தது. அந்நேரத்தில் தொழிலமைச்சர், தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய வாழ்க்கைச் செலவுப் புள்ளியைக் கொடுத்திருந்தால் கிட்டத்தட்ட ரூபா 100ஐத் தொழிலாளர்களுக்குக் கொடுத்திருக்க வேண்டும்.ஆகவே முதலாளிமார் சம்மேளனம் ஏற்கெனவே தீர்மானித்த சம்பள உயர்வோடு இன்னும் 2ரூபாவைக் கூட்டி நூறு ரூபாவாகக் கொடுக்க வேண்டும் என்று தனது அபிப்பிராயத்தைச் சொன்னார். இதை எந்தத் தொழிற்சங்கமும் ஏற்றுக்கொள்ளவில்லை. நாம் அடிப்படைச்சம்பளமாக ரூபா 105ஐ முன்வைத்திருக்கிறோம். எனவே நாம் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என அறிவித்ததோடு இதற்கான போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் கூறின. வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பமாவதைத் தடுப்பதற்காக தொழிலமைச்சர் மீண்டும் ஒரு முறை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். நாங்கள் உட்பட சகல தொழிற்சங்கங்களும் இதனை நிராகரித்ததோடு 5ம் திகதி வேலை நிறுத்தத்தில் குதித்தன.
நகர வர்த்தகர்கள், அரச ஊழியர்கள், மாணவர்கள் எல்லோரும் இப்போராட்டத்துக்கு ஆதரவளித்தார்கள்.

பின்னர், தொண்டமானும் மற்றைய இரு தொழிற்சங்கங்களும் ஒரு உடன்பாட்டிற்கு வந்தார்கள். ஏற்கெனவே சொல்லப்பட்டபடி ரூபா நூறுடன் மேலும் ஒரு ரூபா தந்தால் தங்களுடைய போராட்டத்தைக் கைவிடுவதாகச் சொன்னார்கள்.

இந்த இடத்தில் நாங்கள் அவர்களுடன் வேறுபட்டோம். ஏற்கெனவே 3ம்திகதி நடந்த கூட்டத்தில் இக்கோரிக்கையை வைத்திருந்தால் இவ்வளவு நாட்களும் வேலைநிறுத்தம் செய்ய வேண்டிய தேவை இருந்திருக்காது. மேலதிகமாக ஒரு ரூபா தாருங்கள். நாங்கள் வேலைநிறுத்தம் செய்யவில்லை என்று சொல்லி இருக்கலாம். அப்படிச் செய்திருந்தால், 9 நாட்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. 9 நாட்கள் வேலைநிறுத்தம் செய்ததால் ஒவ்வொரு தொழிலாளியும் சராசரியாக 900/=வை இழந்திருக்கிறார்கள். 900 ரூபாவை இழந்து அவர்கள் பெற்றது ஒரு ரூபா தான். சராசரியாக 25 நாட்கள் வேலை கிடைத்தாலும் கூட மாதம் 25/= தான் மேலதிகமாகக் கிடைக்கிறது. வருடம் முழுவதும் கணக்குப் பார்த்தாலும் கூட ரூபா 300 தான் கிடைக்கிறது. ஆக, அவர்கள் ரூபா 900/=வை இழந்து ரூபா 300ஐத் தான் பெற்றிருக்கிறார்கள். சிலர் சொல்லக்கூடும் வேலைநிறுத்தப் போராட்டம் அதுவும் சம்பளக் கோரிக்கை என்றால் சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்யத் தான் வேண்டும் என்று. ஆனால், 3ம்திகதியே அடிப்படைச் சம்பளம் 95/= ரூபாவுக்கு மேல் கூட்டப்பட வேண்டும் என்றே அவர்கள் எதிர்பார்த்தார்கள். மொத்தமாக 9 நாள் வேலைநிறுத்தத்துக்குப் பிறகும் அதே 95 ரூபா தான் அடிப்படைச் சம்பளம். மேலதிகமாக அவர்கள் கொடுக்க ஒத்துக் கொண்ட இலாபப் பங்குக்கு ஒரு ரூபா தான் கூட்டப்பட்டிருக்கிறது என்பதும் தொழிலாளர் களுக்கு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. ஆகவே தான் அதற்கடுத்த நாள் சனிக்கிழமை தொழிலாளர்கள் எவரும் வேலைக்குத் திரும்பாமல் எதிர்ப்பைக் காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது.

அமைச்சர் தொண்டமான் எட்டாம் திகதி இந்தியாவுக்கு போகு முன் ஜனாதிபதியுடன் சந்தித்துப் பேசி இருக்கிறார்: இதே ஒரு ரூபாவைக்கூட்டித்தரும் உடன்பாடு அன்றே ஏற்பட்டிருந்தது. ஆகவே, இதைத்தான் ஏற்றுக் கொள்வதென்றால் அன்றைக்கே வேலைநிறுத்தத்தைக் கைவிட்டிருக்கலாம். ஆகவே, அன்றைக்கே கை விட்டிருந்தால் தொழிலாளர்களுக்கு 5 நாள் சம்பளமாவது மிஞ்சியிருக்கும். ஆனால், அவர் ஒரு ரூபாய் அதிகரிப்பை ஏற்றுக் கொண்டு இந்தியாவுக்குப் போய் ஓய்வெடுத்தார். அவர் ஓய்வெடுக்கும் ஒவ்வொரு நாளும் இங்கு தொழிலாளர் தமது ஒவ்வொரு நாள் சம்பளத்தையும் இழக்கின்றனர் என்பதை அவர் யோசிக்கவில்லை. எட்டாம், திகதியே அவருக்குத் தெரிந்த முடிவுக்காக அதற்குப்பின்னரும் தொழிலாளர்களை ஊர்வலம் நடாத்த வைத்தது, போராட வைத்தது, வேலைநிறுத்தம் செய்ய வைத்தது எல்லாம் அவருடைய சொந்த அரசியல் நலன்களுக்காகவே என்றே படுகிறது.

**வேறு யார் யார் இவ்வுடன்பாட்டை எதிர்த்தார்கள்?**


எங்களோடு செல்லச்சாமியும், அஷ்ரஃப் அஸீஸும் மட்டுமே இவ்வுடன்பாட்டை எதிர்த்தார்கள்.

**தொண்டமான் இதனை ஏற்றுக் கொண்ட தற்கான காரணம் என்ன என்று நினைக் கின்றீர்கள்?**

தொண்டமான் ஏன் இதனை ஏற்றுக்கொண்டார் என்பது எனக்குத்தெரியவில்லை. கூட்டுக் கமிட்டியைப் பொறுத்தவரை அதற்கு முதுகெலும்பு இல்லை என்றே சொல்ல வேண்டும். தொண்டமான் ஒத்துக்கொண்டார். ஆகவே நாங்கள் என்ன செய்ய முடியும் என்றே அவர்கள் கேட்டார்கள்.

**இதனை நிராகரித்த நீங்கள் சம்பள உயர்வுக் கோரிக்கையைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லவில்லையே?**

தொழிலாளர்களைப் பொறுத்தவரை மனவுறுதி குலையாவிட்டாலும் தொடர்ச்சியாய் பதினொரு நாட்கள் -தொண்டமான் வேலைக்குத் திரும்பச் சொன்னதன் பின்னும் 3 நாட்கள்- வேலை நிறுத்தம் செய்தார்கள். இதனால் பொருளாதார ரீதியாக அதற்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய நிலையில் அவர்கள் இருக்கவில்லை. மறுபக்கத்தில் மற்றைய எல்லாத்தொழிற்சங்கங்களும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளதால் அத்தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களை வேலைக்கு அனுப்பும் முயற்சியில் இறங்கும். அதை முறியடிக்குமளவுக்கு ம.ம. முன்னணி வளர்த்திருக்கிறதா என்பது எங்களுக்குள்ளேயே உள்ள கேள்வி. போராட்டத்தைத் தொடர்ந்து விட்டு அது பிசுபிசுத்ததால் மக்கள் நம்பிக்கையிழந்து விடுவார்கள். இதனால் தான் நாம் தொடர்ச்சியாகப் போராட்டத்தை முன்னெடுக்க முயற்சிக்கவில்லை.



"தொண்டமான்
ஓய்வெடுத்த ஒவ்வொரு நாளும்
தொழிலாளர்
ஒவ்வொரு நாள் சம்பளத்தையும்
இழந்தனர்"

-பிரதியமைச்சர் சந்திரசேகரன்

**வேலை நிறுத்தப் பிரச்சினைக்குப் புறம்பாக ஒரு கேள்வி. மலையகத்தில் அண்மைக் காலமாக மின்மாற்றிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு வருகிறதே இதற்கு யார் காரணம்?**

இது யாரோ திட்டமிட்டுச் செய்யும் வேலை என்றே நான் நினைக்கிறேன். இந்த மாதிரிச் சின்னச் சின்ன வேலைகளை புலிகள் செய்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. காரணம் என்னவென்றால் புலிகள் மலையகத்தில் பெரிதாக எதையும் செய்யவில்லை. மலையகத்தில் அவர்கள் ஊடுருவுவதானால் இந்த மாதிரிச் சின்னச் சின்ன வேலைகளைச் செய்து அரசாங்கத்தை விழிப்படையச் செய்ய மாட்டார்கள்.

மற்றது, இக்குண்டு வெடிப்புக்கள் தொடர்பாகப் பாதுகாப்புப் படைகள் பெரிதாகப் பதற்றமடையவில்லை.

பொதுவாக நிலவும் அபிப்பிராயம் ஒன்றுள்ளது; இங்கும் புலிகள் ஊடுருவுகிறார்கள் எனக் காட்டி யுத்தப் பிரதேசங்களுக்கு இடம்மாறிச் செல்வதைத் தவிர்ப்பதற்காகப் படையினரே இச்சம்பவங்களில் ஈடுபடுவதாக. இதையும் மறுப்பதற்கில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# SPANKING
## should I or shouldn't I?



Many parents wonder whether they should or should not spank their children.

This brochure summarizes what is known about spanking to help parents make an informed decision.

# ஏன் குழந்தைகளைப் பெற்றோர் அடிக்கின்றனர்?

தமிழில்: அருண்

சென்ற இதழுடன் முடிவடைந்த 'குழந்தைகட்கும் உங்களுக்கும் இடையே' என்ற குழந்தை உளவியல் தொடர், ஆங்கில மொழியில் கிட்டத் தட்ட முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட ஒரு நூலாகும். எமது தமிழ்ச் சூழலில் இன்னமும் அதன் தேவை உணரப்படுவதாலேயே அதை தமிழில் தொடராக வெளியிட்டோம்.

*1995 மார்ச் மாதம், கனடாவில் இயங்கும் பல்வேறு நிறுவனங்களின் ஆதரவுடன் குழந்தை உளவியல் தொடர்பாக ஒரு பிரசுரம் வெளி யிடப்பட்டிருந்தது. அந்தப்பிரசுரமும் குழந்தைகள் தொடர்பான பெற் றோரின் அணுகுமுறை பற்றிய ஒரு பிரசுரம் என்பதால் இவ்விதழில் அதன் ஒரு பகுதியை மொழியாக்கித் தருகிறோம்.*

*கலாநிதி ஜோன் ஈ டுரான்ட், கலாநிதி லின்டா றோஸ் கிரான்சர் ஆகியோ ரால் எழுதப்பட்ட (Spaking: Should I or Shouldn't I?) என்ற இந்தப் பிரசுரத்தை ஆங்கில மொழியில் பெற விரும்பு வோர் பின்வரும் முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம்:*

Dr. Joan E. Durrant
Department of Family Studies
Faculty of Human Ecology
University of Manitoba
Winnipeg, MB R3T 2N2
Fax: 204-275-5299

OR

Dr. Linda Rose Krasnor
Department of Psychology
Brock University
St. Catharines, ON L2S 3A1
Fax:905-688-6922

### நூலின் தலைப்பு: குழந்தைகளை அடித்தல்: அடிக்கலாமா அடிக்கக்கூடாதா?

'அனேகமான பெற்றோர்கள் தமது குழந்தைகளை கண்டிப்பதற்காக அடிக்கலாமா அடிக்கக்கூடாதா என்று புரியாமல் விழிக்கிறார்கள். இந்தப் பிரசுரம் பெற்றோர்களுக்கு இது தொடர்பான ஒரு தீர்மானத்தை எடுக்க உதவுவதற்காக, அடித்தல் பற்றிய ஒரு சுருக்கமான விளக்கத்தைத் தருகிறது' என்ற அறிமுகத்துடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

### கட்டுப்பாட்டொழுங்கு (Discipline) என்றால் என்ன?

கட்டுப்பாட்டொழுங்கின் மூலமாக, பெற்றோர்கள் தமது குழந்தைகள் சந்தோசமாக வளர்ந்து எந்தச் சவால்களையும் எதிர்கொள்ளக் கூடியவர்களாக உருவாகுவதற்காக, அவர்கள் எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்று கற்பிக்கிறார்கள். கட்டுப்பாட்டொழுங் கிற்கான பல்வேறு வழிமுறைகளைப் பெற்றோர்கள் கடைப்பிடிக்கிறார்கள். இவை குழந்தைகள் செய்யவேண்டிய வற்றைக் காட்டுதல், விளக்குதல், ஊக்குவித்தல் என்ற விதத்திலும் எதைச் செய்யக்கூடாதோ அதைச் செய்வதை நிறுத்துவிக்க தண்டிப்பது என்ற விதத்திலும் அமைகின்றன. குழந்தைகளின் நடத்தையியல்பை மாற்றுவதற்காக பெற்றோர்கள் வழங்கும் தண்டனையின் ஒரு வடிவமாக அடித்தல் அமைகிறது.

### அடிப்பது குழந்தைகட்கு நன்மை செய்கிறதா?

இந்தக்கேள்வி பல ஆண்டுகாலமாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வரும் ஒரு கேள்வியாகும். திரும்பவும் திரும்ப வும் ஆய்வாளர்கள் இவ் ஆய்வுகளின் மூலமாக கண்டுவந்துள்ள உண்மை என்னவென்றால், குழந்தைகளின் நடத்தையியல்பை மாற்றுவதற்கு அடித்தல் ஒரு நல்ல கற்பித்தல் முறையல்ல என்பதேயாகும். மாறாக, உடல்ரீதியான தண்டனைக் குள்ளா கும் குழந்தைகள், அவற்றைப்பெறாத குழந்தைகளை விட அதிகளவுக்கு நடத்தை தொடர்பான சிக்கல்களை கொண்டவர்களாக காணப்படு கிறார்கள் என்றே பெரும்பாலான வர்கள் நம்புகிறார்கள். அடித்தல் தண்டனைக்குள்ளாகி வளரும் குழந் தைகள் மற்றவர்களை அடித்தல் தவறானதல்ல என்ற நம்பிக்கை உடையவர்களாக வளர்கிறார்கள். குழந்தைகளாக இருக்கும் போது அவர்கள் மற்றைய குழந்தைகளுடன் முரட்டுத்தனத்துடன் நடந்து கொள் கிறார்கள். பெரியவர்களாகையில், அவர்கள் தமது குழந்தைகளுடனோ கணவன் அல்லது மனைவியுடனோ ஏற்படும் பிரச்சினைகளை வன்முறை மூலம் தீர்த்துக்கொள்ள முனைகி றார்கள்.

தாம் அடிக்கப்படுவோம் என்ற பயம் இல்லாமலே நல்ல பிள்ளைகளாக இருப்பதற்கு அடித்தல் கற்றுக் கொடுக்கிறது. அவர்கள் இந்தத் தவறான பழக்கத்தை, தாம் பிடிபடா மல் இருக்கும் வரை செய்வது ஒன்றும் தப்பில்லை என்று கற்றுக்கொள் கிறார்கள். தாம் நல்ல பிள்ளைகளாக இருப்பதையே பிள்ளைகள் விரும்பு கிறார்கள். ஏனென்றால் அப்படி இருப்பதற்கான காரணங்களை அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார் கள். நாம் அவர்களுக்கு சுய கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்ள உதவவேண்டும். பிறரின் உணர்வுக ளையும் புரிந்து கொள்ளலையும், சரியான மதிப்பீட்டை செய்து கொள்ளவும் தம்மை தயார் செய்து கொள்ள அவர்களுக்கு நாம் உதவவேண்டும். நல்ல நடத்தைக்கு வழிகாட்ட அவர்களை தாக்குவதாக மிரட்டுவதை விட இது எவ்வளவோ ஒரு பெரிய விடயமாகும்.

### ஆனால், அடித்தல் உதவுவதில்லையா?

ஒரு அடி குழந்தையை உடனடியாக தவறான நடத்தையை செய்யாமல் இருப்பதில் இருந்து நிறுத்தக்கூடும். ஆனால் அது ஒரு போதும் குழந்தை எதிர்காலத்தில் என்ன செய்ய வேண் டும் என்று நீங்கள் எதிர்பார்க் கிறீர்களோ, அதைக்கற்றுக்கொடுப் பதில்லை. இதைச் செய்யப்பல வழிகள் இருக்கின்றன. இதற்காக நீங்கள் உங்கள் குழந்தையைத்தாக்க. வேண்டியதில்லை.

*உடல்ரீதியான கட்டுப்பாடுகள் (மேற்கை நோக்கிய) நாட்டு பாடசாலைகள் அனை த்திலும் தடை செய்யப்பட்டுள்ளது. போலந்து நாடுதான் இதை முதன்முதலாக 1783ல் தடை செய்தது. 1900ஆம் ஆண்டில் இது நெதர்லாந்து, லக்சம்போர்க், இத்தாலி, பெல்ஜியம், ஒஸ்ரியா, பின்லாந்து, பிரான்சு ஆகிய நாட்டுப் பாடசாலைகளிலும் தடை செய்யப்பட்டது.*

### அப்படியானால் ஏன் எல்லா நாடுகளிலும் உள்ள பெற்றோர்கள் குழந்தைகளை அடிக்கிறார்கள்?

எல்லாப்பெற்றோருமே அடிக்கிறார் கள் தான் என்ற நம்பிக்கைதான் இவ்வாறு செய்வது இயற்கையே என்ற எண்ணத்தை அனேகமான பெற்றோர்க்கு வழங்குகிறது. ஆனால், இது ஒரு வெற்று நம்பிக்கையே.

உடல்ரீதியான கட்டுப்பாடு பல நாடுகளில் ஒரு பொதுவான விடயமே அல்ல. சுவீடன், பின்லாந்து, நோர்வே, டென்மார்க், ஒஸ்ரியா ஆகிய நாடுகளில் இதைக்காண முடி யாது. இந்த நாடுகளின் குழந்தைகள் சந்தோசமாகவும், மிகவும் அனுசரிக் கும் இயல்புடையவர்களாகவும் வளர்கிறார்கள்.

வசம்

# கடைசி உயிலும், கடைசி வாக்குமூலமும்

யமுனா ராஜேந்திரனால் தொகுக்கப்பட்டு மொழியாக்கம் செய்யப்பட்டு வெளிவந்திருக்கிறது 'கடைசி உயிலும், கடைசி வாக்குமூலமும்' என்ற இலத்தீன் அமெரிக்க அரசியல் கவிதைகளின் நூல். ரோக் டால்ட்டன், சேகுவேரா, ஆரியல் டோப்மென் ஆகியோரின் அரசியல் கவிதைகள் சில பரந்த தேடல்களோடு தொகுக்கப்பட்டிருக்கின்றன. லண்டன் தமிழ் தகவல் நடுவமும், தாமரைச் செல்வி பதிப்பகமும் இணைந்து இந்த நூலை வெளியிட்டுள்ளன. ''மூன்றாம் உலக மக்கள் தினம், தினம் செத்து வாழும் வாழ்க்கையைப்பற்றிய படைப்புக்கள் அரசியல் சார்ந்தே வெளிவந்திருக்கிறது. அதனால் இவர்கள் தொடுவதில்லை. இந்தத்தீண்டாமையை போக்குவதற்காகவே மூன்றாமுலக இலக்கிய வரிசையை வெளியிட ஆரம்பித்துள்ளதாக பதிப்புரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன் இந்நூல் பேசும் விடயங்கள் இலங்கை அரசியல் நிகழ்வுகளோடு ஒத்துப்போகிற வகையில் இருப்பது 'போராட்ட சர்வதேசியத்தைத் தருகிற விஷேசமாகும்.

குறித்த மூன்று பேரிலும் எல்லோருக்கும் நன்கு தெரிந்தவர் சேகுவேரா. புரட்சிக்காரன் என்று தெரிந்தவர் இதில் கவிஞராகவும் வெளிப்படுகிறார். ''ஒரு போதும் கவிஞராக முடியாத புரட்சிக்காரன்' என்கிற சுயதரிசனத்தில்தான் அவர் கவிதைகள் வேர்பிடிக் கின்றன.' என்ற அவர் பற்றிய குறிப்பு அவரின் கவிதைகளிலேயே நிரூபண மாகின்றன.

ரோக் டால்ட்டனும், சேகுவேராவும் அரசியல் படுகொலைக்குள்ளானவர்கள். புரட்சிகர அரசியல் செயற்பாடில் ஈடுபட்ட அனுபவ வெளிப்பாடுகள் இவர்களின் கவிதைகளில் தெரிகின்றன. ஆரியல் டோப்மென் ஒரு படைப்பிலக்கியவாதியாகவே இருப்பவர், தற்போதும் வாழ்ந்து வருபவர். புரட்சிகர அரசியலில் தீவிரமாக ஈடுபட்டவர்களின் கவிதைகளை விட படைப்பிலக்கியவாதியான டோப்மென்னின் கவிதைகள் 'அரசியல் கவிதைகள்' என்ற வடிவத்தில் சிறப்பாக இருக்கின்றன. அத்துடன் இவரின் கவிதைகளே எம்மோடும் அதிகம் ஒன்றிச் செல்கின்றன. இவரின் சில கவிதைகளை வாசித்தபோது அண்மையில் தம்பலகாமத்தில் இடம்பெற்ற சம்பவம் தவிர்க்கமுடியாமல் வந்து வந்து போனது. இவரின் கவிதையொன்றின் தலைப்பே நூலுக்கும் தலைப்பாக இடப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மு. புஷ்பராஜனின் 'புரட்சியை நேசிப்பவர்கள் மக்களை நேசிப்பவர்கள்' என்ற முன்னுரையுடனும் டிசம்பர் 97ல் வெளியிடப்பட்ட இந்நூல் இதுவரை இலங்கை நூல்நிலையங்களில் கிடைக்கப்பெறவில்லை.

நூலிலுள்ள ஆரியல் டோப்மென்னின் கவிதையொன்று:

சென்ற ஆண்டு மே 8ஆம் திகதியிலிருந்து எனது
மகனைக் காணவில்லை.

சிலமணிநேரங்களுக்கு மட்டுமென
அவர்கள்
அவனைக் கூட்டிச் சென்றார்கள்
வழக்கமான சிலகேள்விகள் கேட்பதற்காக
மட்டும்தான் என்று
அவர்கள் சொன்னார்கள்

அந்தக் கார் அங்கிருந்து சென்றதிலிருந்து
லைஸென்ஸ் பிளேட் இல்லாத
அந்தக்கார் அங்கிருந்து அகன்றதிலிருந்து
அவனைப்பற்றி
எதுவுமே எங்களால்
கண்டுபிடிக்கமுடியவில்லை

ஆனால் இப்போது எல்லாம் மாறிவிட்டது
ஐந்து மாதம் கழித்து
இப்போது வெளியே வந்த ஒரு
இளம் தோழனிடமிருந்து
நாங்கள் கேள்வியுற்றோம்
செப்டம்பர் மாதத்தின் இறுதியில் அவனை
கிரிமால்டி மாளிகையில்
அவர்கள்
சித்திரவதை செய்து கொண்டிருந்தார்களாம்

'கிரிமால்டி'க்குச் சொந்தமான
சிவப்பு இல்லத்தில்
அவனை குறுக்கு விசாரணை செய்து கொண்டிருந்தார்களாம்
தோழர்கள் சொன்னார்கள்
அவனது குரலை அவனது கதறல்களை
அடையாளம் கண்டுகொண்டதாக
யாரேனும் நேர்மையாக எனக்குச் சொல்லுங்கள்
என்ன மாதிரியான காலம் இது?
என்ன உலகம் இது?
என்ன மாதிரியான நாடு இது?

நான் கேட்பதென்னவென்றால்

ஒரு தந்தையின் சந்தோஷம்
ஒரு தாயின் சந்தோஷம்
இவ்வாறாயிருப்பதை அறிந்து கொள்வது
தானென்றால்
அவர்கள்
இந்த நிமிஷம் வரையிலும் அவர்கள்
தமது மகனை
சித்திரவதை செய்து கொண்டிருப்பதை
அறிந்து கொள்வதுதானென்றால்

அதாவது
ஐந்து மாதங்களின் பின் அவன்
உயிரோடு இருக்கிறான் என்பதை
அறிந்து கொள்வது தானென்றால்
எமது மாபெரும் நம்பிக்கையாக இருக்கப்போவது
அடுத்த ஆண்டு
மறுபடியும் எட்டு மாதங்களின் பின்
இப்போதும் அவர்கள்
சித்திரவதை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்
என்பதை
அறிந்து கொள்வதுதானென்றால்

அவன் இருப்பான்
இருக்க வேண்டும்
இருக்கத்தான் வேண்டும்
இன்னும்
உயிரோடுதான் இருக்கிறான் என்பதை
அறிந்து கொள்வதுதானென்றால்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தலித்தியக் குறிப்புகள்

## எது எதிர்ப்புரட்சி...?



-அருந்ததியன்

"அயர்லாந்துத் தொழிலாளர் வர்க்கம் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தால் அடக்கப்பட்டிருக்கும் வரை பிரித்தானிய தொழிலாளர்களும் விடுதலைப் பெறப்போவதில்லை."

கார்ல் மார்க்ஸ் அன்று பிரித்தானிய தொழிலாளர் வர்க்கத்திடம் கூறியது இது.

இன்றைய சமூக ஒடுக்குமுறைகளையும், அவ்வாறு ஒடுக்குவதற்கு மூலமாக இருந்து வரும் இயங்குவிதி மற்றும் சித்தாந்தம் என்பவை குறித்தும், அதன் பண்புகள் ஒட்டுமொத்த ஆதிக்கமாக உருவெடுத்திருப்பதையும், இவற்றின் பன்முகப் பண்புகள், பன்முகப் பாத்திரம், பன்முகப் போக்கு என்பவை குறித்தும் காணப்படுகின்ற ஒற்றைப் பரிமாணப் பார்வை தான் இன்று சமூகப் புரட்சியை பின்தள்ளிக் கொண்டே போகிறதோ என்று தோன்றுகிறது. கடந்த கால மரபு இடதுசாரிகள் இறுதியாக இன்று வந்தடைந்திருக்கும் மிதவாத நிலையிருப்புக்கும் இது தான் காரணமாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அண்மையில், ஒரு புரட்சிகர கம்யூனிஸ்ட் "க" வினருடன் (நீண்ட காலமாக என்னோடு பேச வேண்டும் என்று கூறி வந்ததைத் தொடர்ந்து) ஒரு நேரத்தை ஒதுக்கிக் கொண்டு போனேன். ஒரு கலந்துரையாடல் இருப்பதாகவும் அதில் என்னையும் கலந்து கொள்ளுமாறும் அந்த x தோழர் கேட்டுக் கொண்டார். ஆனால் நான் அங்கு போயிருந்தபோது அப்படி எதுவித கலந்துரையாடலுக்குமான ஆயத்தங்களும் அங்கு இருக்கவில்லை. என்னோடு மட்டுமே பேசுவதற்காக y தோழருடன் சந்திப்பு ஏற்பாடாகியிருக்கிறது என்பதை அங்கு போனதன் பின்னர் தான் உணர்ந்தேன்.

தோழர் y உம் நானும் பரஸ்பர அறிமுகத்தைச் .செய்து கொண்டோம். இலங்கையில் இடசாரிக் கட்சிகளின் அறிமுகம், அவற்றின் பிளவுகள் குறிப்பாக ஸ்டாலினிசப் போக்குகளை சாடி ல.ச.ச.க.வினரின் வளர்ச்சி, அதன் பிற்போக்கு பாத்திரங்கள், என்பதில் ஆரம்பித்து தமது "க"வின் கொள்கை முன்னோக்கு என்பவை வரை விளக்கினார்.

நான் சார்ந்துள்ள பத்திரிகையை ஒரு சதிதிட்ட நிறுவனமென்றும் ஒரு முதலாளித்துவ அமைப்பு முறைக்குள் தீர்வுகளை எதிர்பார்த்துப் பிரச்சாரம் செய்யும் நிறுவனமென்றும் கேலி செய்தார்.

அவரது விளக்கத்தின் பின்னர் எனது புரிதலையும் எனது பார்வையையும் முன் வைத்தேன். "அடிப்படையில், மார்க்சியம் எமக்கு காட்டியிருக்கிற வழிகாட்டல்கள் ஒரு சமூகப் புரட்சிக்கு தடையாக உள்ள இயங்குவிதியை விளக்கியிருக்கிற போதும் கடந்த காலத்தில் புரட்சிகர அமைப்புகள் வர்க்க குறுக்கல் வாதத்துக்குள்ளேயே நின்று விட்டதனால், அதனையும் தாண்டிச் சென்ற ஏனைய ஒடுக்கு முறைகளை அடையாளம் காணத் தவறிவிட்டுள்ளது. எனவே அவ்வாறான அடக்கு முறைகளை அடையாளம் கண்ட சக்திகள் பிற்போக்கானதாயினும் மக்களை அணிதிரட்ட முடிந்ததற்கான காரணம் நேரடியாக அம்மக்கள் முகங் கொண்ட அடக்குமுறைக்கெதிராக நின்றதனாலேயே.

இன்றைய தேசியவாதம் தொடக்கம் பெண்ணியம், தலித்தியம் வரை தனித்தன்மை வாய்ந்ததாக இருப்பதற்கும் இது தான் காரணமென்றும், இந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களை சதிகாரர்கள், திரிபுவாதிகள், ஏகாதிபத்தியக் கைக் கூலிகள், ஏஜென்டுகள் என்று கூறிக்கொள்வது அவ்வாறான அடக்குமுறைகளை அலட்சியம் செய்வதிலும், அடக்குமுறைக்கு துணைபோவதிலும் தான் போய் முடிந்திருக்கிறது என்றும் கூறினேன். அது மட்டுமன்றி இவ்வாறு கூறிவந்தவர்கள் அடக்கப்படும் மக்களை அணிதிரட்ட முடியாது போனதையும், அவ்விடத்தை இறுதியில் பிற்போக்கு சக்திகளாக இருந்தாலும் அக்குறிப்பிட்ட ஒடுக்குமுறைக்கு தலைமை தாங்கியவர்களால் தான் நிரப்ப முடிந்தது. (இடையில் குறிக்கிட்ட போது எனது கருத்தை முன்வைத்ததன் பின் முன்வைக்குமாறு கூறினேன்.) எனவே ஒற்றைப் பரிமாணப் பார்வை ஒட்டுமொத்தத்தில் எதிர்ப் புரட்சிக்குத்தான் இட்டுச்சென்றுள்ளது" என்றும் தெரிவித்தேன்.

இக்கருத்துக்கு அலட்சியச் சிரிப்போடு பதில் கூறிய தோழர் y "தேசியவாதம் என்பது தனிநாட்டுக்குள் புரட்சி என்று கூறி சர்வதேசியவாதத்துக்கு எதிராக முன்வைத்த ஸ்டாலினின் திரிபுவாத சித்தாந்தம் என்றும் அந்தத் திரிபுவாதத்தின் தொடர்ச்சியே இது என்றும், வடக்கில் புலி தொடக்கம் இன்றைய இயக்கங்கள் வரை தேசியவாதம் என்கின்ற பேரில் தமிழ்த் தொழிலாளர் வர்க்கத்தை அழித்தொழிக்கவும் தீய வழியில் வழிகாட்டவும், எதிர்ப்புரட்சிக்குமே இட்டுச் சென்றுவிட்டுள்ளது" என்றும் கூறினார். அன்று இவ்வகைப் போக்குகளுக்கு எதிராகக் குரல் கொடுத்த ட்ரொஸ்கியை கோடரியால் வெட்டிக்கொலை செய்யுமளவுக்கு போனதும், கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள் பலரைக் கொன்றொழிப்பதற்கும் இதே போக்கு தான் காரணமானது" என்றும் அடுக்கிக் கொண்டே போனார்.

அடுத்ததாகப் பேசிய நான் "இன்றைய நிலையில் போராடுகின்ற சக்தியைக் கொண்டு போராட்டம் சரியா பிழையா என்பதை மதிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. போராடும் சக்திகள் பிற்போக்கானவை என்பதற்காக போராட்டத்தின் தேவை இல்லாமல் போய்விடவில்லை. அப்படிப் பார்த்தால் உலகத்தில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு சோஷலிசப் புரட்சிகளின் போதும் இவ்வாறான சக்திகள் இருக்கத்தான் செய்தன. அதற்காக சோஷலிசப் போராட்டத்தின் தேவை இல்லாது போகவில்லை. அவ்வாறான போராட்டத்துக்கு "புரட்சிகரக் கட்சிகள்" என்று சொல்லிக் கொண்ட கட்சிகள் தலைமை தாங்க அருகதையற்றுப் போனமைக்கு பின்னால் என்ன தொழிற்பட்டிருக்கிறது என்பதையும் தமிழ் மக்களை பாட்டாளி வர்க்கப் புரட்சியில் நேரடியாக ஈடுபடுத்துவதற்கு என்ன தடையாக இருந்திருக்கிறது என்பது குறித்து அறிவதற்கும் முறையான சுய விமர்சனம் தேவை. ஒரு தேசப் போராட்டத்துக்கு a யோ b யோ தலைமை தாங்கலாம். அவை பிற்போக்கு பாத்திரத்தையும் வகிக்கலாம் அவற்றின் பிற்போக்கு வழிநடத்தலுக்குப் பலியாகி போராட்டமும் இழுபட்டுப்போகலாம். ஆனால் போராட்டத்தின் தேவை அதனால் அற்றுப் போகுமா? ஒடுக்கப்படும் தேசத்தை விடுவிப்பதற்கு "சோஷலிசம் வரும் வரை காத்திருங்கள்" எனும் கோஷம் போதுமானதல்ல. இன்று "தமிழ் மக்களே! ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காக அணிதிரளுங்கள்." என்ற அறைகூவல் இன ரீதியான ஒடுக்குமுறை பிரதானமாக இருக்கும் வரை ஒடுக்கப்படும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை கேலிக்கூத்தான வெற்றுக் கோஷமாகவே படும். இன்றைய தொழிலாளர்கள் தொழிலாளர் வர்க்கமாக மட்டும் இருக்கவில்லை. அவர்கள் சிங்களத் தொழிலாளர்களாகவும், தமிழ் தொழிலாளர்களாகவும், முஸ்லிம் தொழிலாளர்களாகவுமே இருக்கிறார்கள். அது மட்டுமன்றி ஒடுக்குமுறைக்கு துணை போகும் வர்க்கமாகவும் சிங்களத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பேரினவாதமயப்பட்டு இருக்கிறார்கள். எனவே தேசியவாதமென்பதை முத்திரை குத்தலுக்கூடாக அசிங்கப்படுத்தப்படும்போது அவ்வாறு அசிங்கப்படுத்துபவர்களை ஒடுக்கப்படும் தேசிய இனத்திடம் இருந்து அந்நியப்படுத்தவே செய்திருக்கிறது. இன்றைய ஜே.வி.பி இதற்கு ஒரு நல்ல உதாரணம் என்று கூறினேன்.

இவ்வாறு கூறியதும் தோழர் y சில முத்திரை குத்தல்களை ஆவேசத்துடன் கூறத் தொடங்கினார். வெளிநாட்டு ஏஜென்டுகள் என்றும், கைக்கூலிகள், திரிபுவாதிகள் என்றும் கூறினார். தேசியவாதம் என்ற பேரில் ஏகாதிபத்திய சதிகளுக்கு முண்டு கொடுக்கும் சக்திகள் என்றும் அடுக்கிக் கொண்டே போனார்.

எனவே நானும், "தோழர், அது உங்களது கருத்து தானே பிரச்சினையில்லை." என்றேன்.

"எனது கருத்தில்லை அது தான் உண்மை." என்றார்.

"அப்படிக் கூற உங்களுக்கு உள்ள உரிமையை நான் மறுக்கவில்லை. ஆனால் உண்மை என்று நீங்கள் நினைக்கும் கருத்து உங்களுடையது என்பதையே நான் கூற வந்தேன்". என்றேன்.

"இல்லை அது தான் உண்மை" என மீண்டும் கூறினார்.

அப்படியானால் நான் கூட "நீங்கள் கூட ஒடுக்குமுறைக்கு துணைபோபவர்கள். நீங்கள் ஒரு போதும் தமிழ்த் தொழிலாளர்களை அணிதிரட்டப்போவதில்லை. நீங்கள் ஒருவகையில் எதிர்புரட்சிக்கே வித்திடப் போபவர்கள். ஒட்டுமொத்தத் தொழிலாளர்களையும் பிழையாக வழிநடத்தப் போபவர்கள் என்று நான் ஒரு கருத்தை முன்வைத்து, அது தான் உண்மையென்று நான் சொன்னால் நீங்கள் எப்படி அதனை எதிர்கொள்வீர்கள்? அது என் கருத்தாக மட்டுமே இருக்கும் என்பீர்களா? அல்லது அது தான் உண்மை என்பதை ஏற்றுக்கொள்வீர்களா? என்றேன்.

உடனே கோபம் வந்தவராக தடால் புடால் என்று எழுந்த தோழர் y அடிக்காத குறையாக அவரது கையை எனது முகத்துக்கு நேரே கொண்டு வந்து, விரலை நீட்டி "நீர் ஒரு கைக்கூலி என்பதை நிருபித்து விட்டீர். நீர் ஒரு முதலாளித்துவ ஏஜென்ட், உம்மைப் பற்றியும் உமது நிறுவனத்தைப் பற்றியும் நான் ஏற்னெவே அறிந்திருக்கிறேன். உமதும் உமது பத்திரிகையினதும் வர்க்கத்தன்மை குறித்து இன்று அறிந்து கொண்டேன்." என்று காரசாரமாகக் கத்தியதுடன் என்னை விரட்டாத குறையாக முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க வெளியே போனார்.

நானும் "ஒரு கருத்தைத் திணிப்பதற்காக அழைத்த விட்யம் எனக்கும் தெரியாது உங்கள் அமைப்பிடம் எனக்கு தெரிந்தவரை நான் கண்டு வந்த குறைகளில ஒன்று இது. அதை எனக்கு மீள உறுதிப்படுத்தியதற்கு நான் தான் நன்றி கூறியிருக்க வேண்டும். என்று கூறி விட்டு எழுந்து வந்தேன்.

தோழர் y எனது வர்க்கத்தை அளக்க என்ன அளவீடு வைத்திருந்தாரோ தெரியவில்லை. ஆனால் அந்தக் கருவியால் தான் சமூகத்தில் வெவ்வேறு ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தொழிலாளர்களையும் அளக்க பயன்படுத்வாராயின் குறைந்தபட்சம் தொழிற் சங்கப் போராட்டத்தை நடாத்தக் கூட அந்த அளவீட்டுக் கருவி உதவப்போவதில்லை என்பதை உணர்ந்தேன்.

ஒரு மாற்றுக்கருத்தை சகித்துக் கொள்வதற்குக் கூட தயாரில்லாத ஒரு கட்சி அதிகாரத்துவம் மிகுந்த அராஜக நிலைக்கே இட்டுச் சென்றுவிடும் என்பதை சொல்லித் தெரியத் தேவையில்லை. முதலாளித்துவக் கட்சிகளிடம் கூட விவாதம், சகிப்புத்தன்மை, கருத்துச் சுதந்திரம் என்பவற்றிற்கு (அளவு ரீதியாக வேறுபட்டாலும் கூட) இடமிருக்கும் போது ஒரு மக்கள் அமைப்பிடம் இதனை எத்தனை தூரம் எதிர்பார்க்க வேண்டும். மேலும் கருத்துத் திணிப்புக்காகத் தான் இப்படிப்பட்ட கலந்துரையாடலை நடாத்துவதென்றால் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ள மக்கள் என்ன மந்தைகளா?

இந்தச் சம்பவத்தை இந்த தலித்தியக் குறிப்பில் எழுதுவதற்குக் காரணம் ஒரு சமூகப் புரட்சிக்கான தயாரிப்புகளின் போது ஓரங்கட்டப்படும் விவகாரமாகவே மக்கள் முகம் கொடுத்து வரும் நேரடி ஒடுக்குமுறைகளை "இனங்காணாமை" என்பது தொடர்ச்சியாகவே நிகழ்ந்து வருகிறது. மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒரு குறியீடு மாத்திரமே. இதற்கு விதிவிலக்காக எச்சக்தி இவ் அனைத்து அடக்குமுறைகளினதும் அததற்குரிய நிலையிலிருந்தும் பரிசீலித்து முன்கொண்டு செல்கிறதோ அச்சக்தியே புரட்சியை வழிநடத்தக்கூடிய தகுதியைப் பெறுகிறது.

8-

## பெண்கள்...

அமைகின்றதெனலாம். இந்திய கலாசாரத்தில் பெண்கள் கலாசார அடிமைகளாவர். தாம் அடிமைகளாக்கப்பட்டு விட்டோம் என்பதை ஏற்க மறுக்கும் வகையில் மூளைச்சலவை செய்யப்பட்டவர்கள் (இது இலங்கைக்கும் பொருந்தும்). இந்திய கலாசாரத்தில், பாரம்பரியத்தில் பெண்களுக்கு பாலியல் குறித்தோ, அதனுடன் தொடர்பான விடயங்கள் குறித்தோ பேசும் உரிமையில்லை. இதனாலே தான் பாலியல் தொடர்பான திரைப் படங்களை கண்டுகழிக்கச் செல்லும் பெண்களை வினோதமாக நோக்கி அவர்களை சீண்டும் தன்மையும் ஆண்களிடையே காணப்படுகின்றது. சவோய் திரையரங்கில் காட்டப்பட்ட 'காமசூத்ரா', லிபர்ட்டியில் காட்டப்பட்ட 'த பியானோ' ஆகிய திடைப்படங்களைப் பார்க்கச் சென்ற பெண்கள் கீழ்த்தரமாக ஆண்கள் சமுதாயத்தினால் நோக்கப்பட்டனர். எனவே, இவ்வாறான கலாசார மையப்பாட்டிலிருந்து ஓரினக் காதல் தொடர்பான தீபா மேத்தாவின் படைப்பு வரவேற்கத்தக்கது.

தமன்னா, தயாரா, பயர் ஆகிய இம்மூன்று திரைப்படங்களும் பெண்களின் சமூகப் பிரச்சினைகளை, ஆழ்ந்து யோசிக்கக்கூடிய வண்ணம் முன்வைக்கின்றன. இயக்குனர் கையாளும் கருப்பொருளைவிட அக்கருப் பொருளையும் மீறி இப்படங்கள் பெண்ணியம் பற்றி பேசுகின்றன. இது எச்சந்தர்ப்பத்திலும் எவ்விடயத்திலும் பெண்கள் பிரச்சினைகள் தவிர்க்கப் பட முடியாதவை என்பதையே உணர்த்தி நிற்கின்றன.

''இத்திரைப்படத்தில் பெண்ணொருத்திபடும் அவஸ்தைகளை வெளிக் காட்டவே அலி என்ற பாத்திரத்தை தேர்ந்தெடுத்தோம்.மாறாக, ஒரு சாதாரண ஆணின் பாத்திரம் எனின், திரைப்படம் மக்களை ஈர்த்திருக்காது. பாதித்திருக்காது.'' என்கிறார் தமண்ணாவைத் தயாரித்த பூஜாபட்.

இது மறுதலையானது. பெண்களின் பிரச்சினைகளை மையப்படுத்தவே அலி, ஓரின உறவு, பெண் வேடமிடும் ஆண் போன்ற கருப்பொருள்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன எனவும் கருதலாம். அவ்வாறெனில், இக்கருப் பொருள்களின் சித்திரிப்புகள் பெண்ணியல் பிரச்சினைகளை மையமாக வைத்து தயாரிக்கப்படும் படங்களின் தோல்வியினை நியாயப்படுத்துகின்றதா? இத்தோல்விகளின் காரணமாக இயக்குனர்கள் நேரடியாக இவ் விடயங்களைப்பற்றிச் சித்திரிக்க அச்சம் கொள்கின்றனரா?

முன்னாள் இந்திய தணிக்கைச் சபை உறுப்பினரான சோமா சட்டர்ஜி, சில இயக்குனர்கள் ஒரு போதும் தமது படைப்பை பெண்ணியல் சார்படைப் பென ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் எனக் கூறுகின்றார். அபர்ணா சென்னின், 'பரமா', ரிதுபர்ணா கோஷ்ஷின் 'ஏப்ரல் 19' போன்ற படைப்புகளை பெண்ணியல் சார் படைப்புகளாக ஏற்றுக்கொள்ளாத் தன்மை இவர்களிடையே காணப் படுகின்றது என சோமா சட்டர்ஜி மேலும் கூறுகின்றார்.

எவ்வாறெனினும், பாலியல் சார், பெண்ணியல் சார் விடயங்களை இந்தத்திரைப்படங்கள் கதைக்கத் தலைப்பட்டுவிட்டன. இந்த தலைப் படுதலின் காரணமாக கலாசாரம், பாரம்பரியம், மனித மாயைகள் என்பன மறைமுக கட்டுடைப்புக் குள்ளாகும் தன்மையை எதிர் நோக்குகின்றன.

## கவிஞர் ஜீவா ஜீவரத்தினம்

கவிஞர் ஜீவா ஜீவரத்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற் கெல்லையில் உள்ள கிராமமான துறைநீலாவணையில் 1939ம் ஆண்டு நவம்பர் 23 ம் திகதி பிறந் தார்.

கவிஞர் ஜீவாவினது " புத்தர் இன்றிருந்தால்" என்ற முதல் கவிதை 1958ல் " சுதந்திரன் " பத்திரிகையில் வெளியாகியது. இவருடைய கவிதை கள் 1963ல் " வாழும் கவிதை கள் " என்ற பெயரில் தொகுப்பாயின. நல்லூர் ஆசிரியர் பயிற்ச்சிக்கலாசாலையில் இவர் இருந்த போது, யாழ். நகரிலிருந்து வெளியாகிய *"விவேகி", "ஆனந்த சாகரம்"* போன்ற மாதாந்த சஞ்சிகைகளின் உதவி யாளராகவுமிருந்து, அவற்றின் வளர்ச்சிக்கு பெரிதும பாடுபட்டார். ஆங்கிலத்தில் புலமை பெற்றிருந்த ஜீவா கவிஞர் நீலாவாணனின் "ஓ... வண்டிக் காரா..." என்ற புகழ் பெற்ற கவிதையை ஆங்கிலத் தில் மொழிபெ யர்த்தார்.பின்னர் ஏ.ஜே.கனகரட்னம் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். எழுத்துத் துறையில் மட்டுமின்றி சமூக சேவைத்துறை யிலும் தன்னை அதிகம் ஈடுபடுத்திக் கொண்ட ஜீவா, வாலிபப் பருவத்தில் தனது கிராம முன்னேற்றம் கருதி "சமபந்தி போஜனம்" ஒன்றை நடத்தினார்.


700க்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ள ஜீவா- கட்டுரைகள், நாடகங்கள், எழுதுவதோடு மட்டும் தன்னை நிறுத்திக் கொள்ளாது விளை யாட்டுத் துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஜீவா தனது 58வது வயதில் 20.10.97ல் காலமானார்

மு.ச + சொசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கேட்டிருப்பாய் காற்றே

-சுந்தரி-

இருண்டு போய்க்கிடக்கும் வானத்தில் எதைத்தான் தேடுவது? அந்த இருண்ட வானத்தைக் கூட இந்த ஜன்னல் எத்தனையாய் உடைத்துக் காட்டுகிறது? வாழ்வின் ஒவ்வொரு காலடிக்கும் வைக்கப்பட்டிருக்கும் தடைகளைப் போன்று இந்த ஜன்னலும் வெளிஉலகத்தைப் பார்ப்பதற்கு ஒரு தடைதான். ஏன் இந்த ஜன்னலூடும் நீ வெளியுலகத்தைப் பார்க்கலாம் என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் எனக்குத் தடையாக இந்த ஜன்னல் ஏன் வைக்கப்பட்டுள்ளது என்பதற்கு உங்களிடம் உண்மையான பதில் உள்ளதா? இந்த ஜன்னல் கம்பிகளில் நான் முட்டிமோதியே என்னைக் காயப்படுத்திக் கொண்டது பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா? இதே கம்பிகளே பேய்களைப் போன்று கைகளை நீட்டி என்னைப் பிறாண்டிக் கொட்டியது பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா? இன்னும் நான் ஏன் இந்த ஜன்னலை வைத்திருக்க வேண்டும் என்பதற்கு உங்களிடம் ஏதாவது நியாயமான பதில் உள்ளதா? நீங்கள் விரும்பினாலும் விரும்பாதுவிட்டாலும் என்றாவது நான் இந்த ஜன்னலை உடைத்தெறிவேன். அதற்குப் பிறகும் நீங்கள் யாரையாவது இதே ஜன்னலினூடே சிறை வைப்பதை நான் விரும்பவில்லைத்தான்.

நான் வெட்கமில்லாமல் கால்களை அகல விரித்தபடி கிடக்கிறேன். துடையிலும், கால்களுக்கிடையிலும் நொழு நொழுத்துக் கிடக்கிறது அவனுடைய இன்பத்தின் எச்சம். எனக்கு அது ஏதோ ஒருவித அருவருப்பைக் கொடுக்கிறது. அவன் ஒரு பெரிய சுமையை இறக்கி வைத்ததைப் போல தலைக்குக் கீழ் கையை முண்டு கொடுத்து முகட்டைப் பார்த்தபடி யோசனையில் ஆழ்ந்திருக்கிறான். இடைக்கிடை மெல்லிய போர்வையினூடே அரைகுறையாய் மூடப்பட்டுக் கிடக்கும் என் உடம்பையும் பார்த்தபடி, மற்றைய கையால் தன் நெஞ்சை வருடிக் கொண்டிருக்கிறான்.

திடீரென்று என்ன தோன்றியதோ, என்னை இழுத்தணைத்து நெற்றியில் முத்தமிட்டான். என் உதடுகளை விரல்களால் வருடியபின் மெல்லமாக உதட்டின் மீது முத்தமிட்டுச் சொன்னான் ''உன்னுடைய இந்த இதழ்களின் மீது மட்டும் எனக்கு எவ்வளவு காதல் தெரியுமா?'' என்றான். நான் மௌனமாய் இருந்தேன்.

''சுகந்தி நீ ஏன் இப்படி இருக்கிறாய்?''

''எப்படி?'' எதுவுமே தெரியாததைப் போல் நான் கேட்டேன்.

''ஏன் என்னில் விருப்பமில்லை என்பதைப் போல் நடந்து கொள்கிறாய்? உனக்கு என்னைப் பிடிக்கவில்லையா சுகந்தி, அல்லாட்டி கலியாணத்திற்கு முதல் நான் இப்படி நடந்து கொள்வது பிடிக்கவில்லையா?''

நான் அவனது கண்களை ஊடுருவிப் பார்த்தேன். பிறகு எல்லாவற்றின் மீதான வெறுப்பும் மேலிட விழிகளைத் தூக்கி ஜன்னலுக்கு வெளியில் வீசினேன்.

''இப்படியான விசயங்களை கூடாத விசயங்கள் என்று நீ நினைக்கிறாயா? அல்லாவிட்டால் உனக்கு என்னில் நம்பிக்கை இல்லையா?'' - அவன் பதிலை எதிர்பாராமலேயே கேள்விகளை அடுக்கினான்.

''ஏதாவது சொல்லேன். ஏன் எல்லாத்துக்கும் வாயை மூடிக் கொண்டிருக்கிறாய்?''

நான் வாய் திறந்து ஒரே ஒரு வார்த்தையை உதிர்த்தேன். - ''எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு.''

''அப்ப எதுக்காக பிடிக்காதவனோடு வலுக்கட்டாயமாகப் பழகுவதைப் போல் நடந்து கொள்கிறாய்?''

நான் அதற்குமேல் எதுவும் பேசவில்லை. எனக்கு கண்கள் கலங்கியது.

''சுகந்தி என் முகத்தைப் பாரன்'' என்று என் முகத்தை தன்னை நோக்கி இழுத்தான். நான் அழத் தொடங்கி விட்டேன்.

எனக்கு அதற்கு மேல் பேச முடியாமல் இருந்தது. என்னை அறியாமலேயே என்னுள் ஒரு பெரிய கட்டியைப் போன்ற சுமை என் நெஞ்சை அழுத்துவதைப் போல் உருவாவதையும், எப்பவாவது அந்தச் சில நாட்களை நினைத்துக் கதறி அழுவதன் ஊடாக அது கரைந்து என் மனதை அழுத்தும் சுமையை இறக்கி வைப்பதைப் போலவும் இருக்கும். பிறகு, ஏதோ ஒரு நம்பிக்கையில் எழுந்து நடப்பேன். என்னுடைய மனத்திற்குள்ளேயே நடக்கும் இந்தப் போராட்டத்தை எப்படி வெளியில் கொட்டுவது. இவன் இதைப் புரிந்து கொள்வானா அல்லது நீயும் கெட்டுப் போனவள் (அவனுடைய மொழியில்) தானே என்று தூக்கி எறிந்து விட்டுப் போய் விடுவானா? யாருக்குத் தெரியும்?

என்னால் அவனுடைய அருகாமையை இழக்க முடியவில்லை. ஆனால் எப்படி அவனுடைய இந்த நடவடிக்கையை நான் சகித்துக் கொள்ளப் போகிறேன். என் மனதின் ஆழத்தின் வேதனையை இவனால் புரிந்து கொள்ள முடியுமா? உடல் இல்லாத வாழ்க்கை பற்றி இவனால் யோசிக்க முடியுமா? இன்றைய என் மனநிலையில் அந்தச் சம்பவத்தின் அதிர்வில் இருந்து விலகி உடல் பற்றி என்னால் யோசிக்க முடியுமா?

அன்றைய நாட்களும் அந்த சம்பவமும் என்னை என்னமாய் துரத்துகின்றன? நான் என்ன பாவம் செய்தேன்? அந்தச் சம்பவம் என்னைத் துரத்துவதற்கும் எனக்கும் என்ன வகையான தொடர்பு? அதில் என்னுடைய தவறு எவ்வளவு? அல்லது முற்று முழுதான தவறே என்னுடையது தானா? என் உடல் மீது தெளித்திருந்த தசைப்பிண்டங்கள் தான் அதற்கும் காரணமா? என் எலும்புகளைச் சுற்றியிருக்கும் இந்தத் தசைகளோடு நான் வாழ்வது கூட இங்கே தண்டனைக்குரிய குற்றமா?

எனக்கு அப்போதெல்லாம் எங்கட அம்மாமார் கதைக்கிற கற்பு, ஒழுக்கம் அதனுடைய அழிவு இதெல்லாம் என்னென்கிற கேள்விகளுக்கெல்லாம் பதில் தெரியாது. இவை எல்லாம் பற்றியதும் மிகைப்படுத்தல்களினூடான பயம் மட்டுமே என்னிடம் இருந்தது. இது எல்லாம் பெரியாக்களுடைய விசயம் என்று வேறு அம்மா சொல்லி வைத்திருந்தா.

உண்மையிலேயே இதெல்லாம் எப்பிடி என்னுடைய உடலிலை மாற்றத்தைக் கொண்டுவரும் என்பது கூட இந்த சமூகத்தைப் பொறுத்தவரை என் வயதுக்கு மீறிய கேள்வி.

ஆனால் என்னில் உருவாக்கப்பட்டிருந்த ஒரு எண்ணக்கரு அதை இழந்தால் நான் வாழ்விற்கான எல்லாவற்றையும் இழந்து விடுவேன் என்ற கொடூரமான கசப்புணர்வு. நான் எப்போதுமே ஒருவகை அச்ச உணர்வுடனேயே வாழ்ந்தேன். எப்பவுமே ஏதாவது ஒரு மூலைக்குள் இருந்து அழுது கொண்டோ அல்லது ஏதாவது பற்றி யோசித்துக் கொண்டோ இருப்பேன். அதெல்லாமே அந்த நாட்களின் பிறகு தான்.

அன்றைய நாட்களின் இரவுகள் எனக்குப் பயங்கரமானவை தான்.

எனக்கும் அந்த வீட்டில் இருந்த மிருகத்திற்கும் என்னவகையான உறவு முறை என்பதை நான் உங்களுக்குச் சொல்லப் போவதில்லை. என்னோடு அதே வீட்டில் இருந்த அந்த நாற்பத்தைந்து வயதுப் பெண்மணிக்கும் , சின்னப் பிள்ளைகள் இரண்டு பேருக்கும் எனக்கும் என்னவகை உறவு என்பதையும் நான் உங்களுக்குச் சொல்லப்போவதில்லை. ஏன் என்னைத் தவிர்ந்த அந்த நான்கு பேருக்கிடையிலும் என்னவகை உறவு என்பதைக் கூட நான் உங்களுக்குக் கடைசி வரை 'தெரிவிக்கப் போவதில்லை.ஆனால் நாங்கள் அனைவரும் அந்த வீட்டிலேயே இருந்தோம். எல்லோரும் ஒன்றாகச் சாப்பிட்டோம், சண்டை பிடித்தோம் வாழ்ந்தோம். எல்லாமும் நடந்தது. ஆனால் அந்த வீட்டின் பெண்மணி தனக்கான எல்லாவற்றையும் இழந்துவிட்டாள். எதையும் எதிர்த்து நிற்பதற்கான முழு மனபலத்தையும் கூட. அவள் தனக்கானது என்று வைத்திருந்தது வெள்ளைப் புடவை மட்டுமே. அதை ஏன் அவள் தனக்கானதாக காவுகிறாள் என்பது இன்னும் எனக்கு விளங்காத எரிச்சலாகவே உள்ளது.

எனக்கும் அந்த மிருகத்திற்குமான உறவுமுறை இந்த சமூகத்தால் திருமண பந்தத்திற்கு அங்கீகரிக்கப்படாத ஒன்று. நான் வாழ்ந்து கொண்டிருந்த கனவு வாழ்க்கையில் அந்த மிருகம் வருவதற்கான சாத்தியத்தை அது முற்றுமுழுதாக இல்லாமல் செய்திருந்தது. அதனால் அந்த மிருகம் என்றும் என் உடலிற்கு எதிரியாகவே இருந்தது. இவ்வுலகில் என் உடலை யாரும் பிய்த்தெறியவிடாமல் பாதுகாக்க வேண்டிய மிருகங்களில் அந்த மிருகமும் ஒன்றாயிற்று.

அந்த மிருகம் என்னை முதலில் ஆக்கிரமித்தது இப்படித்தான் நடந்தது. வீட்டில் நானும் கடைசிச் சின்னப்பிள்ளையும் மட்டுமே தனியாக இருந்தோம். அது வந்தது. அந்தச் சின்னப் பிள்ளையிடம் ரொபி வாங்கிச் சாப்பிடச் சொல்லிக் காசைக் கொடுத்து கடைக்கு அனுப்பியது. அவள் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடிப்போனாள். அது என்னிடம் ஒரு பாக்கை தந்து அறைக்குள் வைத்துவிட்டு வா என்றது. நான் பாக்கை வைத்துவிட்டுத் திரும்பிய போது அது அறைக் கதவைப் பூட்டிக் கொண்டிருந்தது. நான் அதிர்ந்து போனேன் ஏற்கெனவே சின்னப் பெண்ணாக அந்த மிருகத்திடம் எடுத்ததிற்கெல்லாம் அடியும் பேச்சும் வாங்கி அது ஒரு வெறி பிடித்த பிசாசு போல் தா[illegible] எனக்கு இருந்தது. அதனால் அந்த மிருகம் பற்றி எனக்கு உள்ளூர இருந்த பயம் இப்பொழுது பன்மடங்காக அதிகரித்தது. பயத்தால் நடுநடுங்கிக் கொண்டிருந்தேன். அது வந்து என் கையைப் பிடித்தது. என் சட்டையைக் கழட்டியது. நான் உள்ளூர இருந்த சொற்ப துணிவில் அந்த மிருகத்தின் கையைத் தட்டிவிட்டு என்னை விடு என்றேன். அது பளார் என்று இழுத்து அறைந்தது கன்னத்தில். ஏதாவது கத்தினாய் என்றால் கொலை செய்து போடுவேன் என்றது. எட்டி காலால் உதைத்தது. நான் தூர மூலைக்குள் விழுந்தேன்.அதன் பிறகு நான் எப்படிப் எதிர்ப்பேன். கண்ணீர் மட்டும் வழிந்து கொண்டிருந்தது. ஒரு சடம் போல அந்த மிருகம் இழுத்த இழுப்புக்கெல்லாம் கிடந்தேன். அந்த மிருகம் வெறி பிடித்த மிருகமாக என்னைப் பிய்த்தெறிந்தது. ஏதேதோ செய்தது. நான் வேதனையில் துடித்தேன். அது தன்வெறி அடங்க எழுப்பிப் போனது. நான் வேதனையோடு எழும்பினேன். என் துடைகளுக்கிடையில் இரத்தம் வடிந்தது. நான் அழுது கொண்டே அறையை விட்டு வெளியே வந்தேன். அந்த மிருகம் எங்கோ வெளியில் போய்விட்டது. அந்தச் சின்னச் சிறுமி மட்டும் நின்றாள்.

அவள் கேட்டாள். அங்கே என்ன நடந்தது. ஏன் அழுகிறீர்கள் என்று. நான் எதுவும் பேசாமல் போனேன்.

வீட்டின் முதிய பெண்மணி வந்தவுடன் கதறி அழுதேன். எனக்கு எதிர்பாராமல் நடந்த அந்தப் பேரிடியை நான் எப்படி அழுவதன் மூலம் மட்டும் தீர்க்க முடியும்? வெறுமனே அழுது தீர்த்தேன். அர்த்தமில்லாதது தான். எதிர்க்க முடியாத என் கோழைத்தனம். என்னைப் அடிமைப்பட பழக்கப்படுத்தியிருந்த ஆண்வர்க்கத்தின் வெறிக்கு நான் தீனியானேன் என்ற வேதனை. என்னை யாராலுமே காப்பாற்ற முடியாதா என்கிற ஏக்கம். இதை எப்படி அந்த வீட்டை விட்டு வெளியில் சொல்வது என்ற வாழ்விற்கான பிரச்சினை. எல்லாம் சேர்ந்து நான் விளங்கிக் கொள்ள முடியாமலேயே என் வாய்க்கு விலங்கிட்டது.

அந்தப் பெண்மணி அந்த மிருகம் வந்தவுடன் போய்க் கத்தினா- இது உலகத்திலை எங்கையாவது நடந்திருக்கா? ஏன் அவளை இப்படிச் செய்தாய்? வீட்டிலை யாரும் தட்டிக் கேட்க முடியாது என்கிற திமிர்

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தானே? அவளுக்குப் பாதுகாப்பா இருக்க வேண்டிய நீயே இப்படிச் செய்தால் என்ன செய்வது என்று தலையில் அடித்துக் கொண்டு கத்தினா.

கடைசியில் அந்த மிருகத்தை ஒன்றும் செய்ய முடியாது என்ற இயலாமையில் தன் தலையில் தானே அடித்துக் கொண்டு கதறி அழுதா. அது ஏதோ திமிர் பிடித்து நடப்பதைப் போல் கத்தினாய் என்றால் நடக்கிறதே வேறை என்று பேசிவிட்டு வெளியில் போய்விட்டது.

நான் மூலைக்குள் நின்று எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு அழுதேன்.

கடைசியாக மண் அள்ளித் திட்டினா, எங்கையாவது நாசமாகப் போ................ இப்படி. இவ்வளவுதான் அவவால் செய்ய முடிந்ததெல்லாம்.

நான் தனித்திருக்கும் வேளையிலும், அனேகமான அன்றைய சில ராத்திரிகளிலும் இது தொடர்ந்தது. எதிர்ப்பதற்கான எந்தவிதமான மனபலமும் இல்லாமல் நான் பலியாடாய் நின்றேன்.

என்னால் முடிந்ததெல்லாம் வெறுமனே ஏதாவது மூலைக்குள் இருந்து அழுவதும், மனத்திற்குள் அந்த மிருகம் சீக்கிரமே செத்துப் போக வேண்டும் என்று எல்லாக் கடவுள்களுக்கும் நேர்த்தி வைப்பதும் மட்டுமே.

நான் கேள்விக்குறி ஆனேன்.

எனக்கு என் பற்றிக் கேள்வி எழுந்தது. நான் இனி எப்படி வாழ்வது? என் கனவுகளுக்கு நான் சொந்தமாக முடியாதா? நான் இனித்திருமணம் செய்து கொள்ள முடியாதா? நான் இன்னும் ஏன் தற்கொலை செய்யாமல் உயிர் வாழ்கிறேன்? யார் என்னைக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையில்.......... இன்னும் முடிவில்லாக் கேள்விகளாக!

முக்கியமாக அன்று நடந்த விசயத்தை யாரிடமாவது சொல்ல வேண்டுமா? சொன்னால் நான் கெட்டுப் போய்விட்டேன் என்று அர்த்தமாகுமா? இனி என் வாழ்க்கை சூனியம் தானா? நான் கலியாணம் செய்தால் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டுவிடுமா? நான் எனக்குள் முடிவெடுத்துக் கொண்டேன் நான் கலியாணம் செய்யாதுவிட்டால் யாருக்கும் தெரியாமல் மறைத்துவிடலாம் அல்லவா? அதை மறைப்பதன் ஊடாகத்தான் என் இருப்பைக் காப்பாற்றலாம் என்று எண்ணினேன். நான் வேறு என்னதான் செய்ய இயலும்?

அன்றைய நாட்கள் என்னுள் பெரிய வடுவாகவே மாறியது. யாருக்கும் தெரியாமல் நான் அழுதேன். பெரும்பாலும் தனிமையை விரும்பினேன் வேலியோரத்து மரங்களிடமும் பூக்களிடமும் கேட்டேன் நான் என்ன பாவம் செய்தேன் என்று. என் வேதனையை அவற்றுடன் மட்டுமே பேசிக் கொண்டேன்.

அநேகமாக எனக்குக் கிடைத்த காதல் கடிதங்களை எல்லாம் கிழித்து குப்பையில் போட்டேன். நானே எனக்குள் தீர்மானித்துக் கொண்டேன். நான் கெட்டுப்போய்விட்டவள். எனிமேல் எந்தவிதமான வாழ்விற்கும் நான் பொருத்தமில்லாதவள். அந்தச் சம்பவத்தால் நான் ஏதற்கும் தகுதியில்லாதவள். ஒதுங்கினேன். எல்லாவற்றிலும் இருந்து ஒதுங்கி ஏதாவது ஒரு மூலையையும் தனிமையையுமே எனது வாழ்வாக்கிக் கொண்டேன்.

எல்லாமே இன்றைய என்னுடைய அவனைச் சந்திக்கும் வரை தான். அவனுடைய கடிதங்களைக் குப்பையில் போட்டும் பிரயோசனம் இல்லை. அவன் எனது தனிமையையும் அமைதியையும் உடைப்பதற்காகவே வந்தவன் போல் கேள்விகள் கேட்டான். ஏன் பிடிக்கவில்லை. எதற்காக பிடிக்கவில்லை. நான் என்னை உனக்காக மாற்றிக் கொள்கிறேன் ............. இப்படி ஏதேதோ சொன்னான்.

நான் அவனிடம் தோற்றுப் போனேன். நான் எனது பழையவற்றை மறைக்கவும், மறக்கவும் முயற்சி செய்தேன். அவனுடைய கைகளுக்குள் சுழன்றேன். எல்லாமே சந்தோஷமாக இருந்தது. இந்தச் சில நிமிடங்களுக்கு முதல் அந்த மிருகத்தைப் போன்று அதே அரியண்டமான உருவத்துடன் அவன் என் எதிரே நிற்கும் வரை எல்லாமே நன்றாகத்தான் இருந்தது.

நான் அதிர்ந்தேன். அன்றையைப் போல் இன்றும் கோழையாய் மௌனமாய் அழுதேன்.

அவன் கேட்டான். உனக்கு இதில் விருப்பமில்லையா? இல்லாவிட்டால் என்னில் நம்பிக்கை இல்லையா? அதற்குமேல் உன் உடலில் அல்லது உன் மனதில் ஏதாவது பிரச்சினையா? டொக்டரிடம் போக வேண்டுமா? - நான் இன்னும் வீரிட்டு அழுதேன். அவன் சினந்தான்.

இப்ப எதற்காக அழுகிறாய் என்று என் தோள்களைப் பிடித்து உலுக்கினான். நான் கைவிட்டு விடுவேன் என்று பயப்படுகிறாயா? என்றான்.

நான் விம்மலோடு இல்லை என்று தலையாட்டினேன்.

அப்போ நாங்கள் இன்றே றிஜிஸ்ரார் பண்ணிக் கொள்வோமா? அதனூடாக ஆவது நீ என்னை நம்புவாயா? என்றான்.

நான் அழுகையினூடே வெடித்தேன்.

எனக்கு உன்னைப் பிடித்துள்ளது. உனது முத்தம் பிடிக்குது. உன்னில் எனக்கு நம்பிக்கை இல்லாமலா உன்னை நான் காதலித்தேன். நீ என்னை எதுவேண்டுமானாலும் செய்து கொள். என்னை முத்தமிடு. என்னை இறுக்கி அணைத்துக் கொள். இன்னும், எது வேண்டுமானாலும்...! ஆனால், இந்த சில நிமிடங்களுக்கு முன் நடந்ததே அது வேண்டாம். எனக்கு அது வேண்டாம் என்று கத்தினேன்.

எனது உடுப்பைப் போட்டேன், புத்தகங்களை அள்ளிக் கட்டிக் கொண்டு வீட்டை நோக்கி ஓடினேன்.

அவன் என்ன நினைக்கிறான் என்பது எனக்குத் தெரியாது. எனது உடல் பற்றிய சந்தேகத்தில் ஏதாவது யோசித்தல் கூடும். இன்னும் கேள்விகள் எழலும் கூடும். என் மனம் பற்றி எல்லாவற்றிற்கும் அதிகமாக யோசித்தல் கூடும். அதற்காகவே எந்த மென்ரல் டொக்டரிடம் என்னைக் கூட்டிப் போக வருவானோ தெரியாது. சிலவேளைகளில் எனிமேல் அவன் வராதுவிடலும் கூடும். எதுவும் எப்படியும் நடக்கலாம். நாளையே என்னுடைய பழைய வாழ்வுதான் எனக்கு முடிவாகியும் போகலாம். அதே தனிமை, அதே அழுகை....? இன்னும் இவன் தந்த வடுக்களுடனும்.

எனக்கு எதையுமே முழுமையாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. நான் இன்னும் இருட்டில் அவனுடைய கைகளையும், மடியையும் தேடுகிறேன். அந்தக் கைகளின் அணைப்பிற்குள் அவன் மடியில் அழுது தீர்ப்பதற்கு.

ஆனால், அன்றைய நாட்களையும் நான் உயிருடனே கொலையுண்டு போனது பற்றியும் இனியும் அந்தக் கொடூர நினைவுகளையும் எப்படி என்னால் சொல்ல முடியும். அதன் தாற்பரியத்தை, அது தந்த அதிர்வை, அது தந்த.......................!? எல்லாவற்றையுமே அவனால் புரிந்து கொள்ள முடியுமா? எல்லாவற்றுக்கும் அப்பால் எனக்காக என்னைக் காதலிக்க முடியுமா? இப்படி நினைப்பது கூட அர்த்தமற்ற ஒன்றுதானா?

...............!?

o



# பொ.ஐ.மு.வும் ஊடக சுதந்திரமும்

பிரபல பத்திரிகையாளரும், சண்டே டைம்ஸ் ஆங்கில வார இதழின் இராணுவ ஆய்வாளருமான இக்பால் அத்தாஸ் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து சுதந்திர ஊடக இயக்கம் எதிர்ப்பார்ப்பாட்டம் ஒன்றை பெப்ரவரி 11 புதனன்று நடத்தியது. இதில் நூற்றுக்கணக்கில் கலந்துகொண்ட பத்திரிகையாளர்கள், பொ.ஐ.மு. அரசாங்கம் வாக்குறுதியளித்த ஊடக சுதந்திரம் தொடர்பான கேள்விகளை எழுப்பி கோஷமிட்டனர்.

கடந்த அரசாங்க காலத்தில் போன்று சற்றுக்கும் குறைவில்லாத வகையில், இவ்வரசாங்கத்திலும் பத்திரிகையாளர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் இடம்பெற்றுக் கொண்டே வருகிறது. கடந்த ஐ.தே.க. காலத்தில் (1993இல்) இக்பால் அத்தாசுக்கு மலர் வளையம் அனுப்பி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், சுதந்திர ஊடகம் பற்றிய அதீத வாக்குறுதிகள் அளித்துவிட்டு ஆட்சிபீடமேறிய பொ.ஐ.மு. ஆட்சியிலோ இரண்டு தடவைகளுக்கும் மேலாக அத்தாசும் அவரது குடும்பமும் அச்சுறுத்தலுக்கும் தாக்குதலுக்கும் உள்ளாகியிருக்கின்றனர். சென்ற முறை இவர் மிரட்டலுக்கு உள்ளாகியது பற்றி, ஊடகவியலாளர்களுக்கு அரசால் வழங்கப்படுகின்ற உத்தரவாதங்கள் பற்றிய கேள்விகளை பேச்சுரிமைக்கான சர்வதேச ஸ்தாபனமான "ஆர்ட்டிகல் 19" ஜனாதிபதி சந்திரிகாவிடம் எழுப்பியிருந்தது. (ஜனாதிபதிக்கு இவ்வமைப்பால் அனுப்பப்பட்ட கடிதம் சரிநிகரிலும் பிரசுரமாகியிருந்தது.)

இவர் தாக்கப்பட்டதற்கான காரணம் என்ன? தாக்கியவர்கள் யார்? என்பன இன்னமும் தீர்க்கமாக அறியப்படவில்லை. ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருக்கையிலேயே இது தொடர்பான விசாரணை நடாத்த உத்தரவிடப்பட்டுள்ளதாக தொடர்புசாதனத்துறை அமைச்சர் அறிவித்தார். இச்சம்பவம் பற்றி அமைச்சர் அத்தாசுக்கு முன்னம், "The Government has nothing to do with this incident" (இந்தச் சம்பவத்தோடு அரசுக்கு எதுவும் செய்வதற்கில்லை) என்று தெரிவித்திருந்தார். உண்மையில் அத்தாசின் எதிரிகள் யார் என்பதில் சிரமமிருந்தாலும் அவரின் எதிரிகள் அரசு கட்சி சார்ந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் அண்மைக் காலமாக ஜயசிக்குறு நடவடிக்கைகளால் அரசுக்கு ஏற்பட்டு வரும் இழப்புக்கள் அதிலும் குறிப்பாக விமானப்படை விமானங்களுக்கு நேர்கிற கதி, விமானப்படைக்குள் நிலவுகின்ற மோசடிகள் என்பவை தொடர்பாகவும் எழுதியிருந்தார். எனவே இது அரசு சார் உயரதிகாரிகளால் நடாத்தப்பட்டிருக்கலாம் என்பதை மறுப்பதற்கி-

அத்துடன் அண்மைய கொழும்பு குண்டு வெடிப்பின் பின் புகைப் படங்களை பிரசுரிப்பது தொடர்பான புதிய சட்டமூலம் ஒன்றையும் அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. இதன்படி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்கள் அல்லது காயப்பட்டவர்களின் புகைப்படங்களை பிரசுரிக்கவோ அல்லது ஒளிபரப்பவோ முடியாது. இந்த அமுலாக்கத்துக்குப் பொறுப்பானவராக தகவல் திணைக்கள பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு நிலை குறித்து செய்தி திரட்ட பத்திரிகையாளர்களை அழைத்து செல்லும் போது தெரிவு செய்யப்பட்ட ஒரு சில பத்திரிகைகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. அப்படி வழங்கப்பட்டாலும் கூட குறிப்பாக தமிழ்ப் பத்திரிகைகள் தற்செயலாக மட்டுமே அழைத்துச் செல்லபடுகின்றனர். சரிநிகர் போன்ற பத்திரிகைகளை இது வரை அழைத்துச் செல்ல ஏனோ பின்வாங்கி வருகிறது. எப்படியோ வடக்குக்கு போனவர்கள் கூட படையினர் காட்டும் இடங்களையே கண்டு திரும்ப முடிகிறது. அங்கு சுதந்திரமாக பத்திரிகைகளை செய்தி திரட்ட விட்டதுமில்லை. புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசங்களுக்கோ அனுப்ப ப்படுவதுமில்லை. சில பத்திரிகையாளர்கள் மாத்திரம் மிக இரகசியமாக போய் வரவேண்டியிருக்கிறது.

அண்மையில் ஜனாதிபதிக்கெதிரான அவதூறான செய்திகளை பிரசுரித்தது என்ற குற்றச்சாட்டின் பேரில் "லக்பிம" பத்திகையின் ஆசிரியர் பந்துல பத்மகுமாரவுக்கு எதிரான வழக்கு தற்செயலாக ஆசிரியருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப் பட்ட போதும் அது மீண்டும் சட்ட மா அதிபரால் நிராகரிக்கப்பட்டு மேன் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறெல்லாம் பத்திரிகையாளர் சுதந்திரமாக இயங்க முடியுமோ அவ்வழிகள் எல்லாம் மிகவும் நுணுக்கமான முறையில் அடைக்கப் பட்டு வருகின்றனர்.

அரசின் இந்தப் போக்குகளுக்கெதிராக எவ்வளவு தான் ஆர்ப்பாட்டம் நடாத்தி கோரிக்கை விடுத்தாலும் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கிறது. இந்தப் போக்கில் போனால் மீண்டும் தணிக்கை முறை அமுல் படுத்தப்படும் போல தோன்றுகிறது. அல்லது அரசின் அறிக்கைகளையும் ஆளுங் கட்சிக்காரர்களது உரைகளையும் மட்டுமே பத்திரிகைகள் பிரசுரிக்க வேண்டுமென்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ல்லை. அத்துடன் தாக்குதல்காரர்கள் வைத்திருந்த கைத்துப்பாக்கிகள் அரசினால், பாதுகாப்பு தரப்புக்கு வழங்கப்படுபவை என்பதும் ஊர்ஜிதமாயிருக்கிறது.

அரச பாதுகாப்புப் படை சார்ந்தவர் பத்திரிகையாளரை தாக்கிய இது போன்ற இன்னுமொரு சம்பவம் கேகாலையில் இடம்பெற்றுள்ளது. பிரதிப்குமார தர்மரத்தின என்ற 24 வயதான அரச செய்திப் பத்திரிகையான தினமினவின் நிருபர் கடந்த 26ஆம் திகதி பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். அரநாயக்காவில் நடைபெற்றுவரும் கசிப்பு வியாபாரம் பற்றியும் அது தொடர்பில் பொலிஸாருக்குள்ள உறவு குறித்தும் எழுதியமைக்காகவே இவர் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார். இது தொடர்பான விசாரணைகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

எவ்வாறிருப்பினும் கடந்த அரசைவிட இந்த அரசில் பத்திரிகையாளருக்கு எதிரான, பத்திரிகைச் சுதந்திரத்திற்கு எதிரான சம்பவங்கள் அதிகளவில் இடம் பெற்றுவருகிறது. ஊடகவியலாளர்களுக்கு எதிராகச் செயற்படும் மோசமான நாடுகளில், இலங்கை நான்காவது இடத்தில் இருப்பதாக உலக சுதந்திர பத்திரிகை அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பத்திரிகையாளருக்கு வழங்கப் படுவதாக கூறிய வாக்குறுதிகள் எல்லாம் காற்றிலே பறக்க விடப்பட்டுள்ளன. இருந்த சலுகைகள் இல்லாதாக்கப்பட்டிருக்கின்றன. பத்திகையாளர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் அச்சுறுத்தலுக்குள்ளாகிக்கொண்டு வருகிறது.

பத்திரிகையாளர்களுக்கென இலவச பிரயாணச் சீட்டு, ஓய்வூதியத் திட்டங்கள் என்பன போன்ற வாக்குறுதிகளுடன் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தது. எல்லோரிடமும் சுதந்திர ஊடகம் தொடர்பான நிறைய எதிர்பார்ப்புக்கள் இருந்தன. எல்லாம் இன்று தலைகீழாகி விட்டன.

தகவல் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற பத்திகையாளர் அடையாள அட்டையைக் கொண்டு முன்னர் பத்திரிகையாளர் தமது கடமைகளைச் செய்யக்கூடியதாக இருந்தது. இப்போது, அதன் தரமும் பயனும் குறைத்து விடப்பட்டுள்ளது. முன்னைய் அடையாள அட்டைக்ளையும் தற்போதைய அடையாள அட்டைகளையும் பார்க்கும் எவரும் இந்த அரசு பத்திரிகையாளர்கள் மீது இறுக்கத்தை கொண்டு வருகிறது என்பது புரியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









# புவியியல் கல்வி : அன்ரனி நோபேட்டின் இரு நூல்கள், பல்கலைக்கழகங்கள், தமிழ்ச் சூழல் பற்றிய சில அவதானக் குறிப்புகள்

— மாலின் —

இலங்கையில் பள்ளிக்கூட, பல்கலைக்கழக கல்வித்திட்டங்களில் புவியியல் நீண்டகாலமாக ஒரு முக்கிய இடத்தைப்பெற்ற பாடமாக உள்ளது ஆண்டு 6 -11 வரையறைக்குப்பட்ட வகுப்புக்களில் புவியியல் சமூகக்கல்வி வழியாக கற்பிக்கப்படுகிறது. இடைநிலைக் கல்வியில் சமூகக்கல்வி கட்டாய பாடமாகவும் இருக்கிறது. அதோடு க.பொ.த. (உ/த) கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளில் புவியியல் முக்கியமானதொரு பாடமாக இருக்கிறது. இதனால் இதனைக் கற்கும் மாணவர்கள் தொகையும் அதிகரித்து காணப்படுகிறது. பொருளியல் பாடத்திற்கு அடுத்த படியான அதிகப்படியான எண்ணிக்கையுள்ள மாணவர்கள் கற்கும் பாடமாகவும் இது உள்ளது.

ஆனால், இப்போது உயர்தர வகுப்பில் புதிய பாடங்கள் அறிமுகம் செய்யப்பட்டதன் விளைவாக பாடத்தெரிவில் மாணவர்களுக்குக் கூடிய சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் புவியியல் கற்கும் மாணவர்கள் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படுகிறது. இன்று கலை வர்த்தக பாடங்களைக் கற்கும் மாணவர்களின் அதிகரிப்பு வீதத்துடன் ஒப்பிடும் போது புவியியல் கற்கும் மாணவர்களின் வளர்ச்சி வீதம் குறைவு.

உயர்தர வகுப்பு மாணவர்கள் புவியியலைக் கற்க விரும்பினாலும் இதனது பாடவிதானம் ஏனைய கலைப்பாடங்களின் பாடவிதானத்திலும் பார்க்க சற்றுக்கூடுதலாக இருப்பதனாலும், மேலும் இப்பாடம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டிருப்பதனாலும் மாணவர்கள் புவியியலைத் தெரிவு செய்வதில் தயக்கம் காட்டுகின்றனர்.

உயர்தர விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கும் புவியியல் ஒரு பாடமாக கற்கக்கூடியதாக விருப்பினும் இந்நாட்டு பல்கலைக் கலைகழங்களின் விஞ்ஞான பீடங்களில் புவியியல் ஒரு பாடமாக கற்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் இல்லை. மருத்துவம், பல்வைத்தியம் போன்ற துறைகளுக்கு புவியியல் அங்கீகரிக்கப்படாத பாடமாக இருப்பதனாலும் விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் புவியியலை ஒரு பாடமாக எடுப்பது இல்லை.

இன்று புவியியல் கல்வி கலை, சமூக, விஞ்ஞானம், மனிதப்பண்பியல் ஆகிய பீடங்களிலேயே கற்பிக்கப்படுகின்றது. இதனை மாற்றி விஞ்ஞானப் பிரிவு மாணவர்களும் புவியியலைக்கற்க வழி செய்யப்பட வேண்டும்.

சர்வதேசப்பரப்பில் புவியியல் ஒரு தனித்த பெருந்துறையாக பரிணமித்து வளர்ச்சியடைந்துள்ளது. புவியியலில் ஈடுபாடுகொண்டவர்கள் மத்தியில் மட்டுமல்லாது, அதன் வெவ்வேறு பிரிவுகளிலும் புலமை கொண்ட அறிஞர்கள் மட்டத்திலும் இடையறா ஊடாட்டம் கொண்டு கற்பித்தல் ஆராய்தல் இன்னும் பன்முகப் படுத்தப்பட்டு வருகிறது.

பொதுவில் புவியியல் கற்றகைநெறி பன்முக கற்கை நெறிகளையும் உள்வாங்கிக்கொண்ட ஓர் அறிவுத் துறை. குறிப்பாக பௌதீகவியல், கணிதம், தாவரவியல் போன்ற விஞ்ஞான அணுகுமுறைகளின் அம்சங்களையும் உள்வாங்கி ஓர் விஞ்ஞான பூர்வமான கற்கை நெறியாக புவியியல் வளர்ச்சி பெற்றுள்ளது.

அதோடு ஏனைய கற்கைப் புலங்களான சமூகவியல், சமூக வரலாறு, பொருளியல், மனிதப்பண்பியல் என்று தனது பரப்பை அதிகரித்து ஆழப்படுத்தி புதிய சிந்தனை முறைகளையும் தோற்றுவித்தும் புவியியல் வளர்ந்து செல்கிறது.

இன்று ஈழத்திலேயே தமிழில் புவியியல் சிந்தனைப்பரப்பை நாம் மறுமதிப்பீட்டுக்கு உள்ளாக்கும் போது திருப்திகரமான பதில் எமக்குக் கிடைப்பதாக இல்லை. தமிழ் மொழி வழி மாணவர்களின் புவியியல் சிந்தனை, கற்றல் இன்னும் ஆரம்ப மட்டத்திலேயே உள்ளது. இன்று வரை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எனப்பலர் புவியியல் துறையில் தோன்றியிருப்பினும் தமிழ் மொழி வழி மாணவர்களின் சிந்தனை கற்றல் மட்டங்களில் இவர்கள் குறிப்பிடக் கூடிய தாக்கம் மாற்றம் எதனையும் நிகழ்த்தாதவர்களாகவே உள்ளனர்.

ஆரம்பத்தில் பேராசிரியர்கள் கே. குலரத்தினம், ஜி. தம்பையாபிள்ளை போன்றோர் அமைத்த சிந்தனைப் பரப்பை, கற்றல் முறையை இன்றைய புதிய முறைமைகளுடன் அதிகரிக்க முடியாதவர்களாகவே பின்வந்தோர் இருந்தனர்.

இவர்கள் புவியியல் அறிவை மாணவர்கள் மத்தியில் பரப்புவதற்கும், சிந்தனையைத் தூண்டுவதற்கும் மாணவர்களை தேடலில் ஈடுபடுத்துவதற்கும் தமது வாய்மொழி உரைகளிகளிலேயே -பாரம்பரியத்திலேயே முற்றாகத் தங்கியுள்ளனர். மாறாக, புவியியல் சிந்தனைக்கு எழுத்து வடிவம் கொடுத்து பல நூல்களை தமிழில் வெளிக்கொணர முடியாத ஒரு பரம்பரையினரையே நாம் கொண்டுள்ளோம்.

இன்று புவியியலில் எத்தனை தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளன என்றதொரு கணக்கீடு போதும் இதனை நன்கு புரிந்துகொள்ள. இது புவியியல் துறைக்கு மட்டுமல்ல, ஏனைய பொருளியல், அரசியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கும் பொருந்தும்.

இலங்கை மட்டத்தில் நோக்கும் போது சிங்கள மாணவர்களிடையே பல்வேறு புதிய நூல்கள் சிங்கள மொழி மூலம் கிடைக்கும். வாய்ப்பு அதிகமாக உள்ளது. ஆனால் தமிழில் மட்டும் நூல்கள் குறைவு. அல்லது இல்லை. இது ஏன்? இது குறித்து சற்றுச் சிந்திக்க வேண்டிய கட்டத்திலேயே நாம் நிற்கிறோம்.

இன்று மாணவர்களின் கற்றல் தேவைகளை நிறைவு செய்வதற்கு குணராசா (செங்கை ஆழியான்) எழுதிய பல புவியியல் பாட நூல்கள் உள்ளன. ஆனால் இவை 70களின் ஆரம்பத்தில் எழுதப்பட்டவை. அதோடு இதே பழைய தரவுளைக் கொண்டு மீண்டும் மீண்டும் புதிய பதிப்புக்களாக அவை வெளிவந்துள்ளன. அதாவது உள்ளடக்கத்தில் எதுவித மாற்றமுமின்றி நூல்களின் தலைப்பையும் முன்பக்க அட்டையையும் மாற்றி மாற்றி வெளியிடப்பட்டு வருகிறது. மாணவர்களும் வேறு வழியின்றி இந்நூல்களிலேயே தஞ்சம் புகவேண்டியுள்ளது. தொடர்ந்து மாணவ்ர் சமூகம் ஏமாற்றப்பட்டு வருவதை குணராசா போன்றவர்களும் சரி ஏனைய புவியியற் துறையிலுள்ளோரும் சரி ஏனோ புரிந்து கொள்வதில்லை.

1970களின் பிற்பாடு தமிழ்ச்சமூகத்தின் அசைவியக்கம் வேறு ஒரு பரிமாணநிலைக்குள் தள்ளப்பட்டு வருகிறது. பல்வேறு நெருக்கடிகளையும், அவலங்களையும் முகங்கொடுத்து வரும் - வாழந்துவரும் ஒரு சமூகமாகவே தமிழ்ச்சமூகம் இன்று உள்ளது.

இதனை விளங்குவதற்கும், விளக்குவதற்கும் ஏற்றவிதத்திலும் எமது சிந்தனை, கற்றல் குவிக்கப்பட வேண்டும். இதனை ஏனோ எமது பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் புரிந்து கொள்ள மறுக்கின்றனர்.

அதோடு இக்காலப்பகுதிக்குள் புவியியல் ஆய்வுகள் வடகிழக்கு பிரதேசங்களை உள்ளடக்கிய முறையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பெருமளவில் அப்படி அமையவில்லை. அல்லது வந்தவை எமது சிந்தனையில் தாக்கம் நிகழ்த்தக் கூடியதாகவோ எம்மைச் சூழ்ந்துள்ள பிரச்சினை மையங்களைப் புரிந்து கொள்ளக் கூடியதாகவோ அமையவில்லை. இதனை இன்றைய தலைமுறையினர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். தங்களுக்குரிய பொறுப்பை உணர்ந்து செயற்படவேண்டும். அதே தவறுகள் மீண்டும் மீண்டும் தொடர்வதை நிறுத்த வேண்டும். முன்னைய தலைமுறையினரை வெறுமனே திட்டித்தீர்த்துக் கொண்டிருக்காமல் தமது காத்திரமான பங்களிப்புக்கள் மூலம் ஆரோக்கியமான சிந்தனைத் தளங்களை நோக்கி விரித்துச் செல்ல வேண்டும்.

பொதுவில் பல்கலைக்கழகங்களுக்கு இருவகையான தொழிற்பாடுகள் உண்டு என்பர். ஒன்று கற்பித்தற்றொழிற்பாடு. இது வளர்ந்து வரும் பல்வேறு துறைசார் நிலைப்பட்ட

→18

# போர்க்காலம்

— ஜபார் —

1
சுரங்கத்து வீட்டு மொட்டை மாடியில்
தலைவி உலாக் கொண்டாள்
ஆஹா என்ன அதிசயம்
சுரங்கத்து வீட்டிலும் ஒரு மொட்டைமாடி

தலைவி சேலைகள் தேர்ந்தாள்
ஊதா நிறத்தை உடுத்த முன்னமே
எரிந்து போயிற்று
நீல நிறத்தில் காதல் கொண்டாள்
ஆகாயமும் கடலும் வெவ்வேறு நிறமென்றாள்
அணிவகுப்புகளில் ஆயிரம் நிறங்கலந்து நடந்தாள்
வழிப்போக்கர்கள் அழுதனர்
முற்போக்கர்கள் சாமரம் வீசினர்

சில கிழட்டு வெள்ளைப் புறாக்களுக்கு
தலைவி தானியம் சிந்தினாள்
அவைக்கு அம்பெய்யக் கற்றுத் தந்தாள்
தனது பரம்பரைத் தானிய மென்றாள்
இன்று வரை எய்யப்பட்ட அம்புகளுக்காய் மகிழ்ந்தாள்

சுரங்கத்து வீட்டு மொட்டை மாடியில்
தலைவி உலாக் கொண்டாள்.

2
கைகளும் கால்களும் கண்களும்
தனித்தனியே கிடந்து துடித்தன
இழந்து போனவர்கள் அவை வேண்டுமெனக்
கூக்குரலிட்டனர்

விமானங்கள் வட்டமிட்டன
குண்டுகள் இடைவிடாது பொழிந்தன
துப்பாக்கிகள் ஓய்வின்றி வெடித்தன
இரைச்சலுக்கிடையில் கூக்குரல்கள்
அமுங்கிப் போயின

அழுகையே தனது பாடலாகிப்போன
வயோதிகன் ஒருவன் காற்றின் மீது
தன் கைத் தடியை ஓங்கி அறைந்தான்
ஆன்மாவைக் காவு கொடுத்த தேசமென்றுரைத்தான்

சிலையாவதா நெருப்பாவதா
என்ற திகைப்பிற்கிடையே
விக்கித்து நின்றேன் நான்.

3
ஆயுளைக் கடித்துக் குதறும்
கரிய இரவுகளில் பனி பெய்தது
அரும்புகள் விறைத்துதிர்ந்தன
தெருக்களெங்கும்
மாமிச வெறியுடன் நாய்கள்
காற்றின் மீது பிணத்தின் நெடி
ஆறுகளில் இரத்தத்தின் நிறம்
கடலோரம் கண்களற்ற தலைகள்

"குளிருக்குப் போர்வை வேண்டும் "
"குளிருக்குப் போர்வை வேண்டும் "
உணர்ச்சி பொங்கக் கூவியவர்கள் பலர்
நெடுந்தூரம் போயினர்


பருவ கால மாற்றங்களின் போதும்
பனி தொடாடர்ந்தது
போனவர்கள் திரும்பினர்
குளிருக்குப் போர்வை தேவையில்லை
கோவணமே போதுமெனக் கூவினர்

பனி தொடர்ந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கனவு மெய்ப்பட வேண்டும்!

பௌசியா ராவீக்

தமிழில் : எச்.ஏ.எஸ். செல்லம்மா

எனது பெயர் பௌசியா ராவீக்.

நான் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானவள்.

எனக்கு இப்போது 38 வயதாகின்றது. ''நான் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானதன் பின்பும் வாழ்ந்து வருபவள்'' என, பெண்கள் ஒன்றுகூடல் ஒன்றில் எழுந்து நின்று, எனது தலையை நிமிர்த்திக் கூற, எனக்கு 27 வருடங்கள் எடுத்துள்ளன.

இவ்வாறு சொல்வதில் என்ன துக்கம் இருக்கிறது. மிகப்பெரிய துக்கம்!?

என்னுடைய மூதாதையரில் , கஷ்டங்களை எதிர்கொண்டு தப்பி உயிர் வாழ்பவள் நான் ஒருத்தி மட்டுமே'' என உங்களிடம் கூறுவதில், எந்த விதமான தற்பெருமையும் இருக்க முடியாது. என்னுடைய மூதாதையர் யார்? எனக்குத் தெரியும். என்னுடைய மூதாதையர் பெண்கள். எனது கண்களால் பார்க்க முடிந்த போது நான் பார்த்தது பெண்களை. திருமணமான பெண்கள் அவர்களின் கணவன்மாரின்றி உடலுறவு கொள்வதால், அவர்களது யோனியில் ஏற்படும் வலியினால் ஒவ்வொரு இரவும் கடும் வேதனையை அனுபவிக்கின்றனர். செல்வந்த வீடுகளில் வேலை செய்யும் இளம்பெண் வேலையாட்களின் உடலைப்பயன் படுத்துவது அக்குடும்பத்தில் ஆண் உறுப்பினர்களின் பிறப்புரிமையாகக் கருதப்படுகின்றது.

நாம் பெண்ணாகப் பிறந்திருப்பதனால் ஏற்பட்ட மோசமான வெட்கமானது, இளம் பெண்களான எம்மைத் தலைமறைவாக இருக்கத் தூண்டியது அறிமுகமற்ற ஆண்களால் உள்ளசு அங்கங்கள் தடவிப் பார்க்கப்பட்டு துன்புறுத்தப்படுவதை தவிர்ப்பதற்காக நகர சந்தைகளுக்குப்போவதைப் பெண்கள் தவிர்க்கின்றனர். பெண் குழந்தைகளை அறிமுகமான ஆண்கள், முத்தங்களைக் கொடுத்து மட்டுமல்ல புணர்ந்து கூட தமது இச்சைகளைத் தீர்த்துக் கொள்கின்றனர்.

''உயிர்வாழ்தல்'' என்ற சொல்லின் உண்மையான அர்த்தம் தொடர்பாக எனக்குத் தெளிவில்லை. நான் உயிர்வாழ்வதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்பது பற்றியும் எனக்குத் தெரியாது. ஏனெனில், எனது குழந்தைப் பருவத்திலும், இளமைக் காலத்திலும் ஒரு ஆணால், (என்னுடைய தகப்பன்) நான் பாலியல் ரீதியான வன்முறைக்கு உள்ளாகாமல் இருந்திருந்தால் எனக்கு என்ன நடந்திருக்கும் என எனக்குத் தெரியாது.

நான் எவ்வளவு விந்தையானவள் என்றும், மன உறுதிமிக்கவள் என்றும் எனக்குத் தெரியும். என்னுடைய ஆத்மா குடியிருக்கும் உடலின் மேல் அசிங்கமான தழும்புகளை இன்னும் நான் காவிக் கொண்டிருக்கின்றேன் என்று கூட எனக்குத் தெரியும். அவை, பயங்கொள்ளச் செய்யும், துன்புறுத்தும், குற்றம் கூறும் தழும்புகளே.

அதனால் ஒரு ஆணால் எனக்கிழைக்கப்பட்ட கொடுமையான துன்பங்களின் அளவை அல்லது அதன் பெறுமதியை பட்டியலிடுவதைவிட வேறு ஒரு வழியும் நானறியேன். மனித தோற்றம் பற்றிய அடையாளத்தை கண்டு தீர்மானிக்க பல மில்லியன் ரூபாய்களை நாம் செலவு செய்யும் அதேவேளை, பெண்களால் கண்டுபிடிக்கக்கூடிய இயற்கையைப் பற்றியும், பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் வன்முறை சீரழிவுகளினால் ஏற்பட்ட உடல் நலப் பாதிப்புக்களையும், தாக்கங்களையும் பற்றி ஆராய ஒரு வழிமுறைகூட இல்லை என்பது துயர் தருகிறது.

இதனால், ''உயிர் வாழ்தல்'' என்ற சொல் எனக்குப் பெரிதாக எதையும் கூறவில்லை.

அத்துடன், நான் மட்டும் தனித்து ஒரு ஆள் அல்ல. இதில் எமது முழு மூதாதையரும் இருக்கின்றனர். ஒவ்வொருவரும் தனிமைப்பட்டு, குழம்பி, குற்றமடைந்தவர்களாக இருக்கின்றனர். இயற்கையின் அழிவுகளையோ அல்லது அதன் தன்மைகளைப் பற்றியோ தெரியாமல் இருக்கின்றனர். ஒருவருக்கு ஒருவர் கதைக்க முடியாமல், உதவ முடியாமல் இருக்கின்றனர்.

பதினாறு வயது முதல் 20 வயது வரை என்மீது பல இம்சைகள் செய்யப்பட்டுள்ளன. நான் பல மலைகளை நகர்த்தியிருக்கிறேன். ஆனாக இருந்திருந்தால் நான் விட்டை விட்டு வெளியே சென்று இருக்க முடியும்.

அது எனக்கு நல்லது எதைச் செய்தது? அவர் இன்னொரு வீட்டுக்குச் சென்றால் அங்கு இவரை ''மாமா'' எனக் கூப்பிடும் பெண் பிள்ளைகள் மூவர் இருக்கின்றனர்.

1947 இல் இந்தியா சுதந்திரமடைந்தது. அதே காலப்பகுதியில் தான் பல மில்லியன் தென் ஆசியப் பெண்கள், இந்து, முஸ்லிம், சீக்கியர், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு பாலியல் ரீதியான முறையில் உடல் உறுப்பு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

1988 பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாநிலத்தில் நாவப்பூரில் குடும்பப் பிரச்சினையினால், பாரம்பரியமாக பர்தா (முகத்திரை) போடும் ஒரு குடும்பப்பெண், துப்பாக்கி முனையில் வீட்டுக்கு வெளியே இழுக்கப்பட்டு மேலாடைகள் கழற்றப்பட்டு, நவாப் பூர் வீதிகளில் இழுத்துச் செல்லப்பட்டார். ஒருவரும் இதைத் தடுக்க முன்வரவில்லை. இரு குடும்பங்களைச் சேர்ந்த இரு ஆண்களுக்கு இடையிலான பிரச்சினை இது. ஆண்களைப் பழிதீர்ப்பதற்குப் பதில் பெண்கள் பகடைக் காய்களாக்கப்பட்டனர்.

1991இல் நைரோபியில் 80 இளம் பெண்கள் சேர்ந்த கூட்டம் ஒன்று, ஆண்களால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டது.

1992 பாகிஸ்தான் இந்தியாவில் நடைபெற்ற இனப்பிரச்சினையின் போது, பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர் கூடவே பாலியல் ரீதியான வன்முறையிலும் சமய ரீதியாக அட்டூழிய நடவடிக்கைகளிலும் இருபக்க ஆண்களும் ஈடுபட்டனர்.

1992 பொஸ்னியாவில், உள்நாட்டு யுத்தம் நடைபெற்றது. அப்பொழுது பெண்கள் பாலியல் ரீதியாக சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவதை தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பினார்கள். ஒருவரும் அதை நிற்பாட்டவில்லை. அப்போது தொடர்பூடகத்திற்கு அது ஒரு மிகப்பெரிய செய்தியாக இருந்தது. 1993 டொரன்டோவில் ஒரு இளம் பெண்ணை நான்கு இளம் ஆண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார்கள்.

அப்படியிருந்தும் நான் உயிர் வாழ்ந்தேன். ஆனால் இப்படி உயிர்வாழ்வதில் என்ன நன்மை? தழும்புகள் இப்பொழுதும் இருக்கின்றன. என்னுடைய ஆன்மா இப்பொழுதும் வலிக்கிறது. இப்பொழுதும் எனது உடம்பை நான் வெறுக்கிறேன். எனது மூதாதையர் இப்பொழுது குழப்பத்துடன் தனிமைப்படுத்தப்பட்டும், வெட்கத்துடனும், பயத்துடனும் வாழ்கிறார்கள் என்பதை நான் அறிவேன்.

இயந்திரத்தனமான நடைமுறையை மாற்றுவது எங்களுடைய வாழ்க்கைக்கு சிக்கலான தீர்வாக இருக்கும். இந்த இயக்கம் பெண்களை மிகவும் ஆழமாகச் சிதைக்கும்.

இந்த மாற்றத்தைப் பார்ப்பதற்கு நாம் வாழவேண்டியது எமது பிறப்புரிமையாகும்.

எனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாமல் இருக்கலாம். ஆனால், எனக்கு ஒன்று மட்டும் தெரியும். ஒரு தனிப்பெண்ணின் உயிர் வாழ்தல் என்பது உயிர்வாழ்தலே அல்ல என்று எனக்குத் தெரியும். எனது மூதாதையர் ஒன்றுபட்டு நடவடிக்கை எடுத்திருந்தார்களானால், மாற்றம் நடைபெற்றிருக்கும் என நான் அறிவேன்.

பெண்களின் ஒன்று கூடலானது, பெண்கள் ஒன்று சேர்வதற்கும், தனித்த பெண்ணின் உயிர்வாழ்தலுக்காக ஒன்றுபட்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையையும், உயிர்வாழ்வதற்காக் அறிவூட்ட வேண்டியதையும் நோக்காகக் கொண்டு இருக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் முடிந்த மட்டும் ஒத்துழைத்து கூடி திட்டம் தீட்டி,மற்ற இனங்களைச் சேர்ந்த பெண்களுடன் கூட்டமைத்து இனவாதம், வன்முறை, பாலியல் வன்முறைகளுக்கு எதிராக உறுதியுடன் போராடுவதன் மூலம் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை, வல்லுறவுகள் மேலும் நடக்காதிருப்பதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

இது சாத்தியமில்லாதது போல் இருக்கலாம். அது அப்படியல்ல? இது ஒரு கனவு என நீங்கள் கூறுகின்றீர்களா? சில நேரம் நீங்கள் சரியாக இருக்கலாம். சிலநேரம் உங்களுடையது பிழையாகவும் இருக்கலாம்.

இது கனவாக இருந்தாலும் பெண் சமூகம் உண்மையாக உயிர் வாழ்தல் என்பது இந்தக்கனவு நனவாதலில் மட்டுமே உள்ளது.

நன்றி: The Gathering

# கனடாவில் நிகரி அறிமுகமும், புத்தக வெளியீடும்





நிகரி நிறுவனத்தின் முதலிரு வெளியீடுகளான 'நாளை இன்னொரு நாடு'(எம்.கே.எம்.ஷகீப்), 'வனத்தின் அழைப்பு' (அஸ்வகோஸ்) ஆகிய கவிதை நூல்கள் வெளியீட்டு விழாவும், நிகரி நிறுவனம் பற்றிய அறிமுக விழாவும் டிசம்பர், இருபதாம் திகதி கனடாவின் தொறன்றோ மாநகரில் இடம் பெற்றது.

'காலம்' இலக்கிய இதழின் ஆசிரியரான செல்வம் விழாவுக்குத் தலைமை தாங்கினார். சரிநிகர் பத்திரிகையூடாக வெளித் தெரிய வந்த முக்கியமான கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் பற்றிக் குறிப்பிட்டு, நவீன தமிழிலக்கியத்துக்குப் புதிய வளங்களைச் சேர்க்கும் வகையில் நிகரி, வெளியீடுகளைச் செய்யும் எனத் தான் நம்புவதாகத் தெரிவித்தார் செல்வம். கூடவே வெளியீட்டாளர்களின் சிரமங்கள் பற்றியும் விரிவாகப் பேசினார்.

கவிதை நூல்களைப் பற்றி என்.கே. மகாலிங்கம், கலாநிதி பார்வதி கந்தசாமி ஆகியோர் பேசினர். அஸ்வகோஸின் கவிதைகளைப் பற்றி, அவை இருண்மை சார்ந்தனவாகவும், புரியாமலிருப்பவை எனவும் மகாலிங்கம் குறிப்பிட்டார். ''ஈழத்துத் தமிழ்க் கவிதைகளின் முக்கியமான அம்சம் தெளிவும், விளக்கமும் தான். அந்த இயல்புகள் அஸ்வகோசின் கவிதைகளில் குறைவாகத் தான் உள்ளன'' என்று அவர் மேலும் தெரிவித்தார். தொகுப்பிலுள்ள கவிதைகளில் நல்லதெனவும் தனக்குப் பிடித்தமானதெனவும் ''சுலோ'' என்ற கவிதையைக் குறிப்பிட்டு அதனைச் சபையோருக்கு மிகவும் இயல்பாக வாசித்தார்

மொழி பெயர்ப்புக் கவிதைகளின் தேவைகள் பற்றியும் மொழி பெயர்ப்புச் சிக்கல்கள் பற்றியும் குறிப்பிட்ட பார்வதி கந்தசாமி அவர்கள் ஷகீப்பின் மொழி பெயர்ப்புக்களை வெகுவாகச் சிலாகித்துப் பேசினார். பெண்ணியப் புலப்பதிவுகள் பற்றிய பிரக்ஞை இல்லாமல் இருப்பது ஒரு பெரிய குறைபாடு என்று சொல்லிய பார்வதி மிகப் பெரும்பாலான தமிழ்க் கவிஞர்களிடம் இந்த அடிப்படைப் பலவீனம் இருக்கிறது என்றார்.

புலம்பெயர்ந்த நிலைமை, யுத்தம் போன்றன எவ்வாறு எழுத்தாளர்களைப் பாதிக்கின்றன என்பது பற்றிய ஒரு சமூகவியல் கண்ணோட்டத்தை செ. ராஜேந்திரன் அவர்கள் வழங்கினார். இலக்கியத்துக்கும், நெருக்கடிகளுக்கும் இடையிலான சிக்கலான உறவுகள் பற்றிய ஒரு ஆழமான உரையாக அமைந்தது ராஜேந்திரனுடைய பங்களிப்பு.

இதனைத் தொடர்ந்து தொறன்றோக் கவிஞர்கள் எழுவர் தங்களுடைய கவிதைகள் சிலவற்றைச் சுவைபட வாசித்தனர்.

'ழ'கரம் ஆசிரியர் குழுவில் ஒருவரான திருமாவளவன், பா.அ.ஜெயகரன், சக்கரவர்த்தி, சகாப்தன், பொன்னையா விவேகானந்தன் ஆகியோருடன் ஆங்கிலத்தில் கவிதை எழுதி வருபவரான நீத்ரா, தன்னுடைய கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பை வாசித்தார். கவிதைகள் அச்சம், உவகை முதல் கழிவிரக்கம், துயரம் வேதனையிலும் இருந்து அவல நகைச்சுவை வரை பலவகையான உணர்வு நிலைகளைப் பகிர்ந்து கொண்டன.

இறுதி நிகழ்வாகத் திவ்வியராஜன், மஹாகவியின் 'புதிய தொரு வீட்டிலி'ருந்து சில பாடல்களையும், தனது பாடல்கள் சிலவற்றையும் பாடினார். சிறிகாந்த் உடுக்கு வாசிக்க கீர்த்தனன் திவ்வியநாதன் வாசித்த தபேலாவுடன் சபையோரும் இடையிடை கலந்து கொண்ட பாடல் நிகழ்ச்சி இனிதான முத்தாய்ப்பாக அமைந்தது.

-சே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நூல் விமர்சனம்

## முகம் தேடும் மனிதன் : தமிழ்ச் சமூகத்தின் இதய முனகலின் தீர்க்கமான வெளிப்பாடு!

நேசன்

### இறுதிப் பகுதி...

தனிமையான மரணம், மரணத்தை விடக்கொடுமையானது. இக்குழந்தைகள் மரணம் போரால் மட்டும் நிகழவில்லை. மின் கம்பங்களே நீதிக்கான தராசாக மூளைச் சவரம் செய்யப்பட்ட போது அவர்களின் ஆன்மாவும் இறந்து போனது. ஊர்ப் பொடியளின் துவக்கு வலிமையை பெருமிதத்துடன் ஆதரித்த பிரகாசத்தின் அவசர நியாயம் தனது மகனின் முகத்தில் ''மொழு மொழுவென்ற குழந்தைத்தனம் மறைந்து. காய்ந்து கறுத்து லேசாக முரட்டுத்தனம் அப்பியிருந்த'' போது கனமாய் விழித்துக்கொண்டது. மின்கம்பத்தில் தூங்கிய முகத்திற்கும் தனது மகனுக்கும் உள்ள தொடர்பு தான் என்ன· என்ற அடிமனக்கேள்வி அவரை பொறிபட்ட விலங்கு போல் வாட்டியது.

சுவரொட்டியிலுள்ள வீரர்களின் முகங்களும், மின்கம்ப முகங்களுமே நல்லதையும், கெட்டதையும் எடுத்துக்காட்டும் சமூக ஒழுக்கச் சுட்டிகளாக மாறியதைக்கண்ட பிரகாசத்தின் மனம் குறுகிப்போனது. உலகை கறுப்பும் வெள்ளையுமாக மட்டுமே பார்க்க வேண்டும் என்ற அரசியல், கருத்தியல் பலாத்காரம் அவரது தேடலில் ஓர் விகாரத்தை ஏற்படுத்தியது. காலம் கடந்த ஞானம் அவருக்கு மட்டும் உரித்தான ஒன்றல்ல.

*புனிதத்தின் பெயரால் எழுந்த*<br>
*அகோரம்*<br>
*பயமாய்*<br>
*வெட்கமாய்*<br>
*மூத்த தமிழனின்*<br>
*பிடிநிழலாய்*<br>
*கலாசாரத்தின்*<br>
*புதுவடிவாய்*<br>
*தமிழன்னைமுன்*<br>
*எழுந்து நின்றது.*

*வெளிச்சத்தில்*<br>
*தம்நிழலை*<br>
*பார்க்கவும் கூசி*<br>
*நிழலை விட்டு*<br>
*ஓடவும் நாணி*<br>
*செந்நிறக் கறைகளின்*<br>
*நிரந்தரக் காவிகளாய்*<br>
*முகத்தை மறுபக்கம் திருப்பி*<br>
*இமைகள் செருக*<br>
*இருளில்*<br>
*இருளாய்*<br>
*மரணித்து*<br>
*மௌனமானோம்.*

பிரகாசத்தின் பிரக்ஞை விடுவதாய் இல்லை. இருளில் இருளாய் மரணித்து மௌனமான மனம் கனவில் மீண்டும் விழித்துக்கொண்டது. பிரகாசம் ''ஏதோ ஒரு குற்ற உணர்வுக்கு ஆட்பட்டவராக மனிதர்களின் முகத்தை நிமிர்ந்து பார்க்கக் கூச்சப்பட்டார். அதைவிட அது ஒரு பயமாகக் கூட இருந்தது. ஊரில் உள்ள எல்லா மனிதர்களுக்கும் திடீரென கரியகொம்புகள் முளைத்து விட்டதாகவும் ஒருவரை ஒருவர் துரத்திக்கொண்டு ஓடுவதாகவும் வந்த கனவு திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்து அவரை அச்சமூட்டியது. (ப.25)

மரணம் என்பது நிச்சயமானது. உண்மையானது. இறுதியானது என்பதை உணர்ந்திருந்த பிரகாசம் ஓர் சடலத்திற்கு காட்டப்படும் இறுதி மரியாதையும், மனிதநேயமும், ஓர் இனத்தின் பாரம்பரியத்தை, கலாசாரத்தை, பண்பாட்டை சுட்டும் குறைந்த பட்ச அளவுகோல்கள் என்பதை மனதார அறிந்திருந்தார். மின்கம்பத்தில் அவலமாய்த் தொங்கிய அந்த முகம் அவரின் பாரம்பரிய தமிழ்ப் பண்பாட்டு உணர்வை ஆழமாகத் தாக்கியிருந்தது.

''சிகப்பு மையால் கோணல் மாணலாய் எழுதி தொங்கவிடப்பட்டை அட்டை, காரணத்தைத் சொல்லி விட்டு காற்றுக்கு ஆடிக்கொண்டிருந்தது. மக்கள் கூட்டம் மௌனமாகவே நின்று பார்த்து விட்டு மௌனமாகவே கலைந்து போயின... ஆனால் அவர் பார்த்த மரணங்களையும் இதையும் ஒப்பிட்டுப் பார்க்காமல் அவரால் இருக்க முடியவில்லை. அவர் அறிந்த காலம் தொட்டு மரணத்துக்கு அதிக மரியாதை கொடுக்கப்பட்டு வந்துள்ளதாகவும் கண்களுக்கு சந்தனம் நிரப்பி மூக்குத் துவாரத்துக்கு பஞ்சு வைத்து பெருவிரல்களை இணைத்துக்கட்டி பஞ்சு வைத்த பேழையில் வைத்து... பார்ப்பவர்கள் மனம் விகாரப்பட்டு விடக்கூடாதே என கவனப்படுத்தப் பட்டிருக்கும். ஆனால் முற்றிலும் மாறாக, அந்த விகாரமுகம் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது.'' (ப.19) மரணத்தை மதிக்காத புதிய கலாசாரத்தில் மனிதத்தைத் தேடினார் பிரகாசம். அவர் மகனின் முகத்திலும் அதைக் காணவில்லை.

மனிதத்தின் தேடல் குமார்மூர்த்தியின் தேடலுமாகிவிட்டது. 'ஹனிபாவும் எருதுகளும்' என்ற கதையில் அது தொடருகின்றது. வெள்ளையன் என்ற எருதை நேசித்த ஹனிபாவின் கதை அது. உடன் பிறப்பைப்போல் ஒரு பாசத்தை ஹனிபா வெள்ளையன் மேல் வைத்து இருந்தார். சுட்டியன் வெள்ளையனின் சோடியாக இருப்பினும் கதையின் கனம் பெரும்பாலும் வெள்ளையனின் மீதே இருந்தது. வெள்ளையனின் உயிருக்கான மரணப்போராட்டம் கதையின் கருவின் ஒரு பகுதியாக இருந்ததே இதற்கான காரணமாகும். நோயாளிக் கன்றுக்குட்டியான வெள்ளையனை கண்ணும் கருத்துமாக வளர்த்தெடுத்த ஹனிபாவிற்கு அதன் மீது பிரத்தியேக பாசம் இருந்தது.

வெள்ளையனுக்கும், சுட்டியனுக்கும் அவருக்குமிடையிலான உறவு வெறுமனே ஓர் பாச உறவல்ல. கூடவே பொருளாதார உறவு. இரு எருதுகளின் உழைப்பும் அவரையும் அவரது குடும்பத்தையும் சுயமரியாதையுடன் வாழச்செய்தது. இது ஹனிபாவுக்கும் எருதுகளுக்குமிடையே மேலும் நெருக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. வாயில் புரையோட தரையில் வீழ்ந்து கிடந்த வெள்ளையனின் தாடையைத் தடவும் ஹனிபா கண்கலங்கி போனார்.

நுரைகக்கும் வெள்ளையனைக் காப்பாற்றும் முயற்சியில் ஹனிபா பதறிக் கொண்டிருக்கும் போது துப்பாக்கி வாகனங்கள் முஸ்லிம்களை கிராமத்தை விட்டு வெளியேறச் சொல்லும் கட்டத்தில் இக்கதையின் முடிவும் முனைப்பும் எழுகின்றது. வெள்ளையன் உயிரைக்காப்பதா அல்லது குடும்பத்தைப் பாதுகாப்பதா என்ற அவரின் பிளவுபட்டமனம் இறுதியில் தனது குடும்பத்தின்பால் திரும்பியது.

''புரிந்தும் புரியாததுமாக, நடக்கக் கூடாதது நடந்து கொண்டிருக்கின்றது




என்ற பிரக்ஞை வந்ததும் அவரையும் அறியாமல் கால்கள் வீட்டை நோக்கி நடந்தன. கிட்டப்போய் வெள்ளையனைப் பார்த்தார். கண்கள் மூடிக் கொண்டு இருந்தது. காது வேகமாக ஆடிக்கொண்டிருந்தது. சுட்டியன் பக்கத்தில் நின்று நக்கிக் கொண்டிருந்தது. பெருங்குரல் எடுத்து 'ஓ' வென்று கத்தவேண்டும் போலிருந்தது அவருக்கு. அப்படியே உட்கார்ந்து விட்டார்...... எல்லோரும் போறாங்க... வாப்பா வாங்க வாப்பா என்ற இளைய மகள் அவர் கைகளைப் பிடித்து இழுத்தாள். பிட்டத்தில் ஏதோ முட்டியதும் திரும்பிப்பார்த்தார். சுட்டியன் நின்று கொண்டிருந்தது. அடக்கி வைத்திருந்ததெல்லாம் வெடித்துப்பீறிட அதன் கழுத்தைக் கட்டிக்கொண்டு விசித்து அழுதார். வீதியில் சாரி சாரியாகப் போகிறவர்கள் கூடப்பார்த்துக்கொண்டு போயினர். அவரை வலுக்கட்டாயமாக விடுவித்துக்கொண்டு நடந்தாள் அவரது இளைய மகள். கேற்று வரைக்கும் கூடவே வந்தது சுட்டியன். அவர்கள் றோட்டில் இறங்கியதும் கேற்றடியில் நின்று கொண்டு. வெள்ளையனை திரும்பிப் பார்த்தது. பின் இவர்களையும் பார்த்தது.'' (ப.35-36)

துப்பாக்கி வாகனம் வெள்ளையனை அவலமாயும், சுட்டியனை அநாதையாகவும் ஹனிபாவை அகதியுமாக்கியது. குறுநோக்குள்ள இராணுவ பயன்வழிக்கணக்கிற்குள் மனிதம் அடிபட்டுப்போனது. இவ் இராணுவ பயன் வழிக்கணக்குகள் சர்வவியாபகமானது. அது உருவாக்கும் சீரழிவையும், பேரழிவையும் நியாயப் படுத்த பல புனிதச் சொற்கள் வரலாற்றில் என்றும் துணை நின்றன. இராணுவப் புறச்சூழலில் பிரகாசம் தேடிய மனிதம் ஹனிபாவினால் வெளிப்பட்டு நின்றது. அதை வெளிப்படுத்துவதில் குமார்மூர்த்தியின் எழுத்தும் உத்வேகமாய், உறுதியாய் எழுகின்றது. அங்கு பாத்திரங்களின் கனத்தை உருவாக்குவதில் அவர்கள் மன உணர்வுகளை செம்மையாய் வெளிப்படுத்துவதில் அவரது சொல்லாமைளுமையும் வசன நேர்த்தியும் கூரிய வீச்சாய் வெளிப்படுகின்றன.

குமார்மூர்த்தியின் படைப்பு கலை கலைக்காக என்ற பரிணாமத்திலிருந்து விலகி வாசகரை சமூகம் பற்றி ஓர் சுய விமர்சனப்பார்வையை தேட சவாலிடுகின்றது. அதேவேளை ''கலை மக்களுக்காகவே'' என்ற சுலோகத்தைப் பாவித்து வாசகருக்கு கருத்தியல் புத்திமதி கூறும் சோரமும் அதில் இல்லை. அதாவது அவரது படைப்பின் தேடல் ஓர் கருத்தியல் ''அஜண்டா''வுடன் சமூகத்தை ''இப்படித்தான் பார்க்கவேண்டும்'' என வாசகரைத் தலையில் இடித்து சொல்லும் வன்மத்தைக் கொண்டிருக்கவில்லை. வாசகரின் அறிவுத் திறனையும், தேடலையும், விமர்சனப் பார்வையையும் மதிப்பதை குமார்மூர்த்தியின் எழுத்து கருத்தில் கொண்டிருந்தது. இது அவரது அடக்கத்தையும், பண்பட்ட மனத்தையும் விளக்குகின்றது. ''முகம் தேடும் மனிதனில்'' வரும் கதைகள் பாத்திரங்களினூடு பாரம்பரிய சமூக விழுமியங்களுக்கும் புதிதாகப் புகுத்தப்பட்ட இராணுவ விழுமியங்களுக்கும் இடையே ஏற்படும் தவிர்க்க முடியாத நெருக்கடியில் யதார்த்தத்தை முனைப்புடன் சுட்டுகின்றன. வாசகர்கள் தமது சமூகப்பார்வையின் வீச்சின் வளத்திற்கேற்ப அப்பரிணாமங்களைக் கிரகித்துக் கொள்கிறார்கள்.

தர்க்கம் அறிவைப் பற்றிய ஓர் தேடலில் ஈடுபடும்போது கலை, இலக்கியப்படைப்புக்கள் மனிதரின் அனுபவங்களை காட்சிகளை பார்வைகளை கோர்க்கும் ஓர் அழகியல் தேடலில் ஈடுபடுகின்றது என்பார்கள். இவ்விரு தேடலும் மனிதரின் பல்மனப் பயணங்களுக்கு உட்பட்டன. ஆகையால் இவற்றிற்கிடையே ஏற்றத்தாழ்வுபற்றிப் பேசல் அபத்தமானது. தமிழ்ச் சமூகத்தின் இன்றைய அவல அனுபவங்களையும், காட்சிகளையும் விழுமிய முறிவுகளையும் ''முகம் தேடும் மனிதன்'' காத்திரமாக எடுத்துக் காட்டினாலும் சமூக விழுமிய முறிவுகளின் தர்க்கத்தை கோர்த்து ஓர் அறிவியல் அல்லது அரசியல் ''தீர்வை''த் தர அது முற்படவில்லை. அதனைத் தனது எல்லையாக அது கருதவும் இல்லை. ஆகையால் ''அப்ப இது இப்பிரச்சினைகளுக்கு என்ன தீர்வு சொல்லுகின்றது'' என்ற நமுட்டுக்கேள்வி இங்கு தேவையற்றதாகி விடுகின்றது.

போர்க்கால மனித வடுக்களை அனுபவங்களினூடு ''முகம் தேடும் மனிதன்'' கோர்த்து நின்கின்றது. கலை இலக்கிய வடிவங்களை சித்திரிக்கும் மனித அவலங்கள் பல சந்தர்ப்பங்களில் தீர்வுகளின் அவசியத்தை வாசகனின் பக்குவத்திற்கும், தேடலுக்கும் ஏற்ப சுட்டி நிற்கும். இவரின் கதைகள் வெறுமனே கற்பனை அலங்காரங்கள் அல்ல. மூர்த்தியின் கதைகளில் வரும் பாத்திர அனுபவங்கள், எமது சமூகத்தின் பல விம்பங்கள். அதனால் அக்கதைகளை வாசிக்கும்போது நாமும் பாத்திரங்களோடு ஒன்றிப் போகின்றோம். அவற்றை செதுக்கியதும், சுட்டியதும், குமார்மூர்த்தியின் எழுத்தாளுமை. இக்கதைகள் ஒரு சமூகத்தின் இதய முனகலின் தீர்க்கமான வெளிப்பாடு. அவை பிக்காசோவின் கூற்றைப் பிரதிபலித்து நிற்கின்றன.

நேசன்

16 →

## புவியியல்..

அறிவினையும் மாணவர் மத்தியில் வளர்த்துச் செல்வது.

மற்றது, ஆராய்ச்சித் தொழிற்பாடு. இது புதிய அறிவினைத் தேடலுடன் உருவாக்கல். அதோடு தனது சமூகம் பற்றிய ஆய்வுகளில், ஆராய்ச்சிகளில் ஈடுபடுதல். ஒரு தொடர்ச்சியான ஆராய்ச்சியில் பரம்பரையினரைக் கொண்டு வருதல். அத்துடன் சர்வதேச மட்டத்தில் இத்துறை பற்றி வளரும் புதிய சிந்தனைகளுடன் பரிச்சயமேற்படுத்திக்கொள்ளல், அவற்றை எம் சொல்லாடல்களுக்குள் கொண்டு வருதல்.

இந்த ரீதியில் எமது பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் பணி எத்தகையது என்பது குறித்து நாம் இனியாவது சுட்டிக்காட்ட வேண்டும். அவர்களும் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும். வெறுமனே தமது பதவிநிலை உயர்ச்சியில் மட்டும் கவனத்தைக்குவிக்காமல் தமது ஆராய்ச்சித் தொழிற்பாட்டு ரீதியில் தங்களது கவனத்தைக் குவித்து செயற்படுத்துவதன் மூலம் தமது கற்கை நெறிகளை ஆழப்படுத்த முடியும்.

இந்தப்பின்னணியில் வைத்து பு[illegible] யல் கற்கைப்புலத்தில் வெளிவந்த

1. காலநிலையியல் - வளிமண்ட அமைப்பும், செயற்முறையும்.
2. காலநிலையியல் வளிமண்ட இயக்கமும், பிரதேச கால நிலையும் என்ற இவ்விரு நூல்களையும் விளங்கிக் கொள்ளலாம்.

இந்நூல்களை எழுதியுள்ள அன்ரனி நோபேட் கொழும்பு பல்கலைக்கழக புவியியல் துறையில் விரிவுரையாளராக உள்ளார். மார்க்கம் எனும் சமூக - பண்பாட்டு ஆய்வு இதழின் ஆசிரியராகவும், பலமொழி பெயர்ப்பு நூல்களின் தமிழ்ப் பதிப்பாசிரியராகவும் உள்ளார்.

ஒரு தமிழார்வலர் என்ற ரீதி[illegible] நோக்கும் போது, புவியிய[illegible] முழுமையாக கற்றறிந்து கொள்வதற்கு நூல்களின் போதாமையை உணர்ந்து கொண்டதன் நிமித்தத்தினால் நோபேட் இவ்விரு நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளமையையும், புவியியல் சிந்தனையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், மாணவர்களை புவியியற் கல்வியில் முனைப்புடன் ஈடுபடுத்துவதற்கும், புவியியல் கற்கை தொடர்பான தெளிவான ஆழமான அறிவு பரப்பும் பாடநூல்கள் இல்லாத ஒரு குறையை போக்குவதற்கும் நூல்கள் பயன்பட வேண்டும் என்ற திடநம்பிக்கையுடன் இந்நூல்களை நோபேட் எழுதி வெளியிட்டுள்ளமையும் பாராட்டப்பட வேண்டியது என்றே நான் கருதுகிறேன்.


பரீட்சைக்கான வினாவிடை நூலாக அல்லாமல் விடயம் பற்றிய காத்திரமான ஆய்வு நிலைப்பட்ட நுண்ணிய தன்மைகளையும் கொண்டு புவியியலை வளப்படுத்தும் வகையில் இந்நூல்களை வெளிக்கொணர அவர் கடின உழைப்பை செலுத்தியுள்ளமையை, அவற்றைப் படிக்கும் போது நாம் உணரலாம்.

இவ்விரு நூல்களும் இந்தப்பாடத்துக்கேயுரிய ஆய்வு அணுகுமுறைகளைக் கொண்டு ஆழமாகவும், தெளிவாகவும் அதோடு அண்மைக்கால சிந்தனைப் பரிச்சங்களுடன் கூடியவாறும் எழுதப்பட்டுள்ளன என்பதும் இந்நூல்களுக்கான சிறப்பம்சங்களாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## இது ஆரோக்கியமல்ல

135வது இதழில் வந்த 'பனியும் பனையும்' கட்டுரைக்கு 137வது இதழில் எதிர்வினையாக சிவசேகரம் எழுதிய கடிதம் தொடர்பாக...

என்னுடைய 18வது வயதில் முருகையனை நான் கவிஞர் இல்லையென்று சொன்னதை வைத்து இன்று 'பனியும் பனையும்...' கட்டுரை பற்றி விவாதிக்க முடியாது. இன்று நான் முருகையன் பற்றி என்ன கருத்துக் கொண்டுள்ளேன் என்பதே முக்கியம். இதே குதர்க்கத்தைப்பயன்படுத்தினால், சிவசேகரம் இன்று எந்த ஈழத் தமிழர் அரசியல் விவாதங்களிலும் ஈடுபட அருகதையற்றவர் ஆகிவிடுவார். ஏனெனில், 1982ல் ஈழத்தமிழர் ஒரு தேசிய இனம் என்ற கருத்தை ஏற்க மறுத்தவர் இந்த சிவசேகரம். (ஆனால், இன்று அவர்தான் அவ்விதம் கருத்துக்கொண்டிருந்தது தவறு என்று ஒத்துக்கொண்டிருக்கிறார். இதுதான் முக்கியம்.)

பொன்னுத்துரை மீது நான் கை வைத்ததாகவும் விமர்சன நோக்கை விட, குட்டுப்போடும் அவசர மிகுதியே உண்டென்றும் எழுதுகிறார் சிவசேகரம். எஸ்.பொ. வின் தனிப்பட்ட வாழ்வை விட்டாலும் அவரது இலக்கிய வாழ்வு மகா மோசடிகள் நிறைந்தது. மருதூர்க் கொத்தனின் கதையை தனது பெயரில் போட்டது முதன்மையானது. 'அவா' தொகுப்பிலுள்ள "Adiey" என்ற சிறு கதையை உண்மையில் எழுதியவர் சிவசேகரத்தின் நண்பரும் சிட்னியில் வசிக்கும் கட்டிடக்கலைஞருமான அ. சந்திரகாசன். அக்கதையில் குறிப்பிட்டளவு மாற்றங்களைச் செய்து தனது தொகுப்பில் சந்திரகாசனுக்கே தெரியாமல் அவா தொகுப்பில் சேர்த்தார் எஸ்.பொ. சந்திரகாசனும் எஸ்.பொவும் சிட்னியில் நெருங்கிப் பழகுவது பற்றிக்கேள்விப்பட்ட சிவசேகரம் சந்திரகாசனுக்கு இந்த கூடா நட்பின் தீயவிளைவுகள் பற்றி எச்சரித்து ஒரு கடிதமும் லண்டனிலிருந்து எழுதியுள்ளார். (தனிப்பட்ட உரையாடல்களின்போது சந்திரகாசன் எனக்குச் சொன்னவை இவை.) இதே எஸ்.பொவை குருபக்தியுடனும், பவ்வியத்துடனும் விமர்சிக்க வேண்டுமென்றா சிவசேகரம் கருதுகிறார்.

எனது கட்டுரையைப் போட சரிநிகர் அலுவலகத்தில் குப்பைக் கூடை இல்லையா என்கிறார். காந்தி குண்டுசியை எடுத்துக்கொண்டு கடிதமொன்றைக் குப்பைக்கூடைக்குள் போட்டதைப்போன்றது தான் எஸ்.வி. ஆரின் கட்டுரையும் என்கிறார்.

இவ்வாறாக விவாத விடயத்துக்கு வெளியேவந்தே 'விவாதங்கள்' செய்கிறார்கள் இன்றைய தமிழ்ச்சூழலில். சிவசேகரத்தின் விவாதங்களில் இந்தக் குதர்க்கங்களே அதிகம். ஆரோக்கியமான விவாதம் செய்யும் சந்தர்ப்பங்களை இன்வ குழி தோண்டிப் புதைக்கின்றன. நம்முடைய படைப்பு சக்தியை வீணாக்கிக் கொள்கிறோம். இவை நமக்கும் மாற்றுக்கருத்துள்ளோரைத் துரோகி என்ற என்கிற கூட்டணியினருக்கும் புலிகளுக்கும் வித்தியாசமில்லாமல் செய்து விடுகின்றன. (எஸ்.வி.ராஜதுரையும் அண்மைக்காலச் சில விவாதங்களில் இவ்விதம் கீழிறங்கிச் சென்றுவிட்டதாகவே படுகிறது.)

சிவசேகரம் மாதிரி கேலியும் குத்தலும் கிண்டலும் நிரம்ப ஒரு பதிலை யாராலும் எழுத முடியும். ஆனால் அவை ஆரோக்கியமான விவாதங்களுக்கு உதவாது.

**நட்சத்திரன் செவ்விந்தியன்**
*சிட்னி*

## கல்விப் பணிப்பாளர் புலி பிடிக்கிறார்

யாழ்ப்பாணத்திலிருந்து வருடாந்த இடமாற்றம் கேட்டு விண்ணப்பித்தோரில் 84 பேருக்கு இடமாற்றங்களை வழங்குமாறு வட-கிழக்கு கல்வியமைச்சும், வடகிழக்கு அரசினர் சேவை ஆணைக்குழுவும் ஒப்புதல் அளித்ததும் மேல் மாகாண கல்விப்பணிப்பாளர் இவர்களை மேல் மாகாணத்தில் சேவையில் அமர்த்தப் பின்நிற்கிறாராம். புலிகள் இவர்களூடாக ஊருடுவலாம் என்பதே அவர் தெரிவித்த காரணம்.

இவ்விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் மேல் மாகாண முதலமைச்சரை இருமுறை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியது. மேல் மாகாணத்தில் 400 தமிழ் ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. எனவே அவர்களைச் சேவையில் அமர்த்த முடியும் என முதலமைச்சர் தெரிவித்த போதும் கல்விப் பணிப்பாளரின் புலிபிடிக்கும் நடவடிக்கையால் இன்னமும் இடமாற்றம் வழங்கப்படவில்லை.

## நாங்கள் விற்கவில்லை

சரிநிகர் இதழ் 140இல் இரண்டாவது பக்கத்தில் யாழ் செய்திகள் என்ற தலைப்பில் வெளியான செய்திகளில் ஒன்றில் பூபாலசிங்கம் புத்தகசாலையில் தேசியக்கொடி விற்பனையாகிறது வாங்கிக் கட்டுங்கள் என இராணுவத்தினர் கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எமது பூபாலசிங்கம் புத்தகசாலையில் அவ்வாறு தேசியக் கொடி எதுவும் விற்பனை செய்யப்படவில்லையென்பதை அறியத்தருகிறோம்.

**ப. ஸ்ரீதர்சிங்**
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
**கொழும்பு**

## தவறு மக்கள் மேல் அல்ல

சரிநிகர் 135ம் இதழில் வ.ஐ.சவின் கவிதை கண்டேன். யாழ். முஸ்லிம்களின் வெளியேற்றம் பற்றிய நினைவுகளோடு இன்றைய அவர்களின் தாயகம் திரும்பல் பற்றி எழுதப்பட்டிருந்த அக்கவிதையில் கவிஞர் புதுவை இரத்தினதுரைக்கு புதியதோர் போட்டியா என எண்ணத் தோன்றுவதைத் தவிர்க்க முடியவில்லை. ஆனாலும் பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டிவிடும் வண்ணத்தில் புதுவையையும் மிஞ்சிவிடுவது தெரிகிறது. ஏனிந்த இரட்டை நிலைப்பாடு வ.ஐ.சவிற்கு. பேசாமல் முஸ்லிம்களைப் பற்றி பேசாமல் விட்டுவிடுவது ஒன்றும் குடிமுழுகிப்போய்விடாதே. காரணம் முஸ்லிம் - தமிழ் இன ஒற்றுமை என்பது ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள எத்தனையோ சமூக சேவையாளர்களாலும், பொது நலவிரும்பிகளாலும் சாதாரண பொது மக்களாலும் நாளும் பொழுதும் முன்னெடுக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் நிறுவனமயமாக்கப்பட்ட ஒழுங்குகளும், பிரச்சார வசதிகளும், மர்பு ரீதியான அங்கீகரிப்பும் கைகொடுத்த நிலையில் அவர்களையெல்லாம் விட வ.ஐ.ச சற்று வெளிப்பட்டு நிற்கிறார்.

*எங்கள் ஈழத்தமிழ் மண் கிழிந்து*
*புண்பட உம்மை பிய்த் தெறிந்தனரே*
*வழி தவறி எமது பிள்ளைகள்.*

என கவிஞர் வடிக்கும் கண்ணீர் வெறும் நீலிக்கண்ணீரா என சந்தேகப்பட வைக்கிறது. தொடர்ந்து அவர் எழுதும் வரிகள் அந்தக்கொடூரமான மடமைமிகு முடிவினால், ஒக்டோபர் 1990 அன்று இரவோடிரவாக கட்டிய துணியுடன் ஆநிரைக் கூட்டம் போல் அடித்து விரட்டப்பட்ட ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் மீது கவிஞருக்கு உண்மையான அனுதாபமிருந்தால் அக்கொடுமைக்குக் காரணமானவர்களை ''வழி தவறிய எமது பிள்ளைகள்'' என குழை குழையென குழைந்து வழிய வேண்டிய அவசியந்தானென்ன? ஆனாலும் அது அவரது அரசியலுரிமை. தம்பிகளென்றோ, தங்கக்கம்பிகளென்றோ அழைத்துக்கொள்ளட்டும்.

ஓர் தனித்துவமான இனம்மீது தம் மேலாதிக்கக் (Fascism) கரங்களைத் திணித்தவர்களை கேவலம் ''புலிகள்'' என்று அழைக்கக்கூட தயங்கும் நிலைதான் உள்ளது என ஒப்புக்கொள்ளும் கவிஞர், ஏன் தான் (பரிஸ்) 23வது இலக்கியச் சந்திப்பில் அவர்கள் திருந்தி வருகிறார்கள், கொஞ்சம் புரிந்து கொள்ளுங்களேன் என புலிகளுக்காக ஒப்பாரி வைத்தார் என்பதைத்தான் புரிய கஷ்டமாயுள்ளது.

யாழ் முஸ்லிம்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடூரங்களுக்கெல்லாம் காரணமான புலிகளை முக்காடு போட்டு மூடி வைத்துவிட்டு தமிழ் மக்களை நோக்கி குற்றப்பத்திரிகை நீட்டுகிறார் கவிஞர். ஏதோ யாழ் தமிழ் மக்கள்தான் இவற்றையெல்லாம் செய்ததாய். கவிஞருக்கு வாய் கூசவில்லையா? இப்படி அநியாய பழிசுமத்த மக்களை நோக்கி.

*உங்கள் வீட்டையே*
*திருடிக்கொண்டோம்.*
*உங்கள் பிள்ளைகளின் உணவைப்*
*புசித்தோம்.*
*உங்கள் தொழுகைப் பாயில்*
*புணர்ந்தோம்*
*மீசான் கட்டையில் அடுப்பு*
*மூட்டினோம்*
*எச்சில் கைகளைத் துடைப்பதற்காக*
*உங்கள் புனித நூல்களைக்*
*கிழித்தோம்.*

மக்களின் சார்பில் பாவ மன்னிப்புக்கோரும் கவிஞரே; ஏனய்யா எந்த மக்களா இந்தக் கொடுமைகளைச் செய்தனர்? புலிகட்குத் துணையாக பொது மக்களை அழைக்கின்றீரே? எந்த மக்கள் புனித நூலை எரித்தனர்? எந்த மக்கள் தொழுகைப் பாயில் புணர்ந்தனர்? எந்த மக்களும் அரசியல் பேசுவதுமல்ல, இனவாதியாய் பிறப்பதுமல்ல, அதிகாரம் மிக்க அரசியல் தலைமைகளும், அதன் பிரச்சார ஊதுகுழல்களுமே மக்கள் மீது அரசியல் சாயம் பூசி அரசியல் பேச வைக்கின்றனர். புலிகள் மட்டும அல்ல முழுத்தமிழர்களுமே மேலாதிக்க சிந்தனை மிகுந்த அடங்காத் தமிழர்கள்தான் என நீர் நிரூபிக்க முயல்வதையும் அவ்வகையில் தான் நோக்க முடிகிறது.

ஏன் வேலணைத்தீவு வெள்ளைமணல் கடற்கரை பள்ளிவாசல் கதை தெரியாதா? இன்றுவரை அது பராமரிக்கப்பட்டு தொடர்ந்து விளக்கேற்றப் பட்டு வரக் காரணமான சிங்கம் போன்ற சாதாரண ஓர் தமிழ் மகனின் கதை கேள்விப்படவில்லையா? யாழ் முஸ்லிம் மக்களின் தாயகம் மீளல் தொடங்கவிருக்கும் இந்நல்ல தருணத்தில் முஸ்லிம் - தமிழ் நல்லுறவில் விரிசல் ஏற்படவே உமது கவிதை பயன்படப்போகிறது என்ற பயம் எமக்கு ஏற்படுகிறது.

கவிதை எழுதத்தெரிந்தால் மட்டும் கவிஞனல்ல! இதயத்தில் சுத்தியும் எழுத்திலே நேர்மையும் தொடர்ந்திருந்தால் மட்டுமே கவிஞர்.

**எம்.ஆர்.ஸ்ராலின்**
*பரிஸ்*

## இனி செய்யக்..

எனினும் முஸ்லிம் தலைமைகள் பழியைப்பிறர் மீது போடுவதில் அடையப்போகும் பயன் ஒன்றுமில்லை. கடுமையான சுயவிமர்சனம் ஒன்றே எஞ்சியுள்ள ஒரே படகு. முற்றாக இருள்வதற்கு முன்னம் மறுகரை சேர்ந்தாக வேண்டும்.

வடகிழக்கு மாகாணத்தில் சிதறிய தத்தமது ஊர்ப்பொந்துகளும், கொழும்பும் கண்டியும் மட்டுமே உலகம் என வாழ்ந்து வந்த முஸ்லிம்களை வெளியில் இழுத்துவந்து ஒரு தேசிய இனமாக ஒருங்கிணைத்த மகத்தான பணியை செய்து வடகிழக்கு முஸ்லிம் மக்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுத்தது எம்.எச்.எம். அஷ்ரஃப்பின் தலைமையும், முஸ்லிம் காங்கிரசும்தான் என்பதை இந்த நெருக்கடியான காலகட்டத்தில் மறந்து விடமுடியாது. எனினும் அவர்களது தவறுகள் பாரியவை. உடனடி சுயவிமர்சனத்துக்கும் செம்மைப் படுத்தலுக்கும் உரியவை.

வடகிழக்கு மாகாண முஸ்லிம் அலகுகள் என்ற சரியான கொள்கையில் இருந்து தென்கிழக்கு மாகாணம் பற்றிய தடுமாற்றம் ஏற்பட்டதில் அம்பாறை மைய வாதத்தின் ஆபத்து ஆரம்பமாகியுள்ளது.

அம்பாறை தேர்தல் தொகுதியை விட்டுக்கொடுத்தல் என்கிற அடிப்படையில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் முஸ்லிம் மக்களது ஆயிரம் சதுர கிலோ மீட்டருக்கும் அதிகமான பாரம்பரிய நிலத்தைத் தாரை வார்த்தல் என்ற அம்சத்திலாகட்டும். அம்பாறை மையப்பட்டு முஸ்லிம் தேசத்தையும் தமிழ்த் தேசத்தின் அம்பாறை மாவட்ட அலகுகளையும் உடைப்பதிலாகட்டும். இக்கோரிக்கை நீதியற்றது. தீவிர தமிழ்த் தேசிய சக்திகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை தவிர்க்க முடியாத அவசியமாகும் போது சிங்கள அரசுகளாலும் கட்சிகளாலும் நிச்சயமாகவே நிராகரிக்கப்படப் போவது.

இதைவிட ஆபத்தான அம்சம் முஸ்லிம் மக்கள் மத்தியில் இக்கோரிக்கை ஏற்படுத்தியுள்ள அச்சங்களாகும். வடகிழக்கு முஸ்லிம் மக்களை அவர்களது ஊர்ப்பிரதேச பொந்துகளிலிருந்து வெளியே கொண்டு வந்து அவர்களை ஒரு தேசிய இனமாக ஒருகிணைத்த முஸ்லிம் காங்கிரசும் அதன் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்களும் தாமே கட்டியெழுப்பிய தேசிய இன நிர்மாணத்தை சீர்குலைப்பது அதிர்ச்சி தருகிறது. இது ஏற்கெனவே வடபகுதி முஸ்லிம்களை கிழக்கு மாகாண முஸ்லிம்களிடமிருந்து பிளவுபடுத்தியுள்ளது. இந்த பிளவும் பின்னடைவும் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் அலகுகளிலும் தொற்றிக் கொள்கிற ஆபத்து தீவிரமாகி வருகிறது.

இத்தகைய சூழலில் தமிழர் தலைமை வரலாற்று பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியது அவசியம். முஸ்லிம்களை அலகு-அலகுளாகப் பிரித்து கையாளுகிற சந்தர்ப்பவாத அரசியலை அவர்கள் தொடரக் கூடாது. இது எப்போது யார் யார் பலமாக இருக்கிறார்களோ அப்போது அவர்களிடம் சரணடைவது என்ற சந்தர்ப்பவாத சகதிக்குள் வடகிழக்கு முஸ்லிம் மக்களை இடறி விழுத்துகிற அரசியலாகும். இது உண்மையான தமிழ் முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்பும் முயற்சிக்கு எதிரான அரசியலுமாகும். 1985களிலும் 1990களிலும் இருசாராரும் கைகளைக் கட்டிக் கொண்ட பாதை இது. இதுவே தமிழர்களது போராட்டத்தை மிக மோசமாகப் பின்னடைய வைத்த ஆபத்துமாகும்.

நடைபெறும் குருசேஷ்த்திரப் போர்க்களத்தில் முஸ்லிம் தேசிய இன தலைமைத்துவமே உனது தடுமாற்றங்களைக் களைந்து எறி, உறையிலிருந்து உனது உடைவாளை வெளியில் எடுக்கக்கூடிய கடைசித்தருணம் இதுதான்.

தென் இலங்கை முஸ்லிம்களுக்கு ஒரு கரை அரசியல் இனி சாத்தியமில்லை. அவர்களது அரசியல் சிங்கள மக்களது அரசியலையும் மலையக தமிழர்களது அரசியலையும் இரு கரைகளாகக் கொண்டு மட்டுமே இனி முன்செல்ல முடியும். வடகிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியல் ஸ்தாபன தோல்விகளல்ல வெற்றிகளும் பலமும் மட்டுமே தென் இலங்கை முஸ்லிம்களின் பலமாகவும் அமையும்.

காதலில் சுற்றிப்புணரும் பாம்புகளைப்போல பின்னிப்பிணைந்து அமைந்துள்ளது தமிழ் தேசமும் முஸ்லிம்களது தேசமும். இவற்றின் சரிநிகர் சமத்துவமும், ஐக்கியமும் மட்டுமே இரண்டு தேசங்களின் வெற்றியும் வாழ்வுமாகும்.

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka.

# பத்திரிகையாளரை விரட்டும் சட்டமா அதிபர் !

ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன், தமக்கு எதிராக திட்டமிட்ட வகையில் தம்மை அவமானப்படுத்தும் நோக்குடன் சட்ட மா அதிபர் அவர்களால் தமக்கெதிராக பல குற்றவியல் மானநஷ்ட வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார். கொழும்பு மீயுயர் நீதிமன்றத்தில், தம்மீது சட்டமா அதிபர் செய்துள்ள இந்த நடவடிக்கைகள் தமது தொழிலை செய்ய விடாது தடுக்கும் பாரதூரமான ஒரு அடிப்படை உரிமை மீறல் பிரச்சினையாகும் என்று குறிப்பிட்டு அவர் தொடுத்துள்ள வழக்கொன்றிலேயே இக்குற்றச்சாட்டை அவர் முன் வைத்துள்ளார்.



விக்டர் ஐவன்

தம்மீது தொடுக்கப்பட்ட வழக்குகள் அனைத்தும் எழுந்த மானவையாக தொடுக்கப் பட்டவையாகவும், உள்நோக்கம் கொண்டவையாகவும், குற்றவியல் வழக்கொன்றை தாக்கல் செய்வதற்கு அவசியமான தகவல்கள் எதையும் ஆராயாமல் செய்யப் பட்டவையாகவும் உள்ளன என்றும், பத்திரிகையாளர்களுக்கு அரசியலமைப்புச் சட்டமூலமாக வழங்கப் பட்டுள்ள உத்தரவாதங்களையும் பொருட்படுத்தாமல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தமது வழக்கு முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். சட்டமா அதிபரின் இந்த நடவடிக்கைகள் மிகவும் பாரதூரமானவையாகும். பத்திரிகையாளர்களை தமது சட்டபூர்மான கடமையில் ஈடுபட விடாது தடைசெய்யும், அவர்களது பேச்சு எழுத்து மற்றும் வெளிப் பாட்டுச் சுதந்திரத்தை மறுதலிக்கும் நடவடிக்கையாகும் என்றும், இவை வெளிப்படையான அடிப்படை உரிமை மீறல்கள் என்றும் அவர் தமது வழக்குரை முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இரகசியப் பொலிசார்களால், பத்திரிகையில் வெளியான பல்வேறு விடயங்கள் தொடர்பாக தாம் விசாரிக்கப்பட்டாரென்றும், இதற்காகத் தாம் பெருமளவு நேரத்தை நீதிமன்றத்தில் செலவளிக்க வேண்டியிருந்தது என்றும் அவர் தெரிவித்தார். இவையெல்லாம் தனிப்பட்ட ரீதியில் தன்னை துன்புறுத்துவதற்காக செய்யப்பட்டவைகளே என்றும் அவர் குறிப்பிட்டார்.

ராவய பத்திரிகையில் வெளியான திவிலுப்பிட்டிய கடத்தல் வழக்கு, பிரபலமான கால்டன் கசினோ விவகாரம் (இந்த விவகாரத்தில் தான் பாதுகாப்பு அமைச்சரின் மகன் சம்பந்தப்பட்டிருந்தார்). உதவி அரசு தரப்பு வழக்கறிஞர் ஒருவரின் நடத்தை தொடர்பான விசாரணை என்பவை குறித்த கட்டுரைகள் சட்ட மா அதிபரையும், அவரது திணைக்களத்தின் நடத்தைகள் பற்றியும் கேள்விகளை எழுப்பியிருந்தன.

சட்ட மா அதிபரால் இறுதியாக விக்டர் ஐவன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு முன்னை நாள் மீன்பிடித்துறை அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தொடர்பான ஒரு கட்டுரை தொடர்பானதாக அமைந்துள்ளது. இந்த அமைச்சர், தமது மகனுக்குச் சொந்தமான கம்பனி ஒன்றிற்கு முறையற்ற விதத்தில் கொந்தராத்து ஒன்றை வழங்கியதன் மூலம் அமைச்சிற்கு பொருளாதார நஷ்டம் ஏற்படக் காரணமாக இருந்தார் என்றும், அந்தக்கட்டுரை சுட்டிக்காட்டியிருந்தது. இக்கட்டுரையில், அமைச்சருக்கு சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவரே சட்ட ஆலோசகராக இருந்தார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இக்கட்டுரை கட்காக சட்ட மா அதிபர் திணைக்களம் இவர் மீது குற்றவியல் மான நஷ்ட வழக்குத் தொடுத்துள்ளதை எதிர்த்தே மீயுயர் நிதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்கட்கு இந்த அரசாங்கத்தின் கீழ் என்ன நடக்கிறது என்பது ஒன்றும் தெரியாததல்ல.

1994ல் இதே அரசாங்கம் பதவிக்கு வந்த பின் பத்திரிகையாளர்கள் மீது நடாத்தி வந்த தாக்குதல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. உலகத்தில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை மோசமாக நசுக்கும் நாடுகளில் இலங்கைக்கு நான்காவது இடம் கிடைத்திருப்பது இந்தச் சிறப்பை நன்கு விளக்கும்.

இந்த அரசாங்கம் முன்னைய அரசுகளைப்போல் அடிதடி தாக்குதல் மிரட்டல்களுடன் தன்னை கட்டுப் படுத்திக் கொள்ளாமல் குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குகளும் தொடுத்துள்ளது.

நாகரிகமான எந்த நாடும், அடிப்படை உரிமைகளை மதிக்கும் எந்த அரசாங்கமும் பத்திரிகையாளர்கட்கு எதிராக குற்றவியல் சட்டத்தை பிரயோகிப்பதில்லை.

ஆயினும், இந்த அரசாங்கம் அதைப் பிரயோகிக்கிறது! சண்டே ரைம்ஸ் ஆசிரியர் சிங்கரணதுங்க, லக்பிம ஆசிரியர் பந்துல பத்மகுமார ஆகியோர் மீதான அரசாங்கத்தின் வழக்குகள் நாடறிந்தவை. இப்போது அரசாங்கத்தின் இலக்கு, விக்டர் ஐவன். நியாயம் கேட்பவர்கள் முகத்தில் அடிப்பதுதான் சந்திரிகா அரசாங்க ஜனநாயகம். அதற்கு விக்டர் ஐவன் மட்டும் விதிவிலக்காகி விட முடியுமா என்ன?

## வவுனியா..

அல்லது பேசவராத பொறுப்பாளர்களின் கீழத்தரமான கேள்விகளுக்கெல்லாம் அவர்கள் பொறுமையாகப் பதில் சொல்லியாக வேண்டும். அதுமட்டுமல்லாமல் அவர்கள் குறிப்பிடுகின்ற தொகைப்பணத்தைக் குறிப்பிடுகின்ற காலக்கெடுவுக்குள் கொடுத்தாக வேண்டும். இல்லையேல் எதுவும் நடக்கலாம்.

இது போன்ற தொல்லைகள், நெருக்கடிகள் காரணமாக பல வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளைச் சுருக்கிக் கொண்டு விட்டார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து வவுனியாவில் தஞ்சமடைந்திருந்த பல வர்த்தகர்கள் நாலு காசு புரட்டி நாலு இடங்களில் கடன்பட்டுப்புதிதாக ஆரம்பித்த வியாபார நிலையங்களுக்குச் செல்கின்ற ஆயுதக் குழுவினர் கேட்கின்ற பொருட்களைக் கொடுக்க வேண்டும். அதற்கான பணக்கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது. கடனாகப் பெற்றுச் செல்கின்ற பொருட்களுக்கான பணமும் வந்து சேரமாட்டாது. இந்த நிலைமையில் பலர் மனம் நொந்து வியாபார முயற்சிகளைக் கைவிட்டு விட்டு யாழ்ப்பாணத்திற்குக் கப்பலேறுகின்றமையும் நடந்து கொண்டிருக்கின்றது.

வவுனியாவைச் சொந்த இடமாகக் கொண்ட முக்கியமான சில புள்ளிகள் பலர் வீண் தொல்லைகள் வேண்டாம் என்ற எண்ணத்தில் தமது வியாபாரச் செயற்பாடுகளைச் சுருக்கி வருகின்றார்கள். இதனால் வவுனியாவின் பொருளாதாரம் திட்டமிட்ட முறையில் ஒடுக்கப்பட்டு வருவதுடன், எதிர்காலத்தில் மிக மோசமானதொரு வேலையில்லாத் திண்டாட்டத் திற்கும் வழி வகுக்கப்படுகின்றது.

சுருக்கமாகச் சொல்வதானால், மிக மோசமானதொரு சமூக அழிவிற்கு வவுனியா ஆளாகியுள்ளது. இவ்வாறான நிலைமையைப் போக்குவதற்கு யார் நடவடிக்கை எடுக்கப்போகின்றார்கள். அது எவ்வளவு தூரத்திற்கு சாத்தியமானது என்பது குறித்துத் தெளிவாகக் கூற முடியாது. ஆனால், இத்தகைய நிலைமைகள் வடகிழக்கில் உள்ள வேறு தமிழ்ப் பகுதிகளில் ஏற்பட்டு விடாமல் தடுப்பதற்குரிய முயற்சிகளைப் பலரும் மேற்கொள்ள முன்வர வேண்டும். இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறியுள்ள மக்கள் மிகவும் நிதானமாகவும் சரியாகவும் இப்போது தொடக்கமே நடந்து கொள்வது ஆரோக்கியமானதாக இருக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இருக்க முடியாது.

## ஈராக்...

மாறி விடும் என்பதற்கில்லை.

அமெரிக்காவின் புதிய உலக ஒழுங்கு என்ற கோட்பாட்டினை எதிர்த்து நிற்கும் ஒரு பலமான நாடாக ஈராக் இருக்கும் வரை இது தொடரவே செய்யும். தனது உலகப் பொலிஸ்கார அந்தஸ்துக்கு சவா-லாக அது இருப்பதை அமெரிக்கா பொறுத்துக்கொண்டு இருக்கப் போவதில்லை.

ஆக, இந்த நிலையில், யுத்தம-ற்ற ஒரு சூழ்நிலை உருவாக, இரண்டே இரண்டு வழிகள் தான் உண்டு.

ஒன்று, ஈராக் உலக மக்களை தன்னை நோக்கித் திருப்பும் முயற்சி-யில் மேலும் வெற்றிபெற தன்னை ஜனநாயகமயப்படுத்த தயாராக இருக்க வேண்டும். இதன் மூலம் அமெரிக்காவுக்கு எதிரான ஒரு உலக ஒழுங்கை உருவாக்குவதில் இறங்க வேண்டும். அதன் மூலம் அமெரிக்காவின் மேலாதிக்கப் போக்கை தடுத்து நிறுத்தும் உலக மக்களின் பலமிக்க ஆதரவை வென்றெடுக்க வேண்டும்.

அல்லது அமெரிக்காவுக்கு அடிபணிந்து போக வேண்டும்.

சதாம் அரசாங்கம் எதனைச் செய்யப் போகிறது என்பதில் தான் ஈராக்கின் எதிர்காலம் தங்கியிருக்-கிறது.

## பொ.ஐ.மு...

- அரசாங்கம் இவ்வாறு கைது செய்யப்பட்டு காணாமற்போகிறவர்களுக்கு வகைகூற வேண்டிய அவசியமில்லை.
- இராணுவ வசதிக்கேற்ப மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தல். (குறைந்தளவு இராணுவ வசதியைக் கொண்டு கூடியளவு மக்களைக் கட்டியாள்தல்)
- இவ்வாறான ஒரு நிலையில் உளவியல் ரீதியாக மனதில் தாக்கம் ஏற்பட்டு சிதறிக் கிடக்கும் இளைஞர்களை துணைப்படைக்கு சேர்த்துக்கொள்ளல். இதன் மூலம் இராணுவ பக்கபலத்தைக் கூட்டல்.

மட்டக்களப்பில் வெள்ளை வேன் ஆட்கடத்தல், மர்மக் கதைகள் தொடர்பாக பல தடவைகளில் பாராளுமன்றம் வரை எடுத்துச் சென்ற நமது அரசியல்வாதிகள் களைத்துப்போன நிலைமையில் கைவிட்டுவிட்டார்கள்.

## அஷ்ரஃப்..

அண்மையில் 'நவமணி' பத்திரிகையாளரை நோக்கி கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன 'பத்திரிகைக்காரர்களெல்லாம் பொய்யர்கள்' என்று தெரிவித்திருப்பதும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது

'எதிர்க்கட்சிக்காரர்களது செய்திகளை முக்கியப்படுத்தி பிரசுரிப்பதில்லை' என்பது அரச ஊடகங்களின் பொது விதிதான். ஆனால் அஷ்ரஃப் எதிர்க்கட்சிக்காரரா? இல்லை ஆளும் கட்சிக் கூட்டணிக்குள் பெரும்பான்மை முன்னணியை சேர்ந்தவரான பௌஸியின் எதிர்க்கட்சியாக அஷ்ரஃப் உருவெடுத்து வருகிறார் என்பதன் பரிமாணமே இது அத்துடன் மோதலின் வரலாற்றுத் தொடர்ச்சியின் ஒரு கட்டம் என்றும் சொல்லலாம்.

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் 'அரசியல் வாதிகள் பத்திரிகைகளில் தங்கியிருக்கக் கூடாது. மக்களுடன் தொடர்புற்றிருக்க வேண்டும்-'' என்று கூறியுள்ளார்.

அஷ்ரஃப்புக்கும் - பௌஸிக்கும் இடையிலான பிரச்சினையே இந்த 'தங்கியிருத்தலே தானோ?'

*சண்டே டைம்ஸ் உதவியுடன்*
*பாதுஷா*

## மார்ச்-8 சர்வதேச பெண்கள் தினம்

**பாதிக்கப்பட்ட பெண்கள் நிறுவனம்**
சுவரொட்டிக் கண்காட்சி
இடம்:
சாகாமம் வீதி, அக்கரைப்பற்று.

**அரசு சார்பற்ற பெண்கள் நிறுவனங்களின் கூட்டு**
'பெண்களின் படைப்புத்திறன்'
ஓவியக் கண்காட்சி
மார்ச்-26, 27, 28
கலாபவனம்
கொழும்பு.

**பெண்கள் அபிவிருத்தி நிறுவனம்**
(தேவசரணவுடன் கூட்டுடன்)
'உலகில் வாழும் பெண்களுக்கு எமது நேசக்கரம்'
கருத்தரங்கு,
புகைப்படக்கண்காட்சி
வீதிநாடகம்,பேச்சுப்போட்டி,கட்டுரைப்போட்டி
குருநாகல் நகரசபை மண்டபத்தில்

**ஊவா சமூக அபிவிருத்தி நிலையம்-பதுளை**
(பெண்கள்நிறுவனம்,சட்ட மற்றும்சமூகநிறுவனம்இணைந்து)
ஊர்வலம்
அலுவலகத்திலிருந்து கருத்தர
பி.ப. -1.00 க்கு
சைமன் பீரிஸ் மண்டபம்
'அவள் போராடுகிறாள்'
நிமல்கா பெர்னாண்டோ
பண்டாரமெனிக்கே
சிங்கள, தமிழ் கலாசார நிகழ்ச்சிகள்

**கருத்தரங்கு**
இடம்: பெண்கள்கல்வி ஆய்வுநிறுவனம்
ஏற்பாடு: வி'பவி
சூரியகுமாரி
'பெண் உரிமைகளும்மனித உரிமைகளும்'
சுனேத்திரா ராஜகருணாநாயக்க
பெண்களும் யுத்தமும்
அனோமா ராஜகருணாநாயக்க
'பெண் உரிமைகளும் தொடர்பூடகங்களும்'
நெறிப்படுத்துகை
சதா விவேகானந்தன்

**கறுப்புக்கொடி எதிர்ப்பு**
மு.ப. 10.00க்கு
கோட்டை புகையிரத நிலையத்தின் முன்னால்
ஏற்பாடு:
ஜூலை வேலைநிறுத்தப் போராளிகளின் கூட்டமைப்பு

**ஜே.வி.பி (மக்கள் விடுதலை முன்னணி)**
'மரபுரிமை மறுக்கப்பட்டவள்'
மார்ச்-6, 7 கண்காட்சி
8ஆம் திகதி
கருத்தரங்கு
சோஷலிச மகளிர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர்
திமுது ஆட்டிகல
செயலாளர்-ம.வி.மு.
டில்வின் சில்வா

**பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்**
ஏற்பாட்டில்
சிங்கள, தமிழ், ஆங்கில நாடகங்கள்
இடம் சென் போல், மிலாகிரிய
மார்ச் 6
2.30 க்கு

**இனோக்கா மீதான வல்லுறவு**
குறித்தபோராட்டத்திற்கு ஆதரவு வழங்கியவர்களை கௌரவிக்கும்நிகழ்ச்சி,
கருத்தரங்கு
மகாவலி கேந்திர நிலையம்
மார்ச் 18ம் திகதி 3.00க்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்